பக்கங்கள்: 20 விலை:20 ரூபா

# காலைக்கதிர்
Kalaikkathir

விடியல் 02 | வள்ளுவர் ஆண்டு 2048 | கார்த்திகை 21 | வியாழக்கிழமை 07.12.2017 | கதிர் 32

## கோட்டாவை கைது செய்ய தடை நீடிப்பு

கொழும்பு, டிசெ .07
பொதுவுடைமைகள் சட்டத்தின் கீழ் கைது செய்வதைத் தடுக்கக் கோரி முன்னாள் பாதுகாப்புச் செயலாளர் கோட்டாபய ராஜபக்ஷ தாக்கல் செய்த மனு பக்கம் 18

# தமிழரசு – ரெலோ லடாய்க்குத் தீர்வு!

## சுமந்திரன் - செல்வம் நேற்று விரிவாகப் பேசித் தீர்மானம்





யாழ்ப்பாணம், டிசெம்பர். 07
உள்ளூராட்சி தேர்தல் பங்கீடு தொடர்பாக இலங்கைத் தமிழரசுக் கட்சிக்கும் தமிழீழ விடுதலை இயக்கத்துக்கும் (ரெலோவுக்கும்) இடையில் நேற்று முன்தினம் வெடித்த முரண்பாடுக்கு இணக்கத் தீர்வு காணும் வழிவகைகள் எட்டப்பட்டிருக்கின்றன.

ரெலோ தலைவர் செல்வம் அடைக்கலநாதன் எம்.பியும், தமிழரசுக் கட்சியின் துணைச் செயலாளர் எம்.ஏ.சுமந்திரன் எம்.பியும் நேற்று மாலை சுமார் இரண்டு மணிநேரம் பேசி இப்பிரச்சினையைச் சுமுகமாகத் தீர்ப்பதற்கான வழிவகைகளைக் கண்டறிந்திருக்கின்றனர். பக்கம் 18

## புளொட்டின் முடிவு மத்திய குழுவிடம்

### தனித்து நிற்கமாட்டோம் என்கிறார் சித்தார்த்தன்

யாழ்ப்பாணம், டிசெ. 07
உள்ளூராட்சித் தேர்தலில் தமிழரசுக் கட்சியுடன் இணங்கிச் செயற்படுவதா? பிரிந்து செல்வதா? என்பது தொடர்பில் புளொட் மத்திய குழு கூடித் பக்கம் 18

## பல கட்சிகளுடன் நேற்று ரெலோ ஓடி ஓடிப் பேச்சு

### தமிழ் காங்கிரஸுடனும் இன்று சந்திக்க ஏற்பாடு



ஆசனப்பங்கீடு தொடர்பில் தமிழரசுக் கட்சியுடன் முரண்பட்டுத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிலிருந்து வெளியேறுவ பக்கம் 18

## 16 உள்ளூராட்சிச் சபைகளுக்கு ஈ.பி.டி.பி. நேற்று கட்டுப்பணம்



யாழ்ப்பாணம், டிசெ. 07
சாவகச்சேரி நகரசபை தவிர்ந்த யாழ். மாவட்ட ஏனைய 16 உள்ளூராட்சி மன்றங்களின் தேர்தலில் போட்டியிடுவதற்கான கட்டுப்பணத்தை ஈழ மக் பக்கம் 18

## உதயசூரியன் சின்னத்தில் சங்கரி- சுரேஷ் கூட்டணி

### நேற்று உடன்படிக்கை கைச்சாத்து



யாழ்ப்பாணம், டிசெ .07
தமிழர் விடுதலைக் கூட்டணியின் உதயசூரியன் சின்னத்தில் எதிர்வரும் உள்ளூராட்சித் தேர்தலில் போட்டியிடப் புதிய கூட்டு நேற்று உதயமானது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் இருந்து வெளியேறிய ஈ.பி.ஆர்.எல்.எவ். இதில் பிரதான பங்காளியாக இணைந்து கொண்டது

தமிழர் விடுதலைக் கூட்டணியின் யாழ்ப்பாண பக்கம் 18

## இந்தியாவில் நில நடுக்கம்

புதுடில்லி, டிசெ. 07
இந்தியாவில் நேற்று இரவு சக்தி வாய்ந்த நிலநடுக்கம் ஏற்பட்டதாக ஐரோப்பிய மத்திய தரைக்கடல் புவிச்சரித பக்கம் 18

## ரெலோவுடன் தமிழரசு பேச கதவுகள் திறந்தே உள்ளன!

### செயலாளர் நாயகம் ஸ்ரீகாந்தா தகவல்

யாழ்ப்பாணம், டிசெ. 07
ரெலோவுக்கும் தமிழரசுக்கும் இடையில் தேர்தல் பங்கீட்டில் ஏற்பட்டுள்ள முரண்பாடுகள் குறித்துப் பேசி அவற்றைக் களைவதற்கும் சுமுகமாகத் தீர்ப்பதற்கும் பக்கம் 03

## இந்தக் கூட்டு 2004இல் வந்திருப்பின் இறுதிப் போரில் அழிவு நடந்திராது

### இப்படிச் சொல்கிறார் ஆனந்தசங்கரி



யாழ்ப்பாணம், டிசெ. 07
2004ஆம் ஆண்டில் இவ் வாறான கூட்டு ஏற்பட்டிருந்தால் இறுதிப் போர் அழிவு இடம் பெற்றிருக்காது என்று தமிழர் விடுதலைக் கூட்டணியின் செயலாளர் பக்கம் 18




## தமிழர் மக்கள் பேரவையின் 'டூப்'! தமிழ்த் தேசியப் பேரவை உதயம்

### கஜேந்திரகுமார் தரப்பு புதிய தந்திரோபாயம்

யாழ்ப்பாணம், டிசெ. 07
முதலில் அகில இலங்கைத் தமிழ் காங்கிரஸில் இருந்து தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி என்ற அமைப்பை உருவாக்கிய அக்கட்சியின் தலைவரும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான கஜேந்திரகுமார் தலைமையிலான தரப்பு, இப்போது தமிழர் சம உரிமை இயக்கம் மற்றும் அமைப்புக்களுக்கும் இடையிலான புரிந்துணர்வு உடன்படிக்கை மூலம் 'தமிழ்த் தேசியப் பேரவை' என்ற அமைப்பை உருவாக்கியுள்ளதாக நேற்று அறிவித்தது.

முதலமைச்சர் நீதியரசர் சி.வீ.விக்னேஸ்வரனை இணைத் தலை பக்கம் 03

## அரச நிகழ்ச்சி நிரலிலேயே செயற்படுகின்றது தமிழரசு

### அதனாலேயே புதிய கூட்டு என்கிறார் சுரேஷ்

யாழ்ப்பாணம், டிசெ. 07
தமிழ் மக்கள் வழங்கிய ஆணையை மறந்து அரச நிகழ்ச்சி நிரலை நிறைவேற்றிக் கொண்டு பக்கம் 18

## மீசாலையில் டிப்பர் மோதி நேற்று குடும்பப் பெண் சாவு

### கணவர் தலையில் படுகாயம்

யாழ்ப்பாணம், டிசெ. 07
மீசாலை ரயில் நிலையத்துக்கு அருகில் ஏ - 9 வீதியில் இடம்பெற்ற விபத்தில் குடும்பப் பெண் சம்பவ பக்கம் 18

# சுதந்திரமான தேர்தலை நடத்துவதற்கு சகலரும் ஒத்துழைப்பு வழங்க வேண்டும்!

## அரசியல் கட்சிகளின் தலைவர்கள் மத்தியில் ஜனாதிபதி மைத்திரி



கொழும்பு,டிசெ.07

வன்முறைகளற்ற சுதந்திர மானதும் அமைதியானதுமான தேர்தலை நடத்துவதற்கு சகலரும் ஒத்துழைப்பு வழங்க வேண்டும் என ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரி வித்துள்ளார்.

ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டணியின்நிறைவேற்றுச் சபை நேற்று முன்தினம் பிற் பகல் ஜனாதிபதி மைத்திரி பால சிறிசேனவின் தலை மையில் ஜனாதிபதி செயல கத்தில் கூடியது.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி உள்ளிட்ட பொதுஜன ஐக்கிய முன்னணி, ஸ்ரீ லங்கா மக்கள் கட்சி, தேச விடுதலை மக்கள் கட்சி, தேசிய காங்கிரஸ், ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணி, இலங்கை தொழி லாளர் காங்கிரஸ் உள்ளிட்ட ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டணியில் அங்கம் வகிக் கும் அரசியல் கட்சிகளின் தலைவர்களும் பிரதிநிதி களும் இதன்போது ஒன்று கூடினர்.

ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டணியில் அங்கம் வகிக் கும் அரசியல் கட்சிகளுக்கு தனித்தனியாக எதிர்வரும் உள்ளூராட்சித் தேர்தலில் போட்டியிடுவதற்கு சந்தர்ப் பம் ஏற்படுத்திக் கொடுக்கு மாறு பொதுஜன ஐக்கிய முன் னணியின் தலைவர் நாடாளு மன்ற உறுப்பினர் தினேஷ் குணவர்த்தன இதன்போது தெரிவித்துள்ளார்.

எதிர்வரும் உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் ஐக்கிய மக்கள்சுதந்திரகூட்டணியை பிரதிநிதித்துவம் செய்யும் சகல கட்சிகளும் விரிவான தொரு கூட்டணியாகச்செயற் பட வேண்டுமென ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டணி யின் பொதுச் செயலாளர் அமைச்சர் மஹிந்த அமரவீர குறிப்பிட்டார்.

இலங்கை தொழிலாளர் காங்கிரஸை பிரதிநிதித்துவம் செய்யும் நாடாளுமன்ற உறுப் பினர் ஆறுமுகம் தொண்ட மான் மற்றும் தேசிய காங்கிர ஸைப் பிரதிநிதித்துவம் செய் யும் ஏ.எல்.எம்.அதாவுல்லா ஆகியோர் ஸ்ரீலங்கா சுதந்தி ரக் கட்சியுடன் இணைந்து எதிர்வரும் உள்ளூராட்சி மன் றத் தேர்தலில் போட்டியிட இணக்கம் தெரிவித்தனர்.

இதன்போது கருத்து தெரி வித்த ஜனாதிபதி மைத்திரி பால சிறிசேன -

ஏனையோரின் தன்மானத் திற்கு பங்கம் விளைவிக்காது வன்முறைகளற்ற, சுதந்திர மானதும் அமைதியானதுமான தேர்தலை உறுதி செய்வதற்கு சகலரும் அர்ப்பணிப்புடன் செயற்பட வேண்டுமென வலியுறுத்தினார்.

மேலும் இந்தத் தேர்தல் வெற்றியானது தேர்தல் வேட்பாளர்களின் மீதே தங்கி யுள்ளது என்பதால் கூட்ட ணியின் சகல கட்சிகளும் நேர்மையான அரசியல் கொள் கைகளை உடைய வேட்பாளர் களைத் தமது கட்சி சார்பாக தேர்தலில் முன்னிறுத்த வேண் டியதன் அவசியம் குறித்து ஜனாதிபதி சுட்டிக் காட்டி னார்.

சீரற்ற காலநிலை தொடர்பில்

## கிளி. மாவட்ட செயலகத்தில் அவசர கலந்துரையாடல்!





கிளிநொச்சி,டிசெ.07

இலங்கையில் எதிர்வரும் நாள்களில் ஏற்படப்போகும் சீரற்ற காலநிலை காரணமாக வடக்கு, கிழக்கு ஆகிய மாகா ணங்களில் கூடிய அனர்த் தங்கள் ஏற்பட வாய்ப்புள்ள தாக இலங்கை வளிமண்டல வியல் திணைக்களம் எதிர்வு கூறியுள்ளது.

இந்த நிலையில், அரசால் அவசரநிலை பிரகடனப்படுத் தப்பட்டுள்ளது.

இதனைமுன்னிட்டுவடக்கு மற்றும் கிழக்கு மாகாணங் களின் அனைத்து மாவட்ட செயலகங் களிலும் அனர்த்த நிலையை எதிர்கொள்வது தொடர்பான அவசர கலந் துரையாடல்கள் இடம்பெற்று வருகின்றன.

கிளிநொச்சி மாவட்ட செய லகத்தில் அவசர கலந்துரை யாடல் ஒன்று மாவட்ட அர சாங்க அதிபர்சுந்தரம் அருமை நாயகத்தின் தலைமை யில் நேற்று முன்தினம் இடம் பெற்றது.

இயற்கை அனர்த்தத்தை எதிர்கொள்ளல் மற்றும் முன் னாயத்த செயற்பாடுகள் தொடர்பில் அரச, அரச சார் பற்ற நிறுவனங்கள் அரச திணைக்களங்களைச் சேர்ந்த அதிகாரிகள், இராணுவ அதி காரிகள், பொலிஸ் அதிகாரி கள், சிவில் அமைப்புக்கள் என பலர் இந்த கலந்துரையா டலில் கலந்து கொண்டனர்.

வங்கக் கடலில் தற்போது ஆயிரத்து 100 கிலோமீற்ற ருக்கு அப்பால் நிலைகொண் டுள்ள தாழமுக்கத்தால் ஏதா வது பாதிப்பு கிளிநொச்சி மாவட்டத்திற்கு ஏற்படுமா யின் அவற்றுக்கான முன்னா யத்த மற்றும் அவசர நடவ டிக்கைகள் நிவாரண சேவைகளை பெற்றுக் கொள் வது தொடர்பில் இதன் போது கவனம் செலுத்தப்பட்டுள் ளது.

கொழும்பு தேசிய வைத்தியசாலையில்:

## நவீன மயப்படுத்தப்படவுள்ளன இருதய சத்திரசிகிச்சைப் பிரிவுகள்!

கொழும்பு தேசிய வைத் தியசாலையில் இருதய சத் திர சிகிச்சை மேற்கொள்ளப் படும் பிரிவுகள் இரண்டும் நவீனமயப்படுத்தப்படவுள்ளன.

அவசரமாக மேற்கொள்ளப் பட வேண்டிய இருதய சத் திரசிகிச்சைகளை அரசின் செலவில் தனியார் வைத்திய சாலைகளில் மேற்கொள்வ தற்கு அரசு வசதிகளைச் செய்ய வுள்ளது.

இதன்காரணமாக கொழும்பு தேசிய வைத்தியசாலையில் இருதய சத்திர சிகிச்சை இடை நிறுத்தப்பட்டுள்ளது.

இதற்கமைவாகத் தேசிய வைத்தியசாலையிலுள்ள நோயாளர்கள் ஸ்ரீ ஜயவர்த் தனபுர வைத்தியசாலைக்கு இருதய சத்திர சிகிச்சைக்காக இடம்மாற்றப்பட்டுள்ளனர்.

இது முழுமையான தீர்வாக அமையவில்லை.இதன் கார ணமாக அவசர சத்திரசிகிச்சை மேற்கொள்ளப்படவேண்டிய நோயாளர்களுக்கு அரசின் செலவில் இருதய சத்திர சிகிச்சைமேற்கொள்வதற்கான வசதிகளுள்ள தனியார் வைத் தியசாலைகளில் இவர்களை அனுமதிக்கத்தீர்மானிக்கப்பட் டுள்ளது.

துரிதகதியில் கொழும்பு தேசிய வைத்தியசாலையில் இருதய நோய் பிரிவில் சத் திரசிகிச்சைப் பிரிவை நவீன மயப்படுத்துவதற்குத் தேவை யான நடவடிக்கையைத் துரித கதியில் மேற்கொள்ள பிரதமர் ரணில் விக்கிரமசிங்க மற்றும் சுகாதார போஷாக்கு மற்றும் சுதேச வைத்தியத்துறை அமைச்சர் ராஜித சேனாரத்ன ஆகியோர் கூட்டாகச் சமர்ப் பித்த ஆவணத்திற்கு அமைச் சரவை அங்கீகாரம் வழங்கி யுள்ளது.

## யாழ்.கந்தப்பசேகரம் வீதி போக்குவரத்து தற்காலிக நிறுத்தம்

யாழ்ப்பாணம்,டிசெ.07

யாழ்ப்பாணம் கந்தப்ப சேகரம் வீதி காப்பெற் வீதி யாக்கும் வேலைத்திட்டம் துரித கதியில் ஆரம்பிக்கப் பட உள்ளதனால் ஆஸ்பத் திரி வீதியில் பார ஊர்திகளுக் காக ஒதுக்கப்பட்டுள்ள ஏற்றி இறங்கல் வலயம் தொடர்பாக மாநகர சபையினால் ஏற் படுத்தப்பட்ட நேரம் தொடர் பான விதிமுறைகள் தற்காலி கமாக இடை நிறுத்தப்பட்டுள் ளன.

கந்தப்பசேகரம் வீதி ஊடான போக்குவரத்தும் தற் காலிகமாக நிறைவுறுத்தப் படும் வரை இந்த அறிவித்தல் நடைமுறையில் இருக்கும். என்று யாழ்.மாநகரசபை ஆணையாளர் இ.த. ஜெய சீலன் அறிவித்துள்ளார்.(இ)

## சாவகச்சேரி நகரசபைத் தேர்தலில் போட்டியிட கட்டுப்பணம் செலுத்தியது தமிழரசுக் கட்சி!




யாழ்ப்பாணம்,டிசெ.07

உள்ளூராட்சி மன்றத் தேர்த லில் சாவகச்சேரி நகரசபைத் தேர்தலில் போட்டியிடு வதற்காக இலங்கைத் தமிழ ரசுக்கட்சி நேற்றுக் கட்டுப் பணத்தைச் செலுத்தியுள்ளது.

கட்சியின் வடக்கு மாகாண சபை உறுப்பினர் கேசவன் சயந்தன் மற்றும் கட்சியின் தென்மராட்சி அமைப்பாளர் க.அருந்தவபாலன் உள்ளிட்ட வர்கள் யாழ். மாவட்ட உதவித் தேர்தல் அலுவலகத்தில் நேற் றுக் காலை 11.30 மணிக்கு கட்டுப்பணத்தை செலுத்தி யுள்ளமை குறிப்பிடத்தக் கது.

# இரு மொழிக் கொள்கையை உடன் நடைமுறைப்படுத்துக!

## நிரந்தரத் தீர்வுக்கு அதுவே வழி என்கிறது ஜே.வி.பி.

மொழிப் பிரச்சினை காரணமாகவே உலகில் பல நாடுகள் பிரிந்து செல்ல துடிக்கின்றன. எமது நாட்டில் இரு மொழிக் கொள்கை இருந்து அதனை நடைமுறைப்படுத்தும் அடிப்படை காரணிகளைக்கூட அரசு இன்றுவரை முறையாக நடைமுறைப்படுத்தவில்லை. நாட்டின் தேசியப் பிரச்சினையாக இதனைக் கருதி உடனயாகத் தீர்வுகாணப்பட வேண்டும் என்று ஜே.வி.பியின் நாடாளுமன்ற உறுப்பினர் விஜித ஹேரத் தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று நடைபெற்ற 2018ஆம் நிதியாண்டுக்கான வரவு – செலவுத் திட்டத்தின் மாகாண மற்றும் உள்ளூராட்சிச் சபைகள், பொது நிர்வாகம் மற்றும் முகாமைத்துவம், உள்நாட்டலுவல்கள் அமைச்சுகள் மீதான விவாதத்தில் கலந்து கொண்டு உரையாற்றியபோதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:

எமது நாடு மூன்று தசாப்த கால யுத்தத்திற்கு முகம் கொடுத்திருந்தது. அதற்குப் பல முக்கிய காரணிகள் உள்ளன. பொருளாதாரம் அதில் பிரதான காரணியாகும். யுத்தம் ஏற்பட மொழிப் பிரச்சினையும் ஆழமாகத் தாக்கம் செலுத்தியது. யுத்தம் நிறைவுக்குக் கொண்டுவரப்பட்ட பின்னர் கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழு யுத்தம் ஏற்பட்டமைக்கான காரணங்கள் எவை என்பதைத் தெளிவுபடுத்தி அறிக்கையொன்றை முன் வைத்திருந்தது. மொழிப் பிரச்சினை எமது நாட்டில் மாத்திரமல்ல உலகில் பல்வேறு நாடுகள் பிளவுப்படத் தாக்கம் செலுத்திய முக்கிய பிரச்சினையாக இருந்துள்ளது.

இன்று பல நாடுகள் தனியாகப் பிரிந்துச்செல்லத் துடிக்கின்றமை இந்த மொழிப்பிரச்சினையின் காரணமாகவே. எமது நாட்டில் மொழிப் பிரச்சினையைத் தீர்க்கப் பல நடவடிக்கைகள் எடுக்க எடுக்கப்பட்டிருக்க வேண்டும் என்பதுடன், எடுக்கக் கூடிய சந்தர்ப்பங்களும் காணப்பட்டன. ஆனால், துரதிர்ஷ்டவசமாக 70 வருடம் ஆட்சி செய்த இந்த இரண்டு கட்சிகளும் எடுக்கக்கூடிய குறைந்தளவிலான நடவடிக்கைகளைக்கூட எடுத்திருக்கவில்லை. இதன் பிரதான பொறுப்பு பொதுநிர்வாகம் மற்றும் முகாமைத்துவ அமைச்சுக்கு உரியது.

இரு மொழிக்கொள்கை தேசிய சமாதானத்திற்கும், நல்லிணக்கத்திற்கும், ஒற்றுமைக்கும் அடிப்படைக் காரணியாகும். இதனை ஓர் அமைச்சுக்கு மட்டுப்படுத்த முடியாது. உடனடியாக இந்தப் பிரச்சினைக்குத் தீர்வு காணப்படவேண்டும். இரு மொழிக் கொள்கைகளை நடைமுறைப்படுத்தவேண்டும். கடந்த காலங்களில் பல திட்டங்களும், கொள்கைகளும் வகுக்கப்பட்டிருந்தன. இந்த முதலாவது பிரச்சினையைத் தீர்க்க அரச பொதுநிர்வாக அமைச்சு அடிப்படைக் காரணிகளைக்கூட முன்னெடுக்கவில்லை என்பது துரதிர்ஷ்டவசமானது.

மொழிப் பெயர்ப்பாளர்களுக்கு அமைச்சுகளில் மாத்திரமல்ல நாடாளுமன்றிலும் பற்றாக்குறை நிலவுகிறது. அமைச்சுகளில் அதிகாரிகள் அங்கு மொழிப்பெயர்ப்பாளர்கள் இல்லையெனக் கூறுகின்றனர். இந்தப் பற்றாக்குறை உண்மையான பற்றாக்குறையா அல்லது உருவாக்கப்பட்ட பற்றாக்குறையா?. இது ஏற்படுத்தப்பட்ட பற்றாக்குறையே.

சப்ரகமுவ, களனி, யாழ். பல்கலைகழகங்களில் பல மொழிப்பெயர்ப்பாளர்கள் ஒவ்வொரு வருடமும் வெளியேறுகின்றனர். சப்ரகமுவ பல்கலையில் மாத்திரம் 70 பேர் வருடமொன்றுக்கு மொழிப்பெயர்ப்பாளர்களாக வெளியேறுகின்றனர். பல மொழிப்பெயர்ப்புப் பட்டதாரிகள் வேலையில்லாப் பட்டதாரிகளாக உள்ளனர். 1992ஆம் ஆண்டுக்குப் பின்னர் அரச மொழிப் பரீட்சையொன்று நடத்தப்படவில்லை. மொழிப்பெயர்ப்பாளர்களை இணைத்துக் கொள்ளும் பரீட்சை 1999ஆம் ஆண்டுதான் நடத்தப்பட்டுள்ளது. அவ்வாறு பரீட்சை நடத்தப்பட்டாலும், எட்டு வருடங்களின் பின்னர்தான் அவர்கள் மொழிப்பெயர்ப்பில் உயர் நிலைக்கு வரமுடியும்.

இரு மொழிக்கொள்கையை யதார்த்தத்திற்குக் கொண்டுவர முடியாவிடின் எவ்வாறு இரு மொழிக் கொள்கை சாத்தியமடையும். அரச நிர்வாகத்திலும், முகாமைத்துவத்திலும் உள்ள குறைபாடே இதற்குக் காரணம். அரசியல் ரீதியான நியமிப்புகள் பாரிய பிரச்சினையாக உள்ளன. இது தேசியப் பிரச்சினை. இதற்கு முன்னுரிமை கொடுத்து உடன் தீர்வு காணப்பட வேண்டும் – என்றார். (ஐ)

# மனைவி தீ வைத்துக் கொலை; கணவருக்கு 10 ஆண்டுகள் சிறை

## யாழ்ப்பாணம் மேல் நீதிமன்றம் நேற்றுத் தீர்ப்பு

யாழ்ப்பாணம், டிசெ.07

வடமராட்சி, குடத்தனையில் மனைவியின் உடலில் தீப்பற்றவைத்துக் கொலை செய்ய குற்றத்துக்காகக் குடும்பத் தலைவருக்கு 10 ஆண்டுகள் கடூழியச் சிறைத் தண்டனை விதித்து யாழ்ப்பாணம் மேல் நீதிமன்ற நீதிபதி மாணிக்கவாசகர் இளஞ்செழியன் தீர்ப்பளித்தார்.

வடமராட்சி, மணற்காடு – குடத்தனையில் 2013ஆம் ஆண்டு டிசெம்பர் 3ஆம் திகதி ஞானதாஸ் மேரி ஜிமில்டா (வயது – 24) என்ற இளம் குடும்பப் பெண் உடலில் தீக் காயங்களுடன் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டார். அவர் சிகிச்சை பயனின்றி உயிரிழந்தார். அவரைக் கொலை செய்தார் என்ற குற்றச்சாட்டில் பெண்ணின் கணவர் அந்தோனிமுத்து ஞானதாஸ் (வயது – 25) கைது செய்யப்பட்டார்.

சந்தேகநபருக்கு எதிராகப் பருத்தித்துறை நீதிவான் நீதிமன்றில் சுருக்கமுறையற்ற விசாரணைகள் இடம்பெற்றன. அதன் நிறைவில் சந்தேகநபர் பிணையில் விடுவிக்கப்பட்டார்.

இந்த நிலையில் மனைவியின் உடலில் மண்ணெண்ணெய் ஊற்றித் தீவைத்துக் கொலை செய்தார் என்ற குற்றச்சாட்டை முன்வைத்து சந்தேகநபருக்கு எதிராக யாழ்ப்பாணம் மேல் நீதிமன்றில் குற்றப்பத்திரிகை சட்டமா அதிபரால் தாக்கல் செய்யப்பட்டது.

யாழ்ப்பாணம் மேல் நீதிமன்றில் வழக்கு மீதான விளக்கம் இடம்பெற்று வந்த நிலையில் நேற்றுத் தீர்ப்புக்காக திகதியிடப்பட்டிருந்தது.

வழக்கின் எதிரி கொலை செய்யும் பொது நோக்கத்தோடு திட்டமிட்டு அவரது மனைவி மீது தீப்பற்றவைத்தார் என்பது வழக்குத் தொடுநரால் நியாயமான சந்தேகங்களுக்கு அப்பால் நிரூபிக்கப்பட்டவில்லை. எதிரி கைமோசக்கொலைக் குற்றத்தைப் புரிந்துள்ளார் என்ற முடிவுக்கு இந்த மன்று வருகிறது.

அந்தக் குற்றத்துக்காக எதிரிக்கு 10 ஆண்டுகள் கடூழியச் சிறைத் தண்டனை வழங்கப்படுகிறது. அத்துடன், குற்றவாளி 5 ஆயிரம் ரூபா தண்டம் பணம் செலுத்த வேண்டும். அதனைச் செலுத்தத் தவறின் 3 மாதங்கள் சிறைத் தண்டனையை அனுபவிக்க நேரிடும் என்று விதித்து யாழ்ப்பாணம் மேல் நீதிமன்ற நீதிபதி மாணிக்கவாசகர் இளஞ்செழியன் தீர்ப்பளித்தார்.

வழக்கை அரச சட்டவாதி நாகரட்ணம் நிஷாந்த் நெறிப்படுத்தினார். எதிரி சார்பில் சட்டத்தரணி வி.திருக்குமரன் முன்னிலையாகி வந்தார். (ஐ)

## தமிழர்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வராகக் கொண்டு பேரவை மூலம் ஒரு புதிய அரசியல் கூட்டமைப்பை உருவாக்கி தேர்தலில் ஈடுபட எடுக்கப்பட்ட முயற்சிகள் தோல்வியில் முடிவடைந்துள்ள நிலையில் –

'தமிழ் மக்கள் பேரவை' என்ற பெயரை ஒட்டியதாகவும் 'தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியில் உள்ள 'தேசிய' என்ற சொல்லைப் பயன்படுத்தும் விதத்திலும் 'தமிழ்த் தேசியப் பேரவை' என்ற புதிய பெயர் அறிவிக் கப்பட்டுள்ளதாக அரசியல் அவதானிகள் சுட்டிக்காட்டினர்.

'தமிழ் மக்கள் பேரவை'யால் முன்வைக்கப்பட்ட அரசியல் வரைவை தேசிய கொள்கையாக முன்நிறுத்தி இந்தப் புதிய அரசியல் பேரியக்கமாக 'தமிழ்த் தேசியப் பேரவை' உருவாக்கப்படுவதாகவும் இது தொடர்பாக வெளியிடப்பட்ட செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பாக நேற்று ஓர் உடன்படிக்கை கைச்சாத்திடப்படுவதாகவும், அதில் பல அமைப்புக்கள் ஒப்பமிடுகின் றன எனவும் அந்தச் செய்திக் குறிப்பில் கூறப்பட்டிருந்த போதிலும் அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ், தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி, தமிழர் சமஉரிமை இயக்கம் என்பன தவிர்ந்த வேறு பொது அமைப்புக்களின் பெயர்கள் அதில் குறிப்பிடப்பட்டிருக்கவில்லை.

'அகில இலங்கைதமிழ் காங்கிரஸ், தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி, தமிழர்சமஉரிமை இயக்கம் மற்றும் பொது அமைப்புக்களிற்கும் இடையிலான புரிந்துணர்வு உடன்படிக்கை' என்ற தலைப்பில் விடுக்கப்பட்ட அந்தச் செய்திக் குறிப்பில் மேலும் கூறப்பட்டவை வருமாறு:–

தமிழ் மக்களின் நீண்டகால அரசியல் வேணவாவை வென்றெடுப்பதையும் தமிழ் மக்களுக்குஎதிராக இழைக்கப்பட்ட அநீதிகளுக்கு நீதி காண்பதையும் இலக்காகக் கொண்டு தமிழ்மக்கள் பேரவையினால் முன்வைக்கப்பட்ட அரசியல் வரைவைத் தேசியக்கொள்கையாக முன்னிறுத்தி, மேற்குறிப்பிட்ட அமைப்புக்கள் ஒன்றிணைந்து, இதய சுத்தியுடன் செயற்படும் ஓர் அரசியற் பேரியக்கமாக இவ் அமைப்பு உருவாக்கப்படுகின்றது.

பெயர் : தமிழ்த் தேசியப் பேரவை – த.தே.பே.(TamilNationalCouncil–T.N.C.)

இலக்கு:மேற் குறிப் பிட்ட அமைப்புக்கள் ஒன்றிணைந்துதமிழ்மக்கள்பேரவையினால் 10.04.2016 ஆம் திகதி வெளியிடப்பட்ட தீர்வுத் திட்டத்தை வென்றெடுப்பதையும், தமிழ் மக்களுக்கு எதிராக இழைக்கப்பட்ட அநீதிகளுக்கு முழுமையான நீதியைபெற்றுக் கொள்வதையும் இலக்காக கொண்டு இவ் அரசியற் பேரியக்கம் (தமிழ்த் தேசியப் பேரவை) செயற்படும்.

எதிர்வரும் உள்ளூராட்சி சபைத் தேர்தலில் பொதுச் சின்னத்தை பெறமுடியாத நிலை ஏற்பட்டுள்ளமையினால் சைக்கிள் சின்னத்தில் போட்டியிடும்.

எதிர்காலத்தில் தமிழ்த் தேசியப் பேரவை (Tamil National Council) எனும் பெயரில் இக்கூட்டமைப்பு பதிவுசெய்யப்பட்டு புதிய சின்னம் பெறப்பட்டு மேற்படி இலக்கை அடைவதற்காக செயற்படும்.

இக்கூட்டமைப்பில் அங்கம் வகிக்கும் பொதுஅமைப்புக்கள் தமது சுயாதீனத்தை பேணிக் கொள்ளமுடியும்.

மேற்படி விடயங்களை வாசித்து விளங்கிக் கொண்டு அதனைஏற்று 2017 ஆம் ஆண்டு டிசம்பர்மாதம் 06 ஆம் நாள் (06.12.2017) இப்புரிந்துணர்வு உடன்படிக்கை இதன்கீழ்கையொப்பமிடும் அமைப்புக்களால் கைச்சாத்திடப்படு கின்றது.

– இப்படி அந்தச் செய்திக் குறிப்பில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (உ)

## ரெலோவுடன்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ரெலோவின் கதவுகள் எப்போதும் திறந்தே உள்ளன.

அக்கட்சியின் செயலாளர் நாயகம் என்.ஸ்ரீகாந்தா நேற்றிரவு 'காலைக்கதிர்' நாளிதழுக்கு இவ்வாறு தெரிவித்தார்.

அவர் இது தொடர்பில் மேலும் கூறியவை வருமாறு:–

இன்று (நேற்று) மாலை எமது தலைமைக் குழு கூடி ஆராய்ந்து கொண்டிருந்தபோது கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் எனக்குத் தொலைபேசி அழைப்பை எடுத்தார். என்ன நடக்கின்றது என்று வினாவினார்.

'நாங்கள் ஒற்றுமையாக இருக்க வேண்டியமை அவசியம். அது குறித்துப் பேச வேண்டும்.' – என்றார்.

'நாங்கள் சுரேஷை வெளியில் போகச் சொல்லவில்லை. நாங்கள் ஆனந்தசங்கரியை வெளியில் அனுப்பவில்லை.' – என்றும் அவர் என்னிடம் கூறினார்.

எல்லா விடயங்களையும் தமிழரசுக் கட்சித் தலைவர் மாவை சேனாதிராசா உங்களுக்குச் சொல்லியிருப்பார் என நான் அவரிடம் கூறினேன்.

தமிழரசுடனும், கூட்டமைப்புடனும் ஒத்துப் போவதற்கு நாமும், எங்கள் கட்சியும் எவ்வளவு தூரம் விட்டுக்கொடுத்து செயற்பட்டோம் என்பதை அவர் உங்களுக்குக் கூறியிருப்பார் என நம்புகிறோம் என்றேன்.

முல்லைத்தீவு, மட்டக்களப்பில் இருந்து மேற்படி பேச்சுக்கு வந்த இலங்கைத் தமிழரசுக் கட்சிப் பிரதிநிதிகளும், அவர்களுடன் அவ்வப்போது தொலைபேசி அழைப்பு எடுத்து அந்தந்த இடங்களில் இருந்து பேசியோருமே இத்தகைய முரண்பாட்டு நிலைமை மூர்க்கமடையக் காரணம்.

ஆனால், இந்த முரண்பாடுகளைக் களைவது குறித்து தமிழரசுக் கட்சி எங்களுடன் பேசித் தீர்க்க விரும்பினால் அதற்கு ரெலோவின் கதவுகள் எப்போதுமே அகலத் திறந்தே இருக்கின்றன. நாம் காத்து இருக்கிறோம். – என்றார் ஸ்ரீகாந்தா. (உ)

விரைவில்

காலைக்கதிர் Kalaikkathir

நாளிதழில் எதிர்பாருங்கள்!

5ஆம் தரம் புலமைப்பரிசில் மாதிரி வினாத்தாள்கள்

கல்விக் கதிரில்!

## உதயசூரியன்...

(பதினெட்டாம் பக்கத் தொடர்ச்சி)

உருவாக்கியுள்ளதுடன் உடன்படிக்கையிலும் கைச்சாத்திட்டன.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பங்காளிக் கட்சியான தமிழரசுக் கட்சியின் அடாவடித்தனமான செயற்பாடுகள் காரணமாக உள்ளூராட்சித் தேர்த லில் வீட்டுச் சின்னத்தில் போட்டியிடுவதில்லை எனத் தெரிவித்து ஈ.பி.ஆர்.எல்.எவ். தலைவர் சுரேஷ் பிறேமச்சந்திரன் வெளியேறியிருந்தார். அதன் பின்னர் அவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தலைமையிலான தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியுடன் இணைந்து புதிய கூட்டணி அமைத்துத் தேர்தலில் போட்டியிடத் திட்டமிட்டிருந்தார். அந்தக் கூட்டணி அமைப்பதற்கான பேச்சுக்கள் இடம்பெற்ற போதும் அதற்கான சின்னத் தைத்தெரிவுசெய்வதில் இருதரப்பினர் இடையேயும் இணக்கம் ஏற்படவில்லை. தமிழர் விடுதலைக் கூட்டணியின் உதயசூரியன் சின்னத்தில் புதிய கூட்டை உருவாக்குவதற்கு சுரேஷ் விருப்பம் கொண்டிருந்த போது கஜேந்திரகுமார் அதனை ஏற்கவில்லை. அவர்கள் சைக்கிள் சின்னத்திலேயே போட்டியிட வேண்டும் என்பதில் விடாப்பிடியாக இருந்தனர். இதனால் சுரேஷ்–கஜேந்திரகுமார் கூட்டு வெற்றியளிக்கவில்லை.

இதனையடுத்து தமிழர் விடுதலைக் கூட்டணியின் செயலாளர் வீ.ஆனந்தசங்கரி உட்படச் சிலரை இணைத்துக் கொண்டு உதயசூரியன் சின்னத்தில் நேற்றுப் புதிய கூட்டணி உதயமானது. (ஐ-7)

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம்
செய்தி: 021 222 3000, kalaikkathirnews@gmail.com
தொலைநகல் (fax) : 021 221 9440, ads@kalaikkathir.lk
விளம்பரம்/விநியோகம்: 021 222 2600

## சந்தர்ப்பம் பார்த்திருந்து கூட்டமைப்பைப் பிளக்கும் வேலை

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நிலைமை சந்தி சிரிக்கும் விவகாரமாக மாறியிருக்கின்றமை வேதனைக்குரியது.

வெண்ணெய் திரண்டு வரும் சமயத்தில் தாழி உடைந்த கதையாக கூட்டமைப்பின் நிலைமை போய் விடுமோ என்று எண்ணும் சூழ்நிலை எழுந்துள்ளது.

இலங்கைத் தமிழ் மக்களின் தேசிய இனப் பிரச்சினைக்குத் தீர்வு காணும் முயற்சிகள், புதிய அரசமைப்பு உருவாக்க வடிவத்தில் முன்னெடுக்கப்படுகையில் -

அதில் பேரம் பேசும் வலுவுடன் இலங்கைத் தமிழர்கள் ஐக்கியமாக இருக்க வேண்டியமை வரலாற்றுக் கட்டாயம் எனத் தமிழ் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் சம்பந்தனும் ஏனைய தலைவர்களும் வலியுறுத்தி வந்தனர்.

புதிய அரசமைப்புக்கான இடைக்கால அறிக்கை நீண்ட இழுபறிகளுக்குப் பின்னர் இப்போதுதான் அரசமைப்பு சபைக்கு வந்துள்ள சமயத்தில் - வெண்ணெய் திரளுகின்ற சமயத்தில் - தாழி உடைவது போல கூட்டமைப்பு பிளவுற்று துண்டுபடும் போக்குத் தென்படுகின்றது.

கூட்டமைப்புக்குள் புகைந்து கொண்டிருந்த உள் அணிக்குழப்பம் இப்போது தேர்தல் நெருங்கும் சமயத்தில் பூதாகரமாக வெடித்திருக்கின்றது.

கூட்டுக்குள் தருணம் பார்த்திருந்த தரப்புகள் தமது கைவரிசையை சந்தர்ப்பம் பார்த்து காட்டியிருக்கின்றன என்பது மட்டும் நிச்சயம்.

நாடாளுமன்ற, மாகாண சபைத் தேர்தல்கள் சமயத்தில் தத்தமது பதவிகளைத் தக்க வைத்துக் கொள்வதற்காக வேறுபாடுகளைக் களைந்து, ஐக்கியம் பேசி, ஒற்றுமையாக வாக்குத் திரட்ட வந்த தலைவர்கள், இப்போதைய தேர்தல் நகர, கிராம மட்டத் தலைவர்கள் தெரிவு என்பதால் விளைவுகளைப் பற்றிச் சிந்திக்காது அதில் தத்தமது செல்வாக்கு, ஆதிக்கத்தைக் காட்ட முனைந்திருக்கின்றார்கள் என்பது வெளிப்படையானது.

இன்று, உள்ளூராட்சித் தேர்தல் என்பதால் இதில் தத்தமது கட்சியின் தனித்துவம், மரியாதை, செல்வாக்குப் பற்றி எல்லாம் பொங்கி எழுந்து பீறிட்டுக் கொதித்துப் பாய்ந்து அவற்றின் அடிப்படையில் தனித்தும் பிரிந்தும் செல்ல முயலும் தலைவர்கள் எல்லாம், இதுவே தத்தமது தலைவிதியைத் தீர்மானிக்கும் நாடாளுமன்றத் தேர்தல் என்றால் பொத்திக் கொண்டு அடங்கி நின்றிருப்பார்கள் என்பதும் திண்ணம்.

கூட்டமைப்பில் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் வீட்டுச் சின்னத்தில் இனிப் போட்டியிட முடியாது என்று தெரிவித்து ஈ.பி.ஆர்.எல்.எவ். கட்சியும் அதன் தலைவர் சுரேஷ் பிரேமச்சந்திரனும் வெளியேறிய சூழலும், சந்தர்ப்பமும், போக்கும் வேறானவை. அதில் ஒரு நியாயம் இருந்தது என்றும் கூடச் சொல்லலாம்.

சுரேஷ் தரப்பின் ஆதங்கத்தைச் செவிமடுத்து அதைக் கையாளுவதற்கு கூட்டமைப்புத் தலைமை முயற்சிக்க வேண்டும் என்று இந்தப் பத்தியில் ஏற்கனவே நாம் சுட்டிக்காட்டியிருந்தமையும் கூட இப்போது நினைவு கூரத்தக்கதே.

ஆனால், அதன் பிறகு இப்போது திடீரென தேர்தல் சமயத்தில் கூட்டமைப்பை மேலும் பிளப்பது சம்பந்தப்பட்ட தரப்புகள் சந்தர்ப்பம் பார்த்திருந்து காலைவாரிவிடும் செயலாகவே மக்களால் பார்க்கப்படும்; நோக்கப்படும்.

இப்போதைய வெடிப்புக்கு பிரதான காரணம் ஆசனப் பங்கீடு என்றால் அதில் எந்த விடயத்துக்கான பங்கீட்டுக் குழப்பம் என்பதுதான் கவலைக்குரிய விடயம்.

கிழக்குக் குறித்து அதிகம் பேசுகிறோம். வடக்கும், கிழக்கும் இணைந்த தமிழர் தாயகத்தைப் பற்றி அதிகம் அலட்டிக் கொள்கின்றோம். கிழக்கைப் பறிகொடுத்து விடாமல் காப்பாற்றுவதற்காக இணைப்பு அவசியம் என விடாது வலியுறுத்துகின்றோம்.

ஆனால், அதே கிழக்கில் - மட்டக்களப்பு மாவட்டத்தில் - உள்ளூராட்சி சபை அதிகாரத்தைப் பங்கீடு செய்வதில்தான் கன்னை கட்டிப் பிரிந்து நின்று, பிளவுபட்டு, குழம்பிப்போய் நிற்கின்றோம். தனித்தனி அணியில் தேர்தலில் நின்று கிழக்கில் தமிழர்களின் வலிமையை மேலும் பலவீனப்படுத்த முயலுகின்றோம்.

கூட்டமைப்பைப் பிளக்க முயலும் மூத்த தலைவர்களிடம் ஒரே ஒரு கேள்விதான் தமிழ் மக்களிடம் உள்ளது.

உங்களின் நாடாளுமன்ற உறுப்பினர் பதவிகளை உறுதிப்படுத்தும் நாடாளுமன்றத் தேர்தலாக இது இருப்பின், இப்படி எடுத்த எடுப்பிலேயே பிளவுபட்டு, அணி பிரிந்து, 'தனிக்குடித்தனம்' போக முயன்றிருப்பீர்களா?

இப்போதும் கூட மூத்த தலைவர்கள் மட்டத்தில், மூடிய அறைக்குள் பேசி, முடிவெடுக்க வேண்டிய விவகாரத்தை இரண்டாம், மூன்றாம் மட்ட தலைவர்கள் பலரை வைத்துப் பேசி, அரசியல் சர்க்கஸ் புரிந்து, போட்டுடைப்பது போல நடந்து கொள்வது சந்தி சிரிக்கும் வேலையன்றி வேறல்ல.

இப்போது கூட்டமைப்பின் மூத்த தலைவர்கள் தங்களுக்குள் பேசி, இணக்கம் கண்டு, சுமுகமாகத் தீர்த்துக் கொள்ள நடவடிக்கை எடுத்திருக்கிறார்கள் என்று நேற்று மாலை வெளியான செய்திகள் தமிழர் தரப்புக்கு ஆறுதல் தரும் விடயமாகும்.

ஐக்கியம் முக்கியம். அதுவும் இது போன்ற தேர்தல் சமயத்தில் இன்னும் முக்கியம்.

# மாவட்டங்கள் தோறும் கூட்டணி; ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி முடிவு!

கொழும்பு,டிசெ.07

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி மாவட்டங்கள் தோறும் உள்ள அமைப்புகள் மற்றும் கட்சிகளுடன் இணைந்து சகல உள்ளூராட்சி சபைகளுக்கும் வேட்பாளர்களை நிறுத்தக் கட்சியின் மத்திய செயற்குழு தீர்மானித்துள்ளது என ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் இளைஞர் முன்னணியின் தலைவர் சாந்த பண்டார தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

இதற்கு அமைய கட்சியின் சின்னம் கை அல்லது வெற்றிலையாக மாறலாம். இது குறித்து ஜனாதிபதியின் தலைமையில் அறிவிக்கப்படும்.

தூய்மையான அரச நிர்வாகத்தை மேற்கொள்ளும் தேவை ஜனாதிபதிக்கு உள்ளது. இதற்குத் தேவையான தூய்மையான நிர்வாகத்திற்குரிய தலைவர்களை ஜனாதிபதி பரிந்துரைப்பார்.

கூட்டு எதிர்க்கட்சியினர் மேற்கொள்ளும் வேலைத்திட்டம் புஷ்வாணமாகியுள்ளது. சுதந்திரக் கட்சி கிராமம் கிராமமாக சென்று மக்களுக்கு இதைத் தெளிவுபடுத்தியுள்ளது.

இறுதி பிரதிபலனாக மக்கள் எதிர்பார்க்கும் தூய்மையான நிர்வாகத்தை வழங்கக் கூடிய கிராமத்து தலைவர்களை உருவாக்க கூடிய நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் சாந்த பண்டார குறிப்பிட்டுள்ளார்.

# பொலன்னறுவையில் தெற்காசியாவின் மிகப் பெரிய சிறுநீரக வைத்தியசாலை!

கொழும்பு, டிசெ.07

பொலன்னறுவையில் நிர்மாணிக்கப்படும் தெற்காசியாவின் மிகப் பெரிய சிறுநீரக மருத்துவமனைக்கான அடிக்கல்லை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன நேற்றுக் காலை நட்டு வைத்தார்.

சீன அரசின் நிதியுதவியில் இந்த மருத்துமனை நிர்மாணிக்கப்படுகிறது.

இதனை நிர்மாணிக்க ஆயிரத்து 200 கோடி ரூபா செலவாகும் எனமதிப்பிடப்பட்டுள்ளது.

நவீன ஆய்வுக்கூடம், அதி நவீன தொழில்நுட்ப வசதிகளுடன் வைத்தியசாலை நிர்மாணிக்கப்பட உள்ளது.

சிறுநீரக மாற்று சத்திர சிகிச்சை, இரத்தச் சுத்திகரிப்பு உள்ளிட்ட வைத்திய வசதிகள், ஆய்வு கூட சேவைகள், ஆலோசனை சேவைகள் என்பன இந்த வைத்தியசாலையில் வழங்கப்பட உள்ளன.

வெளி நோயாளர் பிரிவில் 200 நோயாளர்கள் தங்கிச் சிகிச்சை பெறக் கூடிய வசதிகள், சத்திர சிகிச்சைக் கூடம், தீவிர சிகிச்சைப் பிரிவு என்பனவும் வைத்தியசாலையில் நிர்மாணிக்கப்பட உள்ளன.

நேற்று நடைபெற்ற அடிக்கல் நாட்டு விழாவில் இலங்கைக்கான சீனத் தூதுவர் இய் சியங்லி யாங், சுகாதார அமைச்சர் ராஜித சேனாரத்ன உட்படப் பலர் கலந்துக் கொண்டனர்.

# வடக்கு - கிழக்கில் முப்படையினரும் தயார் நிலையில்: இராணுவப்பேச்சாளர்!



வடக்கு - கிழக்கில் அசாதாரண நிலையை எதிர்கொள்ளக்கூடிய தயார் நிலையில் முப்படையினரும் இருப்பதாக இராணுவப்பேச்சாளர் மேஜர் ஜெனரல் ரொசான் செனவிரத்ன தெரிவித்தார்.

சீரற்ற காலநிலையினால் எந்தவித அனர்த்த நிலையும் ஏற்பட்டது எனத்தகவல் இல்லை என்று அவர் குறிப்பிட்டார்.

வடக்கு கிழக்கில் சீரற்ற காலநிலை தொடர்பான முன்னேற்பாடுகள் தொடர்பில் கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

# நாட்டில் இடம்பெற்ற போரால் கடற்பகுதிகள் பாதுகாக்கப்பட்டன

### கடல் சுற்றாடல் பாதுகாப்புச் சங்கத்தின் சூழலியலாளர் தெரிவிப்பு

கொழும்பு,டிசெ.07

நாட்டில் இடம்பெற்ற போர் ஓர் ஆசீர்வாதமாகும் என கடல் சுற்றாடல் பாதுகாப்பு சங்கத்தின் சூழலியலாளர் பிரசன்ன வீரக்கொடி தெரிவித்துள்ளார்.

வனவிலங்கு பாதுகாப்பு திணைக்களத்தினால் நேற்று முன்தினம் கொழும்பில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த கருத்தரங்கு ஒன்றில் பங்கேற்ற போது அவர் இதனைக் கூறியுள்ளார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

இந்த நாட்டில் இடம்பெற்ற போர் காரணமாக வடக்கு - கிழக்கு கடல் பகுதி பாதுகாக்கப்பட்டது.

போர் என்பது அனைவராலும் வெறுக்கப்படும் ஒன்றாகும், எனினும், இந்த நாட்டின் கடல் பகுதிக்குப் போர் ஓர் ஆசீர்வாதமாகவே அமைந்திருந்தது.

மன்னார், விரிகுடா மற்றும் கல்பிட்டி கடல் பரப்பில் வாழும் கடல் பன்றிகள், கடல் புல் வகைகள் அழிவடையக்கூடிய அபாயத்தை எதிர்நோக்கி வருகின்றன.

கடல் மாசடைதல், சட்ட விரோத முறைகளைப் பயன்படுத்தி மீன்பிடியில் ஈடுபடுதல், அதிக வேகமாக செல்லும் படகுகள் போன்றவற்றினால் கடல் பன்றிகளுக்குப் பாதிப்பு ஏற்பட்டுள்ளது.

இந்த விலங்குகளின் பிரதான உணவான கடல் புல் வகைகளும் அழிவடைந்து செல்லும் அபாயத்தை எதிர்நோக்கி வருகின்றது.

வனவிலங்கு பாதுகாப்பு திணைக்களம் மற்றும் சிவில் அமைப்புக்கள் கூட்டாக இணைந்து கடல் பன்றி மற்றும் கடல்புல்வகைகளைப் பாதுகாக்கும் திட்டமொன்றை ஆரம்பித்துள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

பெண்களுக்கெதிரான வன்முறை ஒழிப்புச் செயற்பாடு

(கார்த்திகை 25 முதல் மார்கழி 10 வரை)

அடுப்படியில் ஒதுங்கிடும் பெண்களாய் அல்லாமல் அவர்கள் முன்னேற நல்ல பல திட்டங்களை வகுத்திடுவோம்.

JSAC

16 2017

யாழ். சமூக செயற்பாட்டு மையம்

## நாளை

08.12.2017
வெள்ளிக்கிழமை

நட்சத்திரம் : ஆயிலியம் பி.இ 1.02 வரை
திதி : பஞ்சமி மு.ப 11.21வரை
சுபநேரம் : 6.17 - 7.47 வரை
இராகுகாலம்: 10.47 - 12.17 வரை

# வெள்ளவத்தை கடற்கரையில் பெருமளவு மீன்கள்; சுனாமி ஏற்படுவதற்கான அறிகுறி இல்லையாம்!



கொழும்பு, டிசெ. 07

வெள்ளவத்தை கடற்கரை பகுதியில் மீன்கள் பெருமளவில் கரையொதுங்கியமைக்கு காரணம் சுனாமி ஏற்படுவதற்கான அறிகுறி அல்ல என்று நாரா நிறுவனத்தின் தலைவர் கலாநிதி அனில் பிரேமரத்ன தெரிவித்துள்ளார்.

வெள்ளவத்தை கடற் கரையோர பிரதேசத்தில் வழமைக்கு மாறாக பெருமளவு மீன்கள் நேற்று முன்தினம் கரை ஒதுங்கி காணப்பட்டன.

இது தொடர்பில் கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

இதுதொடர்பாக பேராசிரியர் அனில் பிரேமரத்ன மேலும் தெரிவித்தவை வருமாறு:-

கடற்பேரலை என்ற சுனாமி பேரலை ஏற்பட வேண்டுமாயின் கடலின் ஆழமான பகுதியில் அல்லது கரையோரப் பகுதிகளில் நிலநடுக்கம் ஏற்படவேண்டும்.

கடற்பகுதியில் 10 தொடக்கம் 20 கிலோமீற்றர் ஆழத்தில் நிலநடுக்கம் ஏற்பட்டால் தான் சுனாமி நிலைமை ஏற்படும். அவ்வாறு எதுவும் பதிவாகவில்லை.

இதனால், மீன்கள் பெருமளவில் கரைக்கு வருவதையிட்டு மீனவர்களோ பொதுமக்களோ அச்சம் கொள்ளத் தேவையில்லை என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

வெள்ளவத்தை கடற்கரையோர பிரதேசத்தில் மீன்கள் பெருமளவில் கரையொதுங்கியமை தொடர்பில் விசேட கவனம் செலுத்தப்பட்டுள்ளது.

இது தொடர்பில் வளிமண் டல திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் சரத் பிறேமலால் கருத்துத்தெரிவிக்கையில்-

கடலில் ஏற்படும் வெப்ப நிலை மாற்றம் காரணமாகவே இவ்வாறு மீன்கள் கரைக்கு வருகின்றன என்று அவர் குறிப்பிட்டுள்ளார். (க)

# இலங்கையில் எந்தவோர் இணையத்தளத்துக்கும் தடையில்லை என்கிறார் அமைச்சர் மங்கள சமரவீர!

கொழும்பு, டிசெ. 07

இலங்கையில் எந்தவொரு செய்தி இணையத் தளத்துக்கும் தடை விதிக்கப்படவில்லை என்று நிதி மற்றும் ஊடகத்துறை அமைச்சரான மங்கள சமரவீர தெரிவித்துள்ளார்.

இலங்கை உழைக்கும் ஊடகவியலாளர் சங்கம், கொழும்பில் நேற்றுமுன்தினம் ஏற்பாடு செய்திருந்த நிகழ்வு ஒன்றில் பங்கேற்று உரையாற்றியபோதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்-

இலங்கையில் சில செய்தி இணையத்தளங்கள் தடை செய்யப்பட்டுள்ளன என அண்மையில் செய்திகள் வெளியாகியிருந்தன.

ஆனால், எந்தவோர் இணையத்தளத்தையும் தடை செய்வதில் அர்த்தமில்லை.



அவ்வாறு தடை செய்யப்பட்டாலும் கூட பதிலி (proxy) இணையத்தளங்களின் ஊடாக அவற்றை அணுக முடியும் என்றும் அவர் கூறியுள்ளார்.

# கருத்தரங்கு

யாழ்ப்பாணம், டிசெ.07

யாழ்ப்பாணம் ஆய்வு அபிவிருத்திக்கான நிறுவனத்தின் ஏற்பாட்டில் நாளை மறுதினம் சனிக்கிழமை முற்பகல் 9 மணிக்கு கருத்தரங்கு ஒன்று இடம்பெறவுள்ளது.

‘புதிய அரசமைப்பும் நாமும்’ எனும் எனும் தொனிப் பொருளில் இடம் பெறவுள்ள இக் கருத்தரங்கு இல.121, இரண்டாம் குறுக்கு தெருவில் அமைந்துள்ள சிந்தனைக்கூடம் கேட்போர் கூடத்தில் இடம்பெறவுள்ளது.

இதில் யாழ்.பல்கலைகழக சட்டத்துறை விரிவுரையானர் திருமதி கோசலை மதன், வடக்கு, கிழக்கு மாகாண முன்னாள் பிரதி செயலாளர் சி. கிருஷ்ணானந்தன் ஆகியோர் கலந்துகொண்டு கருத்துரை வழங்கவுள்ளனர். (இ)

## தெற்கு அதிவேக நெடுஞ்சாலையின் வீதிப் போக்குவரத்து வழமைக்குத் திரும்பியது!




கொழும்பு, டிசெ. 07

தெற்கு அதிவேக நெடுஞ்சாலையில் இமதுவ மற்றும் கொக்மாதுவ இடையிலான வீதியில் போக்குவரத்துச் சேவைகள் வழமைபோல் இடம்பெறுகின்றன.

எரிவாயுவை எடுத்துச் சென்ற கொள்கலன் வாகனமொன்று விபத்துக்குள்ளானதால் இந்தப் பகுதியில் போக்குவரத்துக்குத் தடை ஏற்பட்டது.

இந்த விபத்தின் காரணமாக கொட்டாவையில் இருந்து சம்பவம் இடம்பெற்ற வீதி வரையில் முழுமையாக போக்குவரத்துக்கு இடையூறு ஏற்பட்டது என்றும் தெற்கு அதிவேக நெடுஞ்சாலை வீதி பராமரிப்புப் பிரிவு தெரிவித்தது.

# நெஸ்பி பிரபு வெளியிட்ட அறிக்கை பிரித்தானிய அரசின் நிலைப்பாடு அல்ல!

## கொழும்பிலும் உள்ள அந்நாட்டு தூதரகம் அறிக்கை



கொழும்பு, டிசெ. 07

இலங்கையின் பொறுப்புக் கூறல் விவகாரங்கள் தொடர்பாக பிரித்தானிய பிரபுக்கள் சபையில், நெஸ்பி பிரபு வெளியிட்ட அறிக்கை, பிரித்தானியாவின் நிலைப்பாட்டைப் பிரதிபலிக்கவில்லை என்று கொழும்பில் உள்ள பிரித்தானிய தூதரகம் தெரிவித்துள்ளது.

கடந்த செப்ரெம்பர் மாதம் பிரித்தானிய பிரபுக்கள் சபையில் உரையாற்றிய நெஸ்பி பிரபு, போர்க்குற்ற அழுத்தங்களில் இருந்து இலங்கை விடுவிக்கப்பட வேண்டும் என்று கோரியிருந்தார்.

ஐ.நா. நிபுணர்கள் குழுவின் அறிக்கையில் கூறப்பட்டிருந்தது போல, இறுதிக் கட்டப் போரில் 40 ஆயிரத்துக்கும் அதிகமான பொதுமக்கள் படுகொலை செய்யப்படவில்லை என்றும், 7000 தொடக்கம் 8000 வரையானோரே கொல்லப் பட்டனர் என்றும் அவர்களிலும் கால்வாசிப் பேர் விடுதலைப் புலிகளே என்றும் நெஸ்பி பிரபு கூறியிருந்தார்.

இது தொடர்பாக கொழும்பில் உள்ள பிரித்தானிய தூதரகம் வெளியிட்டுள்ள அறிக்கையிலேயே மேற்கண்டவாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

இதுதொடர்பில் அந்த அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளவை வருமாறு:-

பிரபுக்கள் சபையில் நெஸ்பி பிரபு, பிரித்தானிய அரசின் சார்பில் உரையாற்றவில்லை. ஒரு நாடாளுமன்ற உறுப்பினர்



என்ற வகையில் அவருக்கு தனது சொந்தக் கருத்தை வெளியிடும் உரிமை உள்ளது.

ஐ.நா. மனித உரிமைகள் பேரவையில், நிறைவேற்றப் பட்ட 30/1 தீர்மானம் மற்றும் அதனை மீள் உறுதிப்படுத்தி நிறைவேற்றப்பட்ட 34/1 தீர்மானம் ஆகியவற்றின்போது, உண்மை கண்டறியும் குழுவை நியமிப்பது உள்ளிட்ட இலங்கை அரசு அளித்துள்ள வாக்குறுதிகளை நிறைவேற்றுமாறு நாங்கள் தொடர்ந்து ஊக்கமளிப்போம் என்றும் பிரித்தானிய தூதரகம் தெரிவித்துள்ளது.

# அத்தியாவசிய பொருள்களுக்கு அதிகபட்ச சில்லறை விலை!

கொழும்பு, டிசெ. 07

அத்தியாவசிய பொருள்களான தேங்காய், பருப்பு, இறக்குமதி செய்யப்படும் கிழங்கு மற்றும் கருவாடு ஆகியவற்றின் அதிகபட்ச சில்லறை விலையை நிர்ணையிக்க நுகர்வோர் அதிகாரசபை தீர்மானித்துள்ளது.

இதன்படி தேங்காய் 75 ரூபாவாகவும், பருப்பு ஒரு கிலோ கிராம் 130 ரூபாவாகவும், இறக்குமதி செய்யப்படும் உருளைக் கிழக்கு ஒரு கிலோ கிராமின் அதிகபட்ச சில்லறை விலை 76 ரூபாவாகவும் நிர்ணயிக்கப்படவுள்ளது.

வாழ்க்கைச்செலவு குழுவில் எடுக்கப்பட்ட முடிவுக்கு அமைய இந்த உணவுப் பொருள்களுக்கான அதிகபட்ச சில்லறை விலை உள்ளடங்கிய வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப் படவுள்ளது என்றும் நுகர்வோர் அதிகார சபை தெரிவித்துள்ளது.

# தொடர்ச்சியாக வேலையற்ற பட்டதாரிகளை புறக்கணிக்கும் கிழக்கு மாகாண ஆளுநர்




கிழக்கு மாகாணத்தில் உள்ள வேலையற்ற பட்டதாரிகளைக் கிழக்கு மாகாண ஆளுநர் தொடர்ச்சியாகப் புறக்கணித்து வருகின்றார் என மட்டக்களப்பு மாவட்ட வேலையற்ற பட்டதாரிகள் கவலை தெரிவித்துள்ளனர்.

மட்டக்களப்பு மாவட்ட வேலையற்ற பட்டதாரிகள் தமது நியமனத்தை வலியுறுத்தி அமைதியானமுறையில் நேற்றுமுன்தினம் கவனவீர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

மட்டக்களப்பு-கொக்கட்டிச்சோலை முதலைக்குடா மகா வித்தியாலயத்திற்கு முன்பாக இந்தக் கவனவீர்ப்புப் போராட்டம் நடைபெற்றது.




முதலைக்குடா மகா வித்தியாலயத்தின் பரிசளிப்பு விழா நேற்றுமுன்தினம் காலை நடைபெறவிருந்த நிலையில் அந்த நிகழ்வுக்குக் கிழக்கு மாகாண ஆளுநர் ரோஹித போகல்லாகம பிரதம அதிதியாகக் கலந்து கொள்ளவிருந்தார்.

இந்த நிலையில், பாடசாலைக்கு முன்பாக ஒன்றுகூடிய வேலையற்ற பட்டதாரிகள் இந்த கவனவீர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

எனினும், இந்த நிகழ்வில் கிழக்கு மாகாண ஆளுநர் கலந்து கொள்ளாத நிலையில் கவனவீர்ப்புப் போராட்டத்தை நடத்திவிட்டுப் பட்டதாரிகள் அங்கிருந்து கலைந்து சென்றுள்ளனர். கிழக்கு மாகாண ஆளுநரைச் சந்தித்து தமது கோரிக்கைகள் அடங்கிய மகஜரைக் கையளிக்க பல தடவைகள் முனைந்த போதும் அவர் தங்களைப் புறக்கணித்து விட்டார் என வேலையற்ற பட்டதாரிகள் கூறியுள்ளனர்.

கிழக்கு மாகாணசபையில் நடத்தப்பட்ட போட்டிப் பரீட்சையில் சித்தியடைந்தும், நேர்முகத்தேர்வில் சித்தியடைந்தும் தமக்கு ஏன் நியமனம் வழங்கப்படவில்லையென பட்டதாரிகள் கேள்வியெழுப்புகின்றனர்.

அரசே நியமனம் வழங்கு, இதுதான் நல்லாட்சியா, ஆசிரியர் போட்டிப் பரீட்சையில் 40 புள்ளிகளுக்கு மேல் பெற்றுசித்தியடைந்த அனைவருக்கும் நியமனம் வழங்கு, எமது கண்ணீருக்கு பதில் வழங்கு, ஒரே மாகாணத்தில் வெட்டுப்புள்ளி எதற்கு போன்ற வாசகங்கள் தாங்கிய பதாகைகளையும் போராட்டக்காரர்கள் ஏந்தியிருந்தனர்.

## திருட்டுத் தொலைபேசி வைத்திருந்த சந்தேகநபருக்கு விளக்கமறியல்

திருகோணமலை - குச்சவெளி பகுதியில் 50 ஆயிரம் ரூபா பெறுமதியான தொலைபேசியொன்றை வைத்திருந்த நபர் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

இது தொடர்பான வழக்கு நேற்றுமுன்தினம் திருகோணமலை நீதிமன்ற நீதிவான் எம்.எச்.எம்.ஹம்ஸா முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

இதன்போதே சந்தேகநபரை எதிர்வரும் 13ஆம் திகதி வரையில் விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. சம்பவம் தொடர்பில், குச்சவெளிப் பகுதியைச் சேர்ந்த 40 வயதுடைய ஒருவரே விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார். சந்தேகநபர் ஐம்பதாயிரம் ரூபாய் பெறுமதியான திருட்டு தொலைபேசியொன்றை வைத்துள்ளார் எனப் பொலிஸாருக்குத் தகவல் கிடைத்தது.

இதனைத் தொடர்ந்து கைது செய்யப்பட்ட நபரை பொலிஸார் திருகோணமலை நீதிமன்றில் முன்னிலைப்படுத்திய போதே விளக்கமறியலில் வைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டுள்ளார்.

(ப)

## கேரளா கஞ்சாவுடன் ஒருவர் கைது

திருகோணமலை - மூதூர் பொலிஸ் பிரிவிற்குட்பட்ட பாலத்தோப்புப் பிரதேசத்தில் கேரளக் கஞ்சாவுடன் ஒருவர் போதைபொருள் ஒழிப்புப் பிரிவினரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

இந்தச் சம்பவம், நேற்று முன்தினம் இடம்பெற்றுள்ளது. 36 வயதுடைய பாலத்தோப்பில் வசிக்கும் நபர் ஒருவரே இவ்வாறு கைதுசெய்யப்பட்டுள்ளார்.

கைதுசெய்யப்பட்டவரிடம் இருந்து 450 கிராம் கேரளக் கஞ்சா கைப்பற்றப்பட்டுள்ளது.

கைதுசெய்யப்பட்டவரையும், கேரளா கஞ்சாவையும் மூதூர் பொலிஸாரிடம், பிராந்தியப் போதைபொருள் ஒழிப்புப் பிரிவினர் ஒப்படைத்தனர்.

## தேக்கு மரக்குற்றிகளை கடத்தியவர்கள் கைது



மட்டக்களப்பு, டிசெ.07

மட்டக்களப்பு- தொப்பிகல அரசாங்க காட்டில் சட்டவிரோதமாக வெட்டப்பட்டு இரண்டு உழவு இயந்திரங்களில் ஏற்றிச்செல்லப்பட்ட ஒரு தொகுதி தேக்கு மரக் குற்றிகளை கரடியனாறு பொலிஸார் கைப்பற்றியுள்ளனர்.

சம்பவநேரம் தப்பியோடிய இரண்டு சாரதிகளும் பின்னர் பொலிஸ் நிலையத்தில் சரணடைந்துள்ளனர் எனக் கரடியனாறு பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி டி.எம். ஏ.சமரகோன் தெரிவித்துள்ளார்.

பொதுமக்கள் மூலமாகப் பொலிஸாருக்குக்கிடைத்த ரகசியத் தகவலையடுத்து ஈரளக்குளம் காட்டுப் பிரதேசத்தில் மறைந்திருந்த பொலிஸ் குழுவினர் இச் சட்டவிரோத மரக்கடத்தலை முறியடித்துள்ளனர்.

இந்த இரண்டு உழவு இயந்திரங்களிலும் முப்பது மரக்குற்றிகள் காணப்பட்டன எனவும் இவைகள் ஓட்டமாவடிப் பகுதியிலுள்ள மர ஆலையொன்றிற்கு கொண்டு செல்லப்பட இருந்தன எனவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

உழவு இயந்திரத்தின் சாரதிகள் மற்றும் மரக்குற்றிகளை ஏறாவூர் சுற்றுலா நீதி மன்றில் முன்னிலைப்படுத்தவுள்ளேளாம் எனவும் பொலிஸார் குறிப்பிட்டனர்.

(ப)

## டெங்கு விழிப்புணர்வு கருத்தரங்கும் சிரமதானமும்



களுவாஞ்சிக்குடி ஆதார வைத்தியசாலை வைத்தியர்கள், தாதியர்கள் மற்றும் ஊழியர்கள் இணைந்து நேற்று பட்டிருப்பு தேசிய பாடசாலை மாணவர்களுக்கான டெங்கு விழிப்புணர்வு கருத்தரங்கொன்றையும் அதனைத் தொடர்ந்து பாடசாலை வளாகத்தில் டெங்கு ஒழிப்பு சிரமதானப் பணியொன்றையும் ஒழுங்கு செய்திருந்தனர்.

பாடசாலை பிரதி அதிபர் ரீ.ஜனேந்திரராஜா தலைமையில் இடம்பெற்ற மேற்படி நிகழ்வில் களுவாஞ்சிக்குடி ஆதார வைத்தியசாலை வைத்திய அத்தியட்சகர் வைத்தியர் ஜீ.சுகுணன், தாதி உத்தியோகத்தர்களான திருமதி எஸ்.ஜீவன், ஏ.எஸ்.எம்.நசுஹான் ஆகியோர் மாணவர்களுக்கான டெங்கு ஒழிப்பு சம்பந்தமான விரிவுரையை நிகழ்த்தினர். இந் நிகழ்வில் வைத்தியசாலையின் பல் வைத்தியர் ஏ.எச்.எம்.சஸ்லி மற்றும் பாட சாலை ஆசிரியர்களும் மாணவர்களும் கலந்து கொண்டனர்.

# மஹிந்த இல்லாமலேயே தேர்தலில் சுதந்திரக் கட்சி வெற்றி பெறும்



அமைச்சர் மஹிந்த சமரசிங்க கூறுகிறார்!

கொழும்பு, டிசெ. 07

மஹிந்த ராஜபக்ஷ இல்லாமலேயே எதிர்வரும் உள்ளூராட்சித் தேர்தல்களில் சிறிலங்கா சுதந்திரக் கட்சி வெற்றி பெறும் என்று அந்தக் கட்சியைச் சேர்ந்த முக்கிய தலைவர்களில் ஒருவரான அமைச்சர் மஹிந்த சமரசிங்க தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

தேர்தல்களில் சிறிலங்கா சுதந்திரக் கட்சிக்கு ஆதரவளிக்க முடியாது என்று கூறும் உரிமை கூட கூட்டு எதிரணிக்குக் கிடையாது.

மஹிந்த ராஜபக்ஷ இல்லாமலேயே நாங்கள் நிச்சயம் உள்ளூராட்சித் தேர்தலில் வெற்றி பெறுவோம்.

முன்னர் இருந்ததை விட இப்போது அதிகமானவர்கள் மைத்திரிபால சிறிசேனவுடன் இணைந்துள்ளனர்.

சிறிலங்கா சுதந்திரக் கட்சியைத் தவிர்த்து வெறெந்தக் கட்சியையும் கூட்டு எதிரணி ஆதரிப்பது சட்ட விரோதமானது.

அவர்கள் வேறொரு கட்சியுடன் செல்வது அல்லது அதனுடன் இணைந்து செயற்படுவது, கட்சியின் யாப்புக்கு எதிரானது.

எனவே, அவர்களுக்கு எதிராக நாங்கள் நடவடிக்கை எடுக்க வேண்டிய நிலை ஏற்படும்.

கதவுகள் இன்னமும் திறந்தே உள்ளன. ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுடன் அவர்கள் இணைந்து கொள்ளமுடியும். சிறிலங்கா சுதந்திரக் கட்சியைப் பலப்படுத்த முடியும்.

சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் உறுப்பினராக நாடாளு மன்றத்தில் இருந்துகொண்டு, கூட்டு எதிரணியினர் எவ்வாறு சிறிலங்கா பொதுஜன முன்னணிக்கு வாக்களிக்குமாறு கோர முடியும்?

சிறிலங்கா சுதந்திரக் கட்சியை அழிப்பதற்காக உருவாக்கப்பட்டுள்ள ஓர் அரசியல் கட்சியே சிறிலங்கா பொதுஜன முன்னணி.

நாங்கள் நவீன தொழில் நுட்பத்தை பயன்படுத்தி, ஆவணங்கள், ஒளிப்படங்களை ஆவணப்படுத்துகிறோம். எங்கெங்கு, எப்போது, கூட்டு எதிரணியினர் சிறிலங்கா பொதுஜன முன்னணியினருக்கு ஆதரவாக பரப்புரை செய்தனர் என்று ஆவணப்படுத்துவோம்.

அவர்கள் சிறிலங்கா சுதந்திரக் கட்சியை அழிக்க முயன்றால், சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் உறுப்பினர்களாக நாடாளுமன்றத்திலோ, மாகாண சபைகளிலோ அங்கம் வகிக்க முடியாது என்றும் அவர் எச்சரித்துள்ளார்.

## 'பாலியல் இம்சைகள்' இணையத்தில் நாளை ஆய்வுக் கருத்தரங்கு

யாழ்ப்பாணம், டிசெ.07

யாழ் மாவட்ட அரச சார்பற்ற நிறுவனங்களின் இணையத்தின் ஏற்பாட்டில் "யாழ் சமூகம் எதிர்கொள்ளும் பாலியல் இம்சைகள்" எனும் தலைப்பிலான ஆய்வுக் கருத்தரங்கு நாளை வெள்ளிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு இடம்பெறும்.

இல. யாழ். 76 கோவில் வீதியிலுள்ள இணையத்தின் அலுவலகத்தில் நடைபெறும். இந்தக் கருத்தரங்கில் வளவாளராக லண்டனில் இருந்து வருகை தந்துள்ள செல்வி சியாமளா செல்வரட்ணம் கருத்துரை வழங்குவார். (இ)

## பொது மக்கள் மத்தியில் பீதியை ஏற்படுத்தவேண்டாம்!




கொழும்பு, டிசெ. 07

சந்தேகத்திற்கு உரிய விடயத்தை அடிப்படையாகக் கொண்டு பொதுமக்களை தேவையற்ற பீதிக்கு உட்படுத்தக்கூடாது. இதனால், ஏனைய அனர்த்தங்கள் ஏற்படக்கூடும் என்று இடர் முகாமைத்துவ மத்திய நிலையத்தின் பிரதிப் பணிப்பாளர் கொடிப்பிலி தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்-

பாணந்துறை பிரதேசத்தில் சுனாமி அனர்த்தம் ஏற்படக்கூடிய நிலை இருக்கிறது என சமூக ஊடகங்களில் தகவல் பரிமாறப்பட்டுள்ளது. இது உண்மைக்கு புறம்பானது.

சுனாமி அல்லது திடீர் அனர்த்தம் தொடர்பான தகவல்களை அறிந்து கொள்வதற்கு 24 மணித்தியாலம் செயற்படும் 117 என்ற தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளமுடியும் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

## 75,000 ஸ்மார்ட் அடையாள அட்டைகள் விநியோகம்!

கொழும்பு, டிசெ. 07

ஆட்களை பதிவு செய்யும் திணைக்களத்தினால் அறிமுகம் செய்யப்பட்ட டிஜிட்டல் தொழிநுட்பத்திலான தேசிய அடையாள அட்டையை விநியோகிக்கும் பணியில் இதுவரை 75 ஆயிரம் புதிய ஸ்மார்ட் அடையாள அட்டைகள் விநியோகிக்கப்பட்டுள்ளன.

இந்த அடையாள அட்டையை பெற்றுக்கொள்வது தொடர்பில் மக்கள் ஆர்வத்துடன் இருக்கின்றனர் என ஆட்பதிவு திணைக்களத்தின் ஆணையாளர் நாயகம் வியானி குணத்திலக்க தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

நாளாந்தம் சுமார் 1,500 பேருக்கு விநியோகிக்கப்படுகிறது. 15 வயதை பூர்த்தி செய்தவர்களுக்கு தேசிய அடையாள அட்டையை கோருவோருக்கும் தமது தேசிய அடையாள அட்டை சீர்குலைந்து காணாமற்போனோர்



உள்ளிட்டோருக்கு இந்த ஸ்மாட் தேசிய அடையாள அட்டையை பெற்றுக்கொள்ளமுடியும்.

இந்த ஸ்மார்ட் தேசிய அடையாள அட்டை கடந்த ஒக்ரோபர் மாதம் 27 ஆம் திகதி முதல் விநியோகிக்கப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

உள்ளூராட்சி மன்றத் தேர்தல் இடம்பெறவுள்ளதால் தேசிய அடையாள அட் டையை பெற்றுக் கொள்வோரின் எண்ணிக்கை அதிகரிக்கக் கூடும்.

புதிய ஸ்மார்ட் தேசிய அடையாள அட்டையில் 3 மொழிகளிலும் தகவல் உள்ளடக்கப்பட்டுள்ளதுடன் இதற்கான விண்ணப்பதாரர்களின் புகைப்படம் உரிய தரம் தொடர்பான பிரிவின் சிபாரிசுக்கு அமைவாகவே இது பெற்றுக் கொள்ளப்படுகின்றது.

இதேவேளை, எதிர்வரும் காலங்களில்தேசிய அடையாளஅட்டையில் சம்பந்தப்பட்டவர்களின் கை விரல் அடையாளம் உள்ளடக்கப்படுகின்றது.

இதற்கு வசதியாக சட்டத்திலும் திருத்தங்கள் மேற்கொள்ளப்படவுள்ளன என்று ஆட்பதிவு திணைக்களத்தின் ஆணையாளர் நாயகம் மேலும் தெரிவித்துள்ளார்.

## சைவ பரிபாலன சபையில் நாளை நாவலர் குருபூசை

யாழ்ப்பாணம், டிசெ.07

சைவ பரிபாலனசபை நடத்தும் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் குருபூசையும் விழாவும் நாளை வெள்ளிக்கிழமை காலை 8.00 மணிக்கு சபையின் நாவலர் ஆச்சிரம மண்டபத்தில் சபையின் தலைவர் சி.வசந்தசேனன் தலைமையில் நடைபெறும்.

இந்தப் பெருவிழா நிகழ்வுக்கு பிரதம விருந்தினராக யாழ். அரச அதிபர் நாகலிங்கம் வேதநாயகனும் சிறப்பு விருந்தினராக கனடா சைவ சித்தாந்த பீடத்தைச் சேர்ந்த இ.லம்போதரனும், கௌரவ விருந்தினராக யாழ் இந்து மகளிர் கல்லூரி அதிபர் திருமதி மிமலாதேவி விமலநாதனும் கலந்து கொள்வர்.

நல்லை ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாச்சாரிய சுவாமிகளின் ஆசியுரையை அடுத்து சிறப்பு சொற்பொழிவை பலாலி ஆசிரியர் கலாசாலை ஓய்வு நிலை அதிபர் சோ.பத்மநாதன் ஆற்றுவார். அதை அடுத்து யாழ். இந்துக் மகளிர் கல்லூரி ஆசிரியர் திருமதி. பாலகுமாரி அழகுதாஸ் சொற்பொழிவு நிகழ்த்துவார்.

(இ)

## கல்வி முறையில் மாற்றங்கள்!

கொழும்பு, டிசெ. 07

இலங்கையின் கல்வி முறையில் மாற்றங்களை செய்து கொண்டிருக்கிறோம் என கல்வி அமைச்சர் அகிலவிராஜ் காரிய வசம் கூறியுள்ளார்.

கொழும்பில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

இதுதொடர்பில் அவர் மலும் தெரிவித்தவை வருமாறு :-

தேசிய கொள்கை சீர்திருத்தங்களை மேலும் பலப்படுத்தி அதனை தொடர்ந்தும் முன்னெடுத்துச் செல்லவும் புதிதாக உருவாகும் தேவைகள் மற்றும் சவால்களுக்கு முகங்கொடுக்கக் கூடிய வகையிலும் பல முன்மொழிவுகள் பலரால் முன்மொழியப்பட்டுள்ளன.

இந்த நிலையில், எதிர்காலத்திற்கு பொருத்தமான விதத்தில் பாடசாலைக் கல்வி முறையை மாற்றம் செய்து நாட்டுக்கு பொருத்தமான புதிய பரம்பரையை உருவாக்குவதே எமது நோக்கம் என்றும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார். (கு)

## அமைச்சின் பக்கம் தாமதம் ஏதுமில்லை

### தேர்தல் குறித்து அமைச்சர் பைஸர்




தேர்தல் நடத்தப்படுவது தொடர்பில் எமது அமைச்சின் பக்கம் எந்தத் தாமதமும் இல்லை என உள்ளூராட்சி மற்றும் மாகாண சபைகள் அமைச்சர் பைஸர் முஸ்தபா தெரிவித்தார். கொழும்பில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பின்போது, ஊடகவியலாளர் ஒருவர் எழுப்பிய கேள்விக்குப் பதிலளிக்கும்போதே அவர் இதனைக் கூறினார்.

எனக்குப் பந்து வீசாமல் விளையாட முடியாது. அதிகாரத்துக்கு உட்பட்டே நாம் செயற்பட்டு வருகின்றோம். தேர்தல் தொடர்பாக அமைச்சர்களிடம் இருந்து முழு ஆதரவு கிடைக்கவில்லை. சுயாதீனமாக நாம் செயற்படவில்லை எனத் தேர்தல் ஆணையாளர் தெரிவித்துள்ளார். எனவே பெப்ரவரி 17ஆம் திகதிக்கு முன்னர் தேர்தல் நடைபெறுமா? என பைஸர் முஸ்தபாவிடம் கேள்வி எழுப்பப்பட்டது.

இதற்குப் பதிலளித்த அமைச்சர், தேர்தல் நடத்தப்படும் திகதி தொடர்பில் தேர்தல் ஆணையகம் எடுக்கும் முடிவுகளுக்கு நாட்டின் பிரஜை என்ற வகையிலும், அமைச்சர் என்ற வகையிலும் நான் கட்டுப்பட்டே ஆக வேண்டும்.

எமது அமைச்சுத் தரப்பில் தேர்தல் நடத்துவதற்குச் சகல செயற்பாடுகளையும் முழுமையாகச் செய்து முடித்துவிட்டோம். எமது பக்கத்தில் எந்தவித கால தாமதமும் இல்லை.

தேர்தல் ஆணையாளர் என்ற வகையில் அவர் தனது பணிகளை சரியாகவே செய்து வருகின்றார். இந்த விடயத்தில் அவர் தேர்தலை தாமதப்படுத்துகின்றார் என்றால் அவரிடம் கேள்விகளைக் கேளுங்கள்.

என் மீது குற்றச்சாட்டு இருந்தால் என்னிடம் கேளுங்கள். எனக்கும் தேர்தல் ஆணையாளருக்கும் இடையில் முரண்பாடுகளைத் தோற்றுவிக்க வேண்டாம் - என்றார். (ஐ)

## காலி ஆடை விற்பனை நிலையம் தீயில் சேதம்!




கொழும்பு, டிசெ. 07

காலி கழுவெல்லை பிரதேசத்தில் நேற்றுக் காலை 9 மணியளவில் மூன்று மாடிகளைக் கொண்ட ஆடை விற்பனைக் கடை ஒன்றில் தீபரவல் ஏற்பட்டுள்ளது.

காலி மாநகரசபையின் தீயணைப்புப் பிரிவினர் தீயைக் கட்டுப்படுத்தும் முயற்சியில் ஈடுபட்டனர் எனினும் அவர்களால் தீயை கட்டுப்படுத்த முடியவில்லை.

இந்தத் தீப்பரவலில் ஆடை விற்பனைக் கடை முழுமையாக சேதமடைந்து உள்ளது. தீயால் ஏற்பட்டுள்ள இழப்புக்கள் குறித்து இதுவரை மதிப்பிடப்படவில்லை எனவும் தீப்பரவலுக்கான காரணம் இதுவரை கண்டறியப்படவில்லை எனவும் தெரிவிக்கப்படுகிறது.

இந்தத் தீவிபத்து தொடர்பான மேலதிக விசாரணைகளை பொலிஸார் ஆரம்பித்துள்ளனர். (க)

## தினசரி ராசி பலன் 07.12.2017

2017 ஆம் ஆண்டு ஏவிளம்பி வருடம் கார்த்திகைத்திங்கள் 22 ஆம் நாள் வியாழக்கிழமை. சதுர்த்தசி காலை 7.15 மணி வரை அதன் பின் பஞ்சமி. இ. 4.45 மணி வரை. பின்னர் ஷஷ்டி. நட்சத்திரம் பூசம் இரவு 7.54 மணி வரை. பின்னர் ஆயிலியம். அமிர்த சித்த யோகம் முழுவதும்.

**ராகுகாலம்** - பகல் 1.28 மணி முதல் 2.54 மணி வரை

**சுபநேரம்** - காலை 7.54 மணி முதல் 9.23 மணி வரை

**திவசம் செய்ய வேண்டிய திதி**- கார்த்திகை மாத தேய்பிறை

**பிறந்த நட்சத்திர வழிபாடு:** பூசம்

**'ஜோதிடமணி' பிரம்மஸ்ரீ சி.ஜெகதீஸ்வரசர்மா ஜே.பி.**

**மேஷம்:** சஞ்சலமான நாள். பணவரவு குறையும். மனதில் கவலை, யோசனை அதிகரிக்கும். செய்யும் தொழிலில் கடுமையாக உழைக்க வேண்டி வரும். எவ்வளவு கவனமாகச்செயற்பட்டாலும் தடுமாற்றம் உண்டாகும்.

**ரிஷபம்:** சமபலன்கள் காணப்படுகின்றன. பொருள் வரவு சுமாராக இருக்கும். வியாபாரத்தில் போட்டிகள் இருக்கும். கொடுக்கல், வாங்கலில் தாமதமாகப் பணம் வந்து சேரும். கடுமையாக உழைக்க வேண்டி வரும்.

**மிதுனம்:** யோகமான நாள். பொருளாதாரம் வளமாக இருக்கும். விரும்பியபடி தொழில் வாய்ப்புகள் அமையும். குடும்ப உறவு பலப்படும். சிலருக்கு அரச வழியால் புதிய வீடுகள் அமையும்.

**கடகம்:** மேன்மையான நாள். பொருளாதாரம் வளர்ச்சி அடையும். திடீர் அதிஷ்டம் , தொழில் வாய்ப்பு அமையும். வியாபாரம் தொழிலாளர்கள் ஒத்துழைப்பால் சிறப்பாக அமையும்.

**சிம்மம்:** கவலையான நாள். பொருளாதாரம் நலிவுறும். எதிர்பார்த்த பணவரவு தாமதமாகும். குடும் பத்தில் வீண் பிரச்சினைகள் தலை தூக்கும். வேலைப்பளு அதிகரிக்கும்.

**கன்னி:** உயர்வான நாள். வருமானம் உயர்வடையும். வேலை தேடுவோருக்கு அதற்கான வாய்ப்புகள் அமையும். சகோதர உறவு வலுவடையும். வியாபாரத்தில் பல யுக்திகள் கையாண்டு முன்னேற்றம் அடைவார்கள்.

**துலாம்:** சமபலன்கள் காணப்படுகின்றன. வருமானம் சுமாராக இருக்கும். தொழிலில் பலசோதனை வந்தாலும் சமாளிக்கக்கூடியதாக இருக்கும். வியாபாரத்தில் எதிர்பார்த்த லாபம் கிடைக்கும்.

**விருச்சிகம்:** ஆக்கபூர்வமான நாள். பொருளாதாரம் ஏற்றமடையும். குடும்ப உறவு மேம்படும். வியாபாரம் விறுவிறுப்பாக நடக்கும். உத்தியோகத்தர்களின் கோரிக்கைகள் நிறைவேறும்.

**தனுசு:** யோசனையான நாள். வருமானம் நலிவடையும். குடும்பத்தில் உட்பூசல்கள் உண்டாகும். பணிபுரியும் இடத்தில் மறைமுக எதிரிகளால் தொல்லை உண்டாகும். வியாபாரத்தில் தேக்கநிலை உண்டாகும்.

**மகரம்:** மத்திம பலன்கள் காணப்படுகின்றன. வரவும் செலவும் சரிசமமாக இருக்கும். சுய தொழிலில் ஓரளவு முன்னேற்றம் உண்டாகும். மாணவர்களின் கல்வியில் தேக்கம் இருக்கும்.

**கும்பம்:** நன்மையான நாள். எடுத்த காரியத்தில் நன்மையும் விரைந்து முடிக்கும் திறமையும் உண்டாகும். பொருளாதார உயர்வு உண்டாகும். வியாபாரத்தில் திறமைசாலியான பணியாளர்களால் முன்னேற்றம் ஏற்படும்.

**மீனம்:** இனிமையான நாள். பொருளாதாரம் வளம் பெறும். வியாபாரிகளுக்கு முன்னேற்றம் உண்டாகும். குடும்பத்தில் அன்னியோன்யம் அதிகரிக்கும். தாயார் வழி சொத்துகள் கைக்கு வந்து சேரும்.

சந்திராட்டமநாள்: மூலம், பூராடம், உத்தராடம் 1ஆம் பாதம் ஆகிய நட்சத்திரங்களில் பிறந்தவர்கள் இன்று சுப காரியங்கள் தொடங்குவதைத் தவிர்க்க வேண்டும்.

## கணினி எழுத்தறிவில் ஆண்களே முன்னிலை!

### புள்ளிவிவரத் திணைக்களத்தின் அறிக்கை இப்படிக் கூறுகின்றது

கொழும்பு, டிசெ.07

இலங்கையின் 5 தொடக்கம் 69 வரையான வயதுப் பிரிவு களுக்கிடையே கணினி எழுத்தறிவு 28.3 சதவீதமாக மதிப்பிடப்பட்டிருக்கின்றது என்று தொகைமதிப்புப் புள்ளி விவரத் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் கலாநிதி அமர சதரசிங்க தெரிவித்தார்.

அத்துடன் கணினி, எழுத்தறிவில் பெண்களைவிட ஆண்கள் 4.6 சதவீதம் உயர்வாக உள்ளனர் எனவும் அவர் குறிப்பிட்டார்.


2017ஆண்டின் முதல் ஆறு மாதங்களில் நடத்திய ஆய்வுகளின் அறிக்கையைத் தொகைமதிப்புப் புள்ளிவிவரத் திணைக்களம் வெளியிட்டுள்ளது.

கிராம மற்றும் தோட்டப் பிரிவுகளின் கணினி எழுத்தறிவு ஆனது முறையே 26.5 மற்றும் 9.5 சதவீதமாக இருக்கையில் வதிவிடப் பிரிவுகளுக்கிடையில் 41.1 சதவீத உயர்ந்த கணினி எழுத்தறிவை நகரப் பிரிவு வெளிப்படுத்தியது.

அளவீட்டுப் பிரிவுகளின் படி ஆண்களுக்கிடையிலுள்ள கணினி எழுத்தறிவு 30.7 சதவீதமாகவும் பெண்களின் கணினி எழுத்தறிவு 26.1 சதவீதமாகவும் உள்ளன. எல்லா வயதுப் பிரிவினர்களை ஒப்பிடும்போது 15 தொடக்கம் 19 வரை இடைப்பட்ட வயதினர் 60.7 சதவீதமுடைய உயர்ந்த கணினி எழுத்தறிவு உள்ளது.

கிராமப் பிரிவு மற்றும் தோட்டப் பிரிவுகளுக்கானது முறையே 36.4 மற்றும் 16.4 சதவீதமாக இருக்கின்றபோது நகரப் பிரிவுக்கான டிஜிற்றல் எழுத்தறிவு 54.5 சதவீதமாக உள்ளது. மாவட்ட ரீதியாகப் பதுளை மாவட்டம் இணையம் பாவிக்கும் சனத்தொகையில் 4.9 சதவீதத்தை உடைய குறைந்த சதவீதத்தைக் காட்டுகின்ற போது உயர்ந்த சதவீதம் (44.6%) கொழும்பு மாவட்டத்திலிருந்து வெளியிடப்பட்டது என்று தொகைமதிப்புப் புள்ளி விவரத் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் கலாநிதி அமர சதரசிங்க மேலும் தெரிவித்தார்.

# பாபர் மசூதி இடிப்பு ஒத்திகை நடந்தது எப்படி?







## நேரில் படம் பிடித்தவர் வெளியிடும் அதிர்ச்சித் தகவல்

டிசெம்பர் 6, 1992 ஆம் ஆண்டு உத்தரப் பிரதேசத்தில் உள்ள புனித நகரமான அயோத்தியில், 16ஆம் நூற்றாண்டில் கட்டப்பட்ட பாபர் மசூதி இந்துத்துவா கும்பலால் இடித்துத் தள்ளப்பட்டது. இதனைத் தொடர்ந்து நடைபெற்ற கலவரத்தில், 2 ஆயிரம் பேர் கொல்லப்பட்டனர். இச்சம்பவம் நடைபெறும் ஒரு நாள் முன்பாக, இந்து தன்னார்வலர்களுடன் இருந்த புகைப்பட கலைஞர் ப்ரவீன் ஜெயின் தனது புகைப்படங்களையும், அன்று நடந்த நிகழ்வுகளையும் தற்போது பி.பி.ஸியிடம் பகிர்ந்து கொண்டுள்ளார்.

1992 ஆம் ஆண்டு டிசெம்பர் 4 ஆம் திகதி பனி மாலைப் பொழுதில் அயோத்தியா சென்றடைந்தேன்.

பாபர் மசூதி பகுதியில் ஒன்று சேருவதாக எதிர்பார்க்கப்பட்ட இந்து தன்னார்வலர்கள் மற்றும் இந்துத்துவா தலைவர்களை பயனீர் செய்தித் தாளுக்காக புகைப்படம் எடுக்க நியமிக்கப்பட்டிருந்தேன்.


ஆயிரக்கணக்கான ஆர்.எஸ்.எஸ் அமைப்பு ஊழியர்கள் அங்கு ஏற்கனவே கூடியிருந்தனர். ஆர்.எஸ்.எஸ். அமைப்பு இந்துக்களின் கருத்தியல் ஆதாரமாகும். இதில் தற்போது நாட்டை ஆட்சி செய்யும் பாரதீய ஜனதா கட்சியும் அடங்கும்.

ராமர் பிறந்த இடமாக நம்பப்படும் அயோத்தியில், ராமர் கோயில் கட்ட அவர்கள் திட்டமிட்டிருந்தனர். மசூதியைத் தொடமாட்டோம் என்று அவர்கள் வாக்களித்திருந்தனர்.

ஆனால், டிசெம்பர் 5 ஆம் திகதி காலை பாபர் மசூதியை இடிப்பதற்கு, ஒத்திகை நடக்கப்போவதாக எனக்கு தெரிந்த பா.ஜ.க எம்.பி ஒருவர் கூறினார்.

எந்த ஊடகங்களுக்கும் இந்தத் தகவல் கசிந்துவிடக் கூடாது என்று மேலிடம் உத்தரவிட்டுள்ளது. ஆனால் நீ என் நண்பன் என்பதால் நான் உன்னிடம் சொல்கிறேன் என்று அந்த எம்.பி தெரிவித்தார்.

## 25 ஆண்டுகள் நேற்றுடன் நிறைவு



### தொண்டர் போன்று மாறு வேடத்தில்

காவித்துண்டு, தலைப் பாகை மற்றும் சிறப்பு நுழைவு 'பட்ஜ்' அணிந்து ஒரு தொண்டர் போல மாறுவேடமிட்டு, மசூதிக்கு அருகில் இருந்த மைதானத்திற்கு அழைத்துச் செல்லப்பட்டேன். காவித்துண்டு மற்றும் தலைப்பாகை அணிந்த ஆயிரக்கணக்கான தொண்டர்கள் அங்கு கூடியிருந்தனர்.

ஒத்திகையை புகைப் படம் எடுக்க இதுதான் ஒரே வழி. என்னுடனே இருந்து தொண்டர்கள் போல கோஷங்களை எழுப்பு. இப்படி செய்தால் நீ பாதுகாப்பாக இருப்பாய் என்று ஒரு செயலர் என்னிடம் கூறினார்.


என்னருகே வந்த நபர் ஒருவர், என் முன் நின்று என் கமராவை கீழே போடச் சொல்லி சைகை காண்பித்தார். அவரிடம் நான் என் 'பேட்ஜை' காண்பித்து அங்குள்ளவர்களைப் போல கத்தி கோஷமிட்டேன். பின்பு தூரத்திலிருந்த பெரிய கூட்டத்தை நோக்கி என்னை அவர் போகச் சொன்னார்.

### நம்ப முடியாத காட்சிகள்

என் கமராவை எடுத்து என் கண் முன் நடந்த நம்ப முடியாத காட்சிகளை புகைப்படம் எடுக்கத் தொடங்கினேன். இரும்புக்கம்பிகள், கோடரிகள், மண்வாரிகள் போன்றவற்றை வைத்திருந்த ஆண்களைப் பார்க்கும் போது அவர்கள் தொண்டர்கள் போல அல்ல, கட்டடத்தை தரைமட்டமாக்குவதையே தொழிலாக வைத்திருப்பவர்கள் போல இருந்தனர்.

பாபர் மசூதி இடிப்பு குறித்து விசாரிக்க அமைக்கப்பட்ட லிபரான் கமிஷன் 2009ஆம் ஆண்டு தாக்கல் செய்த அறிக்கையில்: ''பாபர் மசூதியை இடிப்பதற்கு முன்பு ஓர் ஒத்திகை மேற்கொள்ளப்பட்டதாக ஆணையத்திற்கு முன் கூறப்பட்டுள்ளது. இதற்கான புகைப் படங்களும் ஆணையப் பதிவுகளில் வைக்கப்பட்டுள்ளன. இதற்காக சிலருக்கு பயிற்சியளிக்கப்பட்டது குறித்த உறுதியான சான்று இல்லையென்றாலும், சில சூழ்நிலை ஆதாரங்கள் உள்ளன. மேலும், பாபர் மசூதியை இடிக்க கர சேவகர்களுக்கு பயிற்சி அளிக்கப்பட்டது என சில வாக்குமூலங்கள் சுட்டிக்காட்டுகின்றன.'' என்று கூறுகிறது.





தொண்டர்கள் கூட்டத்தில், முகத்தை கைக்குட்டையால் மூடிக் கொண்டிருந்த ஒருவரை நான் படம் பிடித்தேன். கயிறுகளாலும் இரும்பு சரடுகளாலும் இடிப்பு ஒத்திகை மேற்கொண்டிருந்தவர்களுக்கு அவர் கட்டளையிட்டுக் கொண்டிருந்தார். அவர் பார்ப்பதற்கு வலதுசாரி கட்சித் தலைவர்களில் ஒருவர் போல் இருந்தார். அதனால் முகத்தை காண்பிக்க அவர் விரும்பவில்லை.

### அணி வகுத்து வந்த தொண்டர்கள்

இடிப்பு ஒத்திகையை வெற்றிகரமாக முடித்த தொண்டர்கள், உற்சாகமடைந்து கோஷங்களை எழுப்பினர். உடனே, நான் என் கமராவை மறைத்துக்

(12ஆம் பக்கம் பார்க்க)



# “ஓ! அமெரிக்கா ...!! எங்கே போகிறாய்...?”

367

தொகுப்பு: பொன்.வேணு கிருஷ்ணா

**நேட்டோ நாடுகளின் கொள்கைகளில் ரஷ்யாவின் ஆக்ரோஷமான தலையீடு குறித்து குற்றஞ்சாட்டி கண்டித்து,அமெரிக்க மற்றும் ஐரோப்பிய ஊடகங்களில் ரஷ்யா மீதான ஒருமித்த தாக்குதல்கள், ஏகாதிபத்திய பாசாங்குத்தனத்தால் முற்றாக நிரம்பியுள்ளன. ரஷ்யா அதன் சொந்த மண்ணில் இராணுவ பயிற்சிகளை மேற்கொண்டு வருகிறது என்றால், நேட்டோ அதிகாரங்களோ ரஷ்யாவைச் சுற்றி வளைத்துஇ,ரஷ்யாவின் எல்லைகள் வரைக்குமே கூட அவற்றின் துருப்புகளுடன் அணிவகுத்துச் செல்கின்றன.**

இரண்டு வாரங்களுக்கு முன்னர், ரஷ்யாவுடன் சண்டையிடுவதற்காக அமெரிக்க மற்றும் ஐரோப்பிய துருப்புகளை அட்லாண்டிக் மற்றும் ஐரோப்பிய கண்டம் எங்கிலும் நகர்த்துவதற்கு கடற்படை தளங்களையும் மற்றும் படை தளவாடங்களுக்கான தளங்களையும் கட்டமைப்பது குறித்து விவாதிக்க நேட்டோ புரூசெல்ஸில் ஒரு மாநாட்டை நடத்தியது. அம் மாநாட்டு திட்டநிரலை மீளாய்வு செய்திருந்த ஜேர்மன் செய்தியிதழ் Der Spiegel , அப்பட்டமான வார்த்தைகளில் கூறுவதானால்: நேட்டோ ரஷ்யாவுடன் சாத்தியமாக கூடிய ஒரு போருக்குத் தயாரிப்பு செய்து வருகிறது, என்று நிறைவு செய்திருந்தது.

ரஷ்யாவில் போலவே, நேட்டோ அதிகாரிகளும் வங்கிகள் மற்றும் இராணுவத்தின் கட்டளைக்கு சமூக மற்றும் பொருளாதார வாழ்வு முழுவதையும் அடிபணிய வைக்கும் திட்டங்களுடன் அதுபோன்றவொரு போருக்குத் தயாராகி வருகின்றனர். உளவுத்துறை முகமைகள், பொலிஸ் மற்றும் வங்கிகளுடன் நேட்டோ அதன்போர்திட்டங்களைநெருக்கமாக ஒருங்கிணைத்து வருகிறது என்பதை நேட்டோ பொதுச்செயலாளர் ஜென்ஸ் ஸ்டொல்டென்பேர்க் புரூசெல்ஸ் மாநாட்டில் தெளிவுபடுத்தினார். அவர் கூறினார், இத்திட்டமிடலுக்கு'' ஒட்டுமொத்த அரசு அணுகுமுறை அவசியப்படுகிறது. ஆகவே நமது பாதுகாப்பு அமைச்சர்கள் இராணுவத் தேவைகளைக் குறித்து நமது உள்



துறை, நிதித்துறை மற்றும் போக்குவரத்து அமைச்சர்களுக்கு தெரியப்படுத்தி வைப்பது மிகவும் முக்கியமாகும், என்றார்.

மாஸ்கோவிலிருந்து பார்த்தால், பூமியைச் சுற்றிலும் அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் ஆக்ரோஷமான இராணுவ நடவடிக்கையின் அச்சுறுத்தல்கள், ரஷ்யாவை ஒரு சுருக்குக்கயிறால் கட்டி வருவதற்கு ஒத்துள்ளது. இந்த அச்சுறுத்தல்கள் ரஷ்யாவின் ஐரோப்பிய மேற்கு எல்லை மீது மட்டும் ஒருங்குவிந்தில்லை. ஓகஸ்ட்டில்



இருந்து, அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் பல முறை அணு ஆயுத நிர்மூலமாக்கலைக் கொண்டு வட கொரியாவை அச்சுறுத்தி உள்ளார், இந்நாடு கிழக்கு ரஷ்யா மற்றும் சீனா இரண்டினது எல்லையை ஒட்டியுள்ளது. மே மாதம் ட்ரம்ப் சவூதி அரேபியா சென்று, மத்திய கிழக்கில் ரஷ்யாவின் தெற்கில் உள்ள பிரதான கூட்டாளிகளான ஈரான் மற்றும் சிரியாவுக்கு எதிராக கடுமையான போக்கை எடுக்குமாறு ரியாத்திற்கு அழுத்தமளித்த பின்னர், அப்பிராந்தியமும் முற்றுமுதலான போரின் விளிம்பில் நிற்கிறது.

அதேநேரத்தில், மத்திய கிழக்கில் நிலைநிறுத்தப்பட்ட அமெரிக்க இராணுவ மற்றும் ஒத்துழைப்பு பணியாளர்களின் எண்ணிக்கை 54,325 ஆக திடீரென 30 சதவீதம் உயர்ந்திருப்பதை இவ்வாரம் தொடக்கத்தில் பென்டகன் வெளியிட்ட புள்ளிவிவரங்கள் எடுத்துக்காட்டுகின்றன.

ஒரு கால் நூற்றாண்டுக்கு முன்னர், 1991 இல், சோவியத் சோசலிச குடியரசுகளின் ஒன்றியம். (USSR) கலைக்கப்பட்டதன் பேரழிவுகரமான அரசியல் விளைவுகளை, மனிதஇனம் நேருக்கு நேராக முகங்கொடுத்து நிற்கிறது.


பனிப்போர் சகாப்தத்தின் ஏகாதிபத்திய பொய்கள், அதாவது சோவியத் சோசலிச குடியரசுகளின் ஒன்றியமே உலகின் இராணுவ ஆக்கிரமிப்புக்கு மூல காரணம் என்பது, அதன் கலைப்புக்குப் பின்னர் அபிவிருத்தி கண்ட ஏகாதிபத்திய தாக்குதலால் மறுத்தளிக்கப்பட்டன. ஈராக், யூகோஸ்லாவியா, ஆப்கானிஸ்தான், லிபியா மற்றும் சிரியா என சோவியத்தின் முன்னாள் நேச நாடுகளை நேட்டோ அதிகாரங்கள் தாக்கின அல்லது ஆக்கிரமித்தன, அல்லது வட கொரியா விடயத்தைப் போல அவற்றை தனிமைப்படுத்தி பொருளாதாரரீதியில் குரல்வளையை நெரித்தன, இவற்றினால் அந்த ஒட்டுமொத்த பிராந்தியங்களும் சீரழிந்தன.

**இந்த போர்கள் எல்லாம் மில்லியன் கணக்கானவர்களின் உயிர்களை மட்டும் விலையாக எடுக்கவில்லை, மாறாக இரண்டாம் உலக போருக்குப் பின்னர் மிகப்பெரிய அகதிகள் நெருக்கடியை உருவாக்கி, 60 மில்லியனுக்கும் அதிகமானவர்கள் தங்களின் வீடுகளை விட்டு வெளியேறி செல்லவும் நிர்ப்பந்தித்தது.**

ரஷ்யா முழுமையான போருக்கு தயாராக இருக்க வேண்டுமென புட்டினின் அழைப்பால் வெளிப்பட்டிருக்கும் நெருக்கடியானது, பல தசாப்தங்களாக உலகெங்கிலும் நேட்டோ சக்திகளால் தொடுக்கப்பட்ட மூர்க்கமான போர்களின் விளைவாகும். அமெரிக்க ஏகாதிபத்தியம் அதன் பொருளாதார வீழ்ச்சியை ஈடுகட்டவும், அதிகரித்து வரும் வேலைவாய்ப்பின்மை மற்றும் சமூக சீரழிவுகளால் உந்தப்பட்ட வர்க்க பதற்றங்களை வெளிப்புறமாக திருப்பிவிடவும் அதன்இராணுவ பலத்தைப் பிரயோகிப்பதற்கான முயற்சிகள் இருக்கையில், இவற்றுக்கு வாஷிங்டனின் ஐரோப்பிய கூட்டாளிகளும் தான் துணை போயினர் என்ற நிலையில், இவை உலகை ஓர் அணுஆயுத மனிதயின பேரழிவின் விளிம்புக்கு கொண்டு வந்துள்ளன.

இது இப்போது முதலாளித்துவ அரசின் உயர்மட்டங்களில் பகிரங்கமாக விவாதிக்கப்படுகிறது. காங்கிரஸில் விவாதிக்காமலேயே, தகவல் அளிக்காமலேயே அமெரிக்க அணு ஆயுதங்களை பயன்படுத்தி வட கொரியாவுக்கு எதிராக ஒரு முன்கூட்டி தாக்கும் போரை ஜனாதிபதி தொடங்கலாம் என்பதால், வெள்ளை மாளிகையில் இப்போதே கூட'' திட்டங்கள் ஆயத்த நிலையில் இருக்கக்கூடும் என்று கடந்த வாரம் அமெரிக்க செனட்டில் மாசசூசெட்ஸ் செனட்டர் எட் மார்கெ எச்சரித்தார். கட்டுப்படுத்த முடியாத ஒரு ஜனாதிபதிக்கு, வெள்ளை மாளிகை ஒரு ''வயோதிபரை பராமரிக்கும் மையமாக'' மாறியுள்ளது, அவர் நடைமுறையளவில் எந்நேரத்திலும் ஓர் அணுஆயுத போரைத் தொடங்க தேர்ந்தெடுக்கலாம் என்று மற்றொரு செனட்டர் தெரிவித்தார்.

சோவியத்திற்கு-பிந்தைய முதலாளித்துவ செல்வந்த தட்டுக்களின் திவாலான ரஷ்ய தேசியவாதத்தில் வேரூன்றிய கிரெம்ளினின் கொள்கை, ஏகாதிபத்திய போர் முனைவை எதிர்க்க தகைமையற்றதும் மற்றும் பிற்போக்குத்தனமானதும் ஆகும். சர்வதேச தொழிலாள வர்க்கத்தில் நிலவும் போர்-எதிர்ப்பு உணர்வுக்கு முறையிட விருப்பமின்றியும் மற்றும் முறையிட முடியாமலும், நிதியியல் ரீதியில் ஏகாதிபத்திய மையங்களைச் சார்ந்துள்ள கிரெம்ளின், நேட்டோ அதிகாரங்களுடனான உறவுகளை முறித்துக் கொள்ளும் முயற்சிக்கும் அவர்களுடன் ஒரு முற்றுமுதலான இராணுவ மோதல் அபாயத்தை எடுக்கும் முயற்சிக்கும் இடையே ஊசலாடிக் கொண்டிருக்கிறது. அதுபோன்றவொரு மோதல் விரைவிலேயே மனித இன உயிர் வாழ்வையே அச்சுறுத்தும் மிகப்



பெரியளவிலான அணுஆயுத போராக தீவிரமடையக்கூடும் என்பதை மூலோபாயவாதிகள் தெளிவாக முன்கணிக்கின்றனர்.

தொழிலாள வர்க்கம், சர்வதேச அளவில், போர் மற்றும் முதலாளித்துவத்திற்கு எதிரான அதன் புரட்சிகரமான எதிர்ப்பில், அரசியல்ரீதியில் நனவுபூர்வமாக தலையீடு செய்வதற்கு வெளியே, அங்கே போர் முனைவை நிறுத்துவதற்கு எந்த வழியும் இல்லை. பெருந்திரளான தொழிலாளர்களுக்கு இந்த அரசியல் நெருக்கடியின் ஆழம் குறித்தும், ஒரு பேரழிவுகரமான போரின் வேகமாக அதிகரித்து வரும் அபாயம் குறித்தும் முழுமையான புரிதல் இல்லை என்பதே இன்றைய சூழ்நிலையின் மிகப்பெரும் ஆபத்தாக உள்ளது.

(கேள்வி தொடரும்...)

தமிழர் நாடறிந்த இலக்கியச் செம்மல் கம்பவாரிதி இலங்கை ஜெயராஜ். கம்பன் என்றால் ஜெயராஜ் என்று எண்ணுமளவுக்கு இலக்கியக் கம்பனாய் உருவெடுத்தவர் அவர். அவருடைய இலக்கிய அனுபவத் தொகுப்பு இங்கு தினசரி தொடராகப் பிரசுரமாகின்றது. 'உன்னைச் சரணடைந்தேன்' என்ற அவரது தொகுப்பில் 'யாழில் கம்பன்' பற்றிய தொடர் பதிவு இது.





# உன்னைச் சரணடைந்தேன்

## கம்பவாரிதி ஜெயராஜின் இலக்கிய அனுபவப் பகிர்வு 28

## குருநாதரின் இரண்டாவது இலங்கைப் பயணம்

### குருநாதரின் பெருந்தன்மை

விழாவுக்காக ரயிலில் 15,20 பேரளவில், யாழிலிருந்து கொழும்பு சென்றோம். என் குருநாதர் பேராசிரியர் இராதாகிருஷ்ணனும், அவரது நண்பர் இராமேஸ்வரக் கம்பன் கழகச் செயலாளரும், தலைமன்னாரூடு யாழ். வந்து, பின்னர் எங்களுடன் அவர்கள் கொழும்பு வந்தனர். குருநாதருக்கும் நண்பருக்கும் இராமகிருஷ்ணமிஷன் மடத்திலும், மற்றவர்களுக்கு 'மோடி' மண்டபத்திலும், எஸ்.ரி.சிவநாயகம் அவர்களால் தங்கும் வசதி செய்யப்பட்டிருந்தது. நாம் கொழும்பு வந்து சேர்ந்ததும், வேறு வேறு இடங்களில், கழகத்தார்க்கு தங்கும் வசதி ஒழுங்கு செய்யப்பட்டதை அறிந்த குருநாதர், ''கம்பன் குடும்பத்தில் வேறுபாடு இருக்கக்கூடாது'' எனக் கூறி, வசதிக் குறைவுகளைப் பெரிதுபடுத்தாது, எங்களுடனேயே 'மோடி' மண்டபத் தில் நண்பருடன் வந்து தங்கினார். எங்களுக்கு, கொழும்பே தெரிந்திராத காலமது. எஸ்.ரி.சிவநாயகத்தைத் தவிர, வேறு எவரோடும் எங்களுக்கு அறிமுகம் இருக்கவில்லை. மூன்று நேர உணவுகளையும் கடையில்தான் வாங்கிச் சாப்பிட்டோம். அந்தண மரபுப்படி, வெங்காயம், பூண்டு ஆகியவற்றை உணவிற்சேர்க்காத குருநாதர், அவை கலந்து வந்த, கடையில் வாங்கிய 'பார்சல்' உணவைக் குறை சொல்லாது, அவற்றையெல்லாம் ஒதுக்கி வைத்துவிட்டு, வெறும் சோற்றை மட்டும் அள்ளி, தயிரோடு உண்டு சமாளித்ததை, இன்று நினைத்தாலும் என் நெஞ்சுருகும். குருநாதருடனான ஒப்பீட்டில், புள்ளியளவாய் தோன்ற முடியாத பேச்சாளர் பலர், தம் வசதிநோக்கி இன்று இடும் நிபந்தனைகளைக் காணும்போது, என் குருநாதரின் பெருந்தன்மைகளை நினைத்துக் கொள்வேன்.

### அப்பம் முப்பழம்!

அப்போது தினபதி பத்திரிகையில் வேலை செய்த, எங்கள் நண்பன் வித்தியாதரனிடம், எமக்கான உணவுப் பொறுப்பு வழங்கப்பட்டிருந்தது. அவன் குருநாதரின் பரம இரசிகனாய் ஆகியிருந்தான். ஒருநாள் மாலை விழாவில் உணவுப் பொறுப்பை மறந்து, அவன் குருநாதரின் பேச்சில் மயங்கி உட்கார்ந்துவிட்டான். விழா முடிந்த நேரத்தில் உணவுக் கடைகள் பூட்டப்பட்டுவிட்டதால், அன்று ஒருவருக்கும் உணவில்லாத நிலை. வித்துவான் வேலன் பசி பொறுக்கமாட்டார். அவருக்கு கடுமையான கோபம். ஆசிரியர் தேவன் உணவில்லை என முடிவுசெய்து உறங்கப்போய்விட்டார். குருநாதரும் நண்பரும் அது பற்றி எதுவித குறையுமில்லாது, முகம் சுழிக்காமல் இயல்பாய் இருந்தனர். வித்தியாதரன் பாடு பெரும் சங்கடமாகி விட்டது. அவன் பின்னர், எங்கெல்லாமோ அலைந்து திரிந்து, கொஞ்ச அப்பங்களையும் வாழைப் பழங்களையும், வாங்கிக் கொண்டு வந்தான். அதனை வைத்து அனைவரும் ஒருவாறு பசி தீர்த்தோம். எந்தவித குறையும் சொல்லாது, குருநாதரும் அன்று அரைப்பட்டினியுடன் கிடந்ததை, என்னால் மறக்கவே முடியாது

***

### எஸ்.ரி.சிவநாயகத்தின் பங்களிப்பு

அக்காலத்தில் சிந்தாமணி வாரப் பத்திரிகையில், எஸ்.ரி.சிவநாயகம் அவர்கள், கலை, இலக்கியம் தொடர்பாக ஒரு பகுதியை எழுதி வந்தார். அப்பகுதியில் அந்த வாரத்தில் நடைபெறும் இலக்கிய விழாக்கள் பற்றி, ''கூட்டத்தில் இத்தனை நாற்காலிகள் வெறுமையாய் இருந்தன'', ''இத்தனை பேர்தான் நிகழ்ச்சிக்கு வந்திருந்தனர்'', ''இன்னாரின் பேச்சைக் கேட்டு சபை அரைத் தூக்கத்திலிருந்தது'' என்றெல்லாம் அவர் கடுமையாய் விமர்சிப்பார். கொழும்பில் எங்கள் விழா நடந்தபோது, அதில் எந்தக் குறையும் இருக்கக் கூடாது என்பதற்காய், அவர் பெரிதும் பாடுபட்டார். விழா நடக்கும் முன்னரே, தான் எழுதும் இலக்கியப் பகுதியூடாக, நிறைய எதிர்பார்ப்பை உருவாக்கினார். தன் பத்திரிகைச் செல்வாக்கால், அனைத்துப் பத்திரிகைகளிலும் கம்பன் விழாவை முக்கியப்படுத்தி, செய்திகள் வரச் செய்தார். அப்போது தினகரன் பத்திரிகையில் கம்பன் விழாச் செய்தி, தலைப்புச் செய்தியாகவே வெளிவந்தது. அவரது முயற்சியால் கொழும்பு விழா பெரிய வெற்றி கண்டது. விழாவின் பின்னரும் அதன் வெற்றியைப் பாராட்டி, தான் எழுதும் இலக்கியப் பகுதியில் பெருமையோடு எழுதினார். அந்த விழாவின் மூலம், எங்களுக்கு அகில இலங்கை ரீதியாகப் புகழ்தேடித் தந்தார். கிட்டத்தட்ட கழகத்தின் போஷகர்போல இயங்கிப் பாடுபட்டார். என்றும் எங்கும் தன்னை வெளிப்படுத்திக் கொள்ளாத அவர், எங்கள் குருநாதரின் பேச்சில் மயங்கி, நிறைவு நாளில் தானாகக் கேட்டு, மேடையேறிப் பேசினார். எங்கள் குருநாதருக்குக் 'கம்பகலாநிதி' எனப்பட்டம் வழங்கினார். விழாவின் நிறைவு நாளில் ஒரு தந்தை போல, என்னையும் குமாரதாசனையும் கட்டி முத்தமிட்டு மகிழ்ந்தார். தன் துணைவியாரையும் எங்களை முத்தமிட்டு வாழ்த்தும்படி பணித்தார். அவர்கள் காட்டிய அன்பில் நாம் நெகிழ்ந்து போனோம்.

***

### அமைச்சர் இட்ட விருந்து

விழா முடிந்த அன்றிரவு, கொழும்பில் அப்போதுதான் ஆரம்பிக்கப்பட்டிருந்த 'சாந்தி விகார்' ஹோட்டலில், எங்களுக்கெல்லாம் அமைச்சர் இராஜதுரை விருந்திட்டார். நாங்கள் 'ஹோட்டலுக்கு' அழைத்துச் செல்லப்பட்டோம். வடை இருபத்தைந்து சதம் விற்ற அக்காலத்தில், 'சாந்தி விகார் ஹோட்டலில்' ஒரு வடையின் விலை ஏழு ரூபா. அப்போது எங்களால் இவ்விடயம் ஆச்சரியமாகப் பேசப்பட்டது. யாழ்ப்பாணத்திலிருந்து வந்திருந்த எங்களுக்கு, 'ஹோட்டலும்' அங்கிருந்த ஆடம்பரமும் பெரிய புதுமையாய்ப்பட்டன. நாம் அங்கு சென்றபோது, அமைச்சரும் எஸ்.ரி. சிவநாயகமும் அங்கு வந்து சேர்ந்திருக்கவில்லை. அவர்களின் வருகைக்காய் நாம் காத்திருக்க, திருமதி வேலன் அவர்கள், தன் விருப்பத்திற்கு உணவுகளை 'ஓடர்' செய்யத் தொடங்கினார். அவரை உட்கார வைப்பதற்குப் போதும் போதும் என்றாகி விட்டது. பிறகு அமைச்சரும், சிவநாயகமும் வந்து சேர்ந்து பிரமாண்ட விருந்திட்டனர். அமைச்சர் இராஜதுரை விருந்தின் முடிவில் உரை நிகழ்த்தியபொழுது, அடுத்து நடக்கவிருந்த எமது யாழ். விழாவை இரத்துச்செய்து, தான் தொடங்கவிருந்த விபுலானந்தர் இசைக்கல்லூரியின் தொடக்க விழாவில், குருநாதரைக் கலந்துகொள்ள வைக்கவேண்டும் எனக் கோரிக்கை வைத்தார். அவரைத் தொடர்ந்து உரையாற்றிய நான், அமைச்சரது உதவிகளுக்கு நன்றி சொல்லி, அமைத்த விழாவை இரத்துச் செய்ய முடியாதெனக்கூறி, அவர் கோரிக்கை நிராகரித்தேன். அமைச்சரது கோரிக்கையை நாம் நிராகரித்ததைக் கண்டு, வந்திருந்த அறிஞர்கள் பலர் ஆச்சரியப்பட்டனர். எங்களது ஆசிரியர் வித்துவான் ஆறுமுகம், ''அமைச்சற்ற கோரிக்கையை நிராகரித்து,தேவையில்லாமல் பகை தேடிப்போட்டீங்களடா!'' என்று யாழ் வரை புலம்பிக் கொண்டே வந்தார்.

***

### மறக்க முடியாத சில சம்பவங்கள்

இவ்விழாவில் மறக்கமுடியாத சில சம்பவங்கள் நிகழ்ந்தன. மோடி மண்டபத்தில் நாங்கள் தங்கியபோது, எங்கள் அறைகளுக்கு அடுத்த அறையில், ஓர் இளம் தம்பதியர் தங்கியிருந்தனர். நாம் அங்கு வந்ததுமே, தம்மை தமிழ் இரசிகர்களாய்க் காட்டி, அவர்கள் எங்களோடு ஒட்டி உறவாடத் தொடங்கினர். நாங்களும் அவர்களின் ஆர்வம்கண்டு மயங்கிப் போனோம். எங்களது அம்மயக்கத்தைப் பயன்படுத்தி, தங்களின் தங்குமிட செலவு, உணவுச் செலவு முதலிய எல்லாவற்றையும், எங்கள் தலையிலேயே கட்டினர். மூன்று நாள்களும் கழக உறுப்பினர் போல் தங்களையும் காட்டிக்கொண்டு, எங்கள் செலவிலேயே பயணம் செய்து, அமைச்சரின் விருந்து வரை வந்து கலந்துகொண்டனர். பின்னர்தான், அவர்கள் தம்பதியர் இல்லை எனும் உண்மை தெரிய வந்தது . கழக அளவில் ஏமாந்த என் முதல் அனுபவம் இது. விழா முடிந்து யாழ். திரும்புகையில், 'ரயிலில்' குருநாதருக்கும் நண்பருக்கும் மட்டும், படுக்கையிருக்கை பதிவு பண்ணியிருந்தார்கள். மற்ற அனைவருக்கும் சாதாரண இருக்கை ஒழுங்கு செய்யப்பட்டிருந்தது. வித்துவான் வேலன் குருநாதர்மேல் அன்பு நிறைந்தவர் தான் என்றாலும், அவருக்குத் தனித்த வசதி செய்துகொடுத்தது பற்றிக் கடுங்கோபம் கொண்டார். எங்களை பெரும் சங்கடத்திற்கு ஆளாக்கினார். ஒருவாறு அவரைச் சமாளித்தோம். இவ்விழாவிற்குத் திருகோணமலையிலிருந்து, பெ.பொ.சிவசேகரம், சிவச்சந்திரன் ஆகியோரும் வந்திருந்தனர். கொழும்புக் கம்பன் விழா நிகழ்வில், லக்ஷ்மணஐயர் தலைமையில் குருநாதர்பேசிய, 'திருமுருகாற்றுப்படை' பேச்சு மறக்கமுடியாதது.

(தொடரும்...)

காலைக்கதிர் Kalaikkathir



## ஆர்.கே.நகர் இடைத்தேர்தல்:

# நடிகர் விஷாலின் வேட்புமனு நிராகரிக்கப்பட்டது எதற்காக?

**ஆர்.**கே.நகர் இடைத்தேர்தலில் போட்டியிடுவதற்காக தான் தாக்கல் செய்த வேட்புமனுவை நிராகரித்தாலும் கூட சுயேச்சை வேட்பாளர் யாராவது ஒருவரை ஆதரித்து அவரைத் தேர்தலில் வெற்றி பெறச் செய்வேன் என நடிகர் விஷால் ஆவேசமாக சூளுரைத்தார்.



தொடர்ந்து தனது 'டுவிட்டர்' பக்கத்தில் –

"ஜனநாயகம்தரம்தாழ்ந்துவிட்டது. நான் தாக்கல் செய்த வேட்புமனு முதலில் ஏற்றுக்கொள்ளப்பட்டது. பின்னர் நான் ஆர்.கே.நகர் தேர்தல் அலுவலகத்திலிருந்து கிளம்பிய பின்னர் நிராகரிக்கப்பட்டுள்ளது. மனு செல்லாது என அறிவிக்கப்பட்டுள்ளது. இது இதயமற்ற செயல். 2016 டிசெம்பர் 5 ஆம் திகதி அம்மாமறைந்தார். 2017 டிசெம்பர் 5ஆம் திகதி ஜனநாயகம் மரித்தது. எல்லாம் அரசியல் விளையாட்டு" எனப் பதிவிட்டுள்ளார். Political Game Amma died Democracy died என்ற ஹேஷ்டேக் குகள் கீழ் இதைப் பதிவிட்டுள்ளார்.

சீலனை நேற்றுமுன்தினம் (செவ்வாய்க்கிழமை) நடந்தது. இதையொட்டி நடிகர் விஷால் தேர்தல் அலுவலகத்துக்கு பகல் 12.50 மணிக்கு வந்தார். அவரது மனுவில் பல்வேறு குறைகள் இருக்கின்றமையால் அதனை ஏற்கக் கூடாது என்று அதிமுக, திமுக தரப்பில் கூறப்பட்டது. அதன் காரணமாக விஷால் மனு நிராகரிக்கப்படும் என்று தகவல் பரவியதால் பரபரப்பு ஏற்பட்டது. தங்களது மனுவை நிராகரிக்கக் கூடாது என்று விஷால் தரப்பு வாதிட்டது.

இதையடுத்து, மதிய உணவு இடைவேளைக்குப் பிறகு மீண்டும் பரிசீலிக்கப்படும் என்று தெரி விக்கப்பட்டது.

சுமார் 2 மணி நேரத்துக்குப் பிறகு விஷால் மனு பரிசீலிக்கப்பட்டது. சிறிது நேரத்தில் நடிகர் விஷால் தேர்தல் அலுவலகத்தில் இருந்து வெளியே றினார். அதைத்தொடர்ந்து அவரது மனு நிராகரிக்கப்பட்டதாக அறிவிக்கப்பட்டது. இதனால் அங்கு மீண்டும் பரபரப்பு ஏற்பட்டது. விஷாலை வேட்பாளராக முன்மொழிவதில் இருந்து பின்வாங்கிய 2 நபர்களின் விவரங்கள் இடம்பெற்றிருந்ததால்தான் அவரது மனு நிராகரிக்கப்பட்டதாக தேர்தல் அலுவலர் விளக்கம் அளித் தார். இதையடுத்து மாலை 5.30 மணிக்கு தேர்தல் அலுவலகத்துக்கு வந்த நடிகர் விஷால், தனக்கு முன் மொழிந்தவர்களில் இருவர் மிரட்டப்பட்டதற்கான வீடியோ ஆதாரம் தம்மிடம் இருப்பதாக தேர்தல் அதிகாரி வேலுச்சாமியிடம் தெரிவித்தார்.

அப்போது, தனக்கு பரிந்துரைத்துக் கையெழுத்திட்ட வேலு என்பவரை அ.தி.மு.கவின் வேட்பாளர் மதுசூதனனின் ஆதரவாளர்கள் மிரட்டிய தாகக் கூறி தொலைபேசி ஆதாரம் ஒன்றை விஷால் வெளியிட்டார்.

இதற்குப் பிறகு, தலைமைத் தேர்தல் அலுவலர் ராஜேஷ் லக்கோனியுடன் தேர்தல் அலுவலர் வேலுச்சாமி விவாதித்தார்.

இதையடுத்து விஷாலின் மனு இரண்டாவது முறையாக பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது. நீண்ட ஆய்வுக்குப் பிறகு உரிய திருத்தங்கள் செய்யப்பட்டு மனு ஏற்கப்பட்டதாக தேர்தல் அதிகாரி தரப்பில் தெரிவிக்கப்பட்டது. இதையடுத்து ஆர்.கே.நகர் தேர்தலில் விஷால் போட்டியிடுவது உறுதியானது.

இந்நிலையில் நேற்று நள்ளிரவு 11.15 மணியளவில் விஷாலின் வேட்புமனு நிராகரிக்கப்படுவதாக தேர்தல் அதிகாரி வேலுச்சாமி அதிகாரபூர்வமாக அறிவித்தார்.

அதை அடுத்து விஷால்; "வேட்புமனுவை நிராகரித்தாலும் நான் ஓய்ந்துவிடப் போவதில்லை. வேறு ஒரு சுயேச்சை வேட்பாளருக்காக களத்தில் இறங்கி அவரை வெற்றிபெறச் செய்வேன்" எனக் கூறியுள்ளார். ●

## "நான் ஓய்ந்துவிடமாட்டேன்; வேறொரு சுயேச்சையாளரை வெற்றிபெறச் செய்வேன்"

இது தொடர்பாக அவர் செய்தியாளர்களிடம் கூறியவை வருமாறு:

என்ன நடக்கிறது என்று எனக்கு தெரியவில்லை. முதலில் எனது மனு ஏற்றுக்கொள்ளப்பட்டது. ஆனால், தற்போது மனுநிராகரிக்கப்பட்டுள்ளது. எனது வேட்புமனு நிராகரிக்கப்பட்டது வருத்தம் அளிக்கிறது. மக்களுக்கு நல்லது செய்ய நினைத்தால் இதுதான் கதியா? என்னுடைய மனு நிராகரிக் கப்பட்டது அதிர்ச்சி அளிக்கிறது. எப்படியிருந்தாலும் சுயேச்சை வேட்பாளர்களில் ஒருவரை ஆதரித்து, அவரை நான் கண்டிப்பாக வெற்றி பெறச் செய்வேன். படத்தில் நடக்கும் காட்சிகளைப் போல் நிமிடத்திற்கு நிமிடம் திருப்பங்கள் ஏற்பட்டன. இத்தனை சிக்கல்கள் இருக்கும் என நினைக்க வில்லை. இவ்வாறு அவர் கூறினார்.

### வேட்புமனு தாக்கல் முதல் நிராகரிப்பு வரை

ஆர்.கே.நகர் இடைத்தேர்தலில் போட்டியிடப்போகிறார் என நடிகர் விஷால் அறிவித்தது பெரும் திருப்பமாகப் பார்க்கப்பட்டது. தண் டையார் பேட்டையில் உள்ள தேர்தல் அலுவலகத்தில் விஷால் கடந்த திங்கட்கிழமை வேட்பு மனுத் தாக்கல் செய்தார்.

தேர்தல் நடத்தும் அதிகாரி வேலுச்சாமி, தேர்தல் பார்வையாளர் முன்னிலையில் வேட்பு மனுக்கள் பரி

# பாபர் மசூதி இடிப்பு...

(09ஆம் பக்கத் தொடர்ச்சி)


கூட்டத்தோடு கோஷம் எழுப்பிக் கொண்டு, இந்த ஒத்திகையை பார்த்து புகைப்படம் எடுத்த ஒரே பத்திரிகையாளர் நான் தான் என்ற சிலிர்ப்பில் வெளியே வந்தடைந்தேன்.

அடுத்த நாள், நான் உள்ளிட்ட மற்ற பத்திரிகையாளர்களும் மசூதியைப் பார்க்க ஏதுவாக ஒரு கட்டடத்தின் நான்காவது மாடியில் ஏறி நின்று கொண்டோம். 15லட்சம் தொண்டர்கள் ஊர்வலமாக வருவதை விஷ்வ இந்து பரிஷத் மற்றும் பாரதீய ஜனதா கட்சியைச் சேர்ந்த முக்கிய தலைவர்கள் கவனித்துக் கொண்டிருந்தார்கள்.

அப்பகுதியில் காவலுக்கு நின்ற பொலிஸாரும் கோஷங்களை எழுப்பினர். நண்பகல் சுமார் 12.15 மணிக்கு வன்முறையில் ஈடுபடத் தொடங்கிய அவர்கள், பொலிஸாரையும், மசூதியை பாதுகாத்திருந்த காவலர்களையும் தாக்கத் தொடங்கினர்.

### சிலமணி நேரங்களில் தரைமட்டமானது மசூதி

இச்சம்பவம் குறித்த புகைப்பட





ஆதாரங்கள் எதுவும் இருக்கக்கூடாது என்பதற்காக, நான்காவது மாடிக்கு ஏறி அங்கு நின்று கொண்டிருந்த பத்திரிகையாளர்களையும் புகைப் படக் காரர்களின் கமராக்களையும் தாக்கத் தொடங்கினர். இதெல்லாம் நடந்த சில மணி நேரங்களிலேயே மசூதி தரைமட்டமாக்கப்பட்டது.

என் கால்களால் எவ்வளவு வேகமாக ஓட முடியுமோ அவ்வளவு வேகமாக ஹோட்டலை நோக்கி ஓடினேன். கலவரம் ஏற்கனவே தொடங்கிவிட்டது. எனக்கு உதவ பொலிஸார் யாரேனும் உள்ளனரா என்று சுற்றும் முற்றும் பார்த்தேன். ஆனால் அனைவரும் கடைகள், வீட்டின் ஜன்னல் கதவுகளை எல்லாம் மூடிக் கொண்டிருந்தனர்.

மசூதியை அவர்கள் தரைமட்டமாக்கிய அன்று, ஓர் இந்துவாக பிறந்ததற்கு அவமானமாக உணர்ந் தேன்.

லிபரான் கமிஷன் முன்பு வாக்கு மூலம் அளித்தேன். சி.பி.ஐ. நீதிமன்றத்தில் பாபர் மசூதி இடிப்பு வழக்கில் இன்று வரை சாட்சிக்காக அழைக்கப்படுகிறேன்.

25 ஆண்டுகள் கழிந்துவிட்டன. ஆனால் இதற்கு காரணமான ஒருவர் கூட தண்டிக்கப்படவில்லை. ●

# புனித சிவனொளிபாதமலை பிரதேசம் இரத்தினபுரி மாவட்டத்திற்கு உட்பட்டது!

## அமைச்சர் பைஸர் முஸ்தபா தெரிவிப்பு

கொழும்பு, டிசெ. 07

புதிய எல்லை நிர்ணயத்திற்கு அமைவாக புனித சிவனொளிபாத மலை பிரதேசம் இரத்தினபுரி மாவட்டத்திற்கு உட்பட்டது என்று மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சர் பைஸர் முஸ்தபா தெரிவித்துள்ளார்.

ஊடகவியலாளர்களுடனான சந்திப்பின்போதே அவர் இந்த விடயத்தைக் குறிப்பிட்டுள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

இந்த விடயத்தால் தேர்தல் தாமதம் அடையாது. எந்தவொரு நபருக்கும் வழக்குத் தாக்கல் செய்ய உரிமை உண்டு. நாம் புனித சிவனொளிபாத மலை எல்லையில் எந்தவிதமான மாற்றமும் மேற்கொள்ளவில்லை.

நாம் இதனை நீதிமன்றத்தில் தெளிவுபடுத்தி எமது தரப்பிலான நிலையை உறுதி செய்ய முடியும். இதனால் சிவனொளிபாதமலைக்கு எந்தவிதமான பாதிப்போ ஏதேனும் பிரச்சினையோ ஏற்பட இடமளிக்க மாட்டோம்.

இதே போன்று மாநகர மற்றும் மேல்மாகாண அபிவிருத்தி அமைச்சர் சம்பிக்க ரணவக்க சிவனொளிபாத மலை பிரதேசத்தை புனித பிரதேசமாக வர்த்தமானியில் அறிவித்துள்ளார். இதனால், எந்தவொரு பிரச்சினையும் ஏற்படாது. இதனைப் பொறுப்புடன் கூறுகின்றேன். சிலர் சிவனொளிபாதமலை பிரதேசத்தில் இரத்தினபுரியில் இருந்து நுவரெலியா மாவட்டத்துடன் சேர்ந்து இருப்பதாகக் கூறுகின்றனர். இவ்வாறு எதுவும் நடைபெறவில்லை.

உள்ளூராட்சி மன்றத் தேர்தலை நடத்துவதற்குத் தமது அமைச்சால் மேற்கொள்ளப்பட வேண்டிய பணிகளை முறையாக நிறைவேற்றுமாறும் அமைச்சர் பைஸர் முஸ்தபா மேலும் கூறியுள்ளார்.

செப்ரெம்பர் மாதம் 2 ஆம் திகதி அமைச்சர் பைஸர் முஸ்தபாவால் வெளிடப்பட்ட வர்த்தமானி அறிவித்தலை இரத்துச் செய்யுமாறும், அம்பகமுவ பிரதேசசபைக்கான தேர்தலை இடைநிறுத்த இடைக்காலத் தடையுத்தரவைப் பிறப்பிக்குமாறும் அம்பகமுவ பிரதேசசபையின் உறுப்பினர் ஒருவர் மனுவைத் தாக்கல் செய்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

(ப)

# என்னை மேயர் வேட்பாளராக நிறுத்தியமை சிறப்புக்குரியதே!



வெற்றியும் நிச்சயம் என்கின்றார் அஸாத் சாலி!

சுதந்திரக் கட்சியின் வரலாற்றில் முதல் தடவையாக ஒரு கட்சியின் செயலாளரான என்னை, கொழும்பு மேயர் வேட்பாளராக நிறுத்தியுள்ளமை சிறப்புக்குரியது என அஸாத்சாலி தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி மற்றும் சுதந்திரக் கட்சியின் மத்திய குழுவின் பூரண சம்மதத்துடன் மூவின மக்களின் ஆதரவைப் பெற்றவன் என்ற வகையில் மேயர் வேட்பாளராக நான் நிறுத்தப்பட்டுள்ளேன் என்று அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

நடைபெறவுள்ள உள்ளூராட்சித் தேர்தல் கலப்பு முறை என்பதால் ஐக்கிய தேசியக் கட்சிக்கு சவால் விட்டு மேயர் பதவியை என்னால் வெற்றி கொள்ள முடியும். ரோசி சேனநாயக்காவுக்கு கிறிஸ்தவ வாக்குகள் கிடைக்கும்.

எனினும், எனக்கு மூவின மக்களின் வாக்குகளும் கிடைக்கும். அதனால் என்னால் கொழும்பு மேயர் வேட்பாளராக வெற்றிபெற முடியும் என்றும் அஸாத் சாலி தெரிவித்துள்ளார்.

(க)

# நெருங்கியது காற்றழுத்தம்: சூறாவளி ஆபத்து இல்லை!

கொழும்பு, டிசெ. 07


வங்கக் கடலில் உருவாகியுள்ள காற்றழுத்தம் இலங்கையை நெருங்கியுள்ள நிலையிலும், சூறாவளி தாக்கும் ஆபத்து ஏதும் இல்லைஎன்றுவளிமண்டலவியல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

வளிமண்டலவியல் திணைக்களத்தின் அதிகாரி ஒருவர் இது குறித்து தெரிவித்தவை வருமாறு:-

வங்கக் கடலில் அந்தமான் தீவுகளுக்கு அருகே உருவா கியுள்ள காற்றழுத்தம், புயலாக உருவெடுத்து, இலங்கையை நோக்கி நகர்வதற்கான அறி குறிகள் ஏதும் இல்லை.

அந்த காற்றழுத்தம், இலங்கைக்குத் தென்கிழக்காக 950 கிலோ மீற்றர் தொலைவில் உள்ளது. அது வலுவடையும் வாய்ப்புகள் உள்ளன. எனினும், அதன் பாதை இன்னமும் தெளிவாக இல்லை.

அதேவேளை, வடக்கு, கிழக்கு மாகாணங்களில் காற்றின் வேகம் அதிகரிக்கக் கூடும். காற்றின் வேகம் அதிகரிப்பதால் மக்கள் அச்சமடைய வேண்டியதில்லை.




தற்போதைய நிலையில் இலங்கையை சூறாவளியோ, ஆழிப் பேரலையோ தாக்கும் ஆபத்து இல்லை.

எனினும், வானிலை எந்த நேரத்திலும் மாற்றமடைவதற்கு சாத்தியங்கள் உள்ளன. நாங்கள் நிலைமைகளை உன்னிப்பாக அவதானித்து வருகிறோம். இப்போது நிச்சயமாக எந்த பதற்றமும் அடைய வேண்டியதில்லை என்றும் அவர் கூறியுள்ளார்.

அதேவேளை, வடக்கு, கிழக்கு கடற்பகுதியில் 90 தொடக்கம் 100 கிலோ மீற்றர் வேகத்தில் காற்று வீசக் கூடும் என்றும் கடல் கொந்தளிப்பாக இருக்கும் என்றும் எச்சரிக் கப்பட்டுள்ளது.

இதற்கிடையே, வளி மண்டலவியல் திணைக்களம் நேற்று அதிகாலை 5.30 மணிக்கு வெளியிட்டுள்ள அறிக்கையில், வங்கக் கடலில் உருவாகியுள்ள காற்றழுத்தம், தற்போது இலங்கையில் இருந்து 800 கிலோ மீற்றர் தொலைவில் இருப்பதாகவும், இன்னும் 12 மணிநேரத்தில் அது வலுவடையும் என்று எதிர்பார்க்கப்படுவதாகவும் கூறியிருந்தது.

இலங்கைக்கு வடமேற்காக நகர்வதாகவும், இதனால் வடக்கு, கிழக்கு மாகாணங்களில் காற்றின் வேகம் அதிகரிக்கும் என்றும், வடக்கு, கிழக்கு வட மத்திய மாகாணங்களில் மழை பெய்யும் என்றும் வளிமண்டலவியல் திணைக்களம் எதிர்வு கூறியுள்ளது.

# ஏ9 வீதியில் மீண்டும் வீதிச்சோதனை!

யாழ்ப்பாணத்தில் இருந்து செல்லும் பஸ்கள் மற்றும் ஏனைய வாகனங்கள் அனைத்தும் மாங்குளம் பொலிஸாரால் மறிக்கப்பட்டு வீதிச்சோதனையிடப்படும் நடவடிக்கை ஒன்று முன்னெடுக்கப்படுகிறது.

நேற்றுமுன்தினமும் இரவு வாகனங்களை மறித்து சோதனையிடும் நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது.

அண்மைய காலங்களில் வடக்கில் போதைப் பொருள்கள் விற்பனை அதிகரித்துள்ளது. இந்த நிலையிலேயே இந்த வீதிச்சோதனை நடவடிக்கை மேற்கொள்ளப்படுகிறது எனத் தெரிவிக்கப்படுகிறது.

யாழ்ப்பாணத்தில் இருந்து வவுனியா நோக்கி செல்லும் பஸ்கள், வாகனங்கள் அனைத்தும் மாங்குளம் நகர்ப்பகுதியில் நிறுத்தி சோதனையிடப்பட்டதோடு பயணிகளின் பயணப் பைகளும் சோதனையிடப்பட்டன.




அண்மையில் தொடர்ச்சியாக கஞ்சா உள்ளிட்ட போதைப் பொருள்கள் பொலிஸாரிடம் மாட்டிவரும் நிலையில் இந்த விசேட சோதனை நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

# தேர்தல்கள் தொடர்பிலான சிரேஷ்ட பிரதிப் பொலிஸ் மா அதிபராக விக்ரமரத்ன நியமனம்!

தேர்தல் நடவடிக்கைகள் தொடர்பில் சிரேஷ்ட பிரதிப் பொலிஸ் மா அதிபராக சி.டீ. விக்ரமரத்ன நியமிக்கப்பட் டுள்ளார்.

தேசிய பொலிஸ் ஆணைக் குழுவின் அனுமதியின் கீழ் பொலிஸ் மா அதிபர் பூஜித ஜயசுந்தர மூலம் குறித்த நியமனம் வழங்கப்பட்டுள்ளது.

நிர்வாக பிரிவு சிரேஷ்ட பிரதிப் பொலிஸ் மா அதிபராக சி.டீ.விக்ரமரத்ன கடமையாற்றுகின்றமையுடன் மேலதிகமாக அவருக்கு தேர்தல் நடவடிக்கைகள் தொடர்பில் சிரேஷ்ட பிரதிப் பொலிஸ் மா அதிபராக கடமையாற்றும் பொறுப்பும் வழங்கப்பட்டுள்ளது.

இதற்கு முன்னர் தேர்தல் நடவடிக்கைகள் தொடர்பில் சிரேஷ்ட பிரதிப் பொலிஸ் மா அதிபராகக் கடமையாற்றிய காமினி நவரத்ன கடந்த சில தினங்களுக்கு முன்னர் ஓய்வு பெற்றமை குறிப்பிடத்தக்கது.

# போதையற்ற நாட்டை உருவாக்கும் செயற்றிட்டம் யாழில் ஆரம்பம்!

''போதையற்ற நாட்டை உருவாக்குவோம்'' என்ற தொனிப் பொருளிலலான தேசிய வேலைத் திட்டம் பொலிஸால் யாழ்ப்பாணத்தில் நேற்றுக் காலை ஆரம்பிக்கப்பட்டது.

யாழ்ப்பாணத்தில் வீதிகளில் பயணிக்கும் வாகனங்களுக்கு போதைப் பொருள் பாவனைக்கு ஒழிக்கும் விழிப்புணர்வு பதாகைகள் ஒட்டப்பட்டன. யாழ்ப்பாண மாவட்ட பொலிஸ் அதிகாரிகள் இந்த விழிப்புணர்வு நடவடிக்கையை முன்னெடுத்தமை குறிப்பிடத்தக்கது.

இதேவேளை, அண்மைக் காலமாக வடக்கில் போதைப் பொருள்கள் கடத்தல் தொடர்பில் பலர் கைதுசெய்யப்பட்டுள்ள நிலையில் ஏ9 வீதியில் பொலிஸாரால் வீதிச் சோதனை நடவடிக்கைகள் தீவிரமாக இடம்பெற்று வரு கின்றமை குறிப்பிடத்தக்கது.

காலைக்கதிர் Kalaikkathir



## ஜெயலலிதாவின் மகள் விவகாரம்:

# மீண்டும் அரசியலைக் கையில் எடுப்பதற்கு அம்ருதாவைத் தூண்டிவிட்டாரா சசிகலா?

பெங்களூர்,டிசெ.07

மறைந்த முதலமைச்சர் ஜெயலலிதாவின் மகள் என்று கூறும் அம்ருதாவை தூண்டிவிட்டது சசிகலாவா என்பது தொடர்பான பரபரப்பு தகவல்கள் தற்போது வெளியாகியுள்ளன.

தான் ஜெயலலிதாவின் மகள் என்று பெங்களூரைச் சேர்ந்த பெண் அம்ருதா கூறி வருகிறார்.

அவர் உயர் நீதிமன்றில் தாக்கல் செய்த மனுவில் தன்னை ஜெயலலிதாவின் மகள் என்று அறிவிக்க வேண்டும், மரபணுச் (டி.என்.ஏ.) சோதனை நடத்த வேண்டும் என்றும் அந்த மனுவில் அவர் கூறி இருந்தார். அந்த மனுவை உயர் நீதிமன்றம் தள்ளுபடி செய்து விட்டது.

கர்நாடக உச்ச நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்யும்படி அம்ருதாவுக்கு நீதிபதிகள் உத்தரவிட்டனர். அதைத் தொடர்ந்து உச்ச நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்ய அம்ருதா தயாராகி வருகிறார்.

ஏற்கனவே அம்ருதா உயர் நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்தபோது அவருக்கு ஆதரவாக அவரது உறவினர்கள் லலிதா, ரஞ்சனி ஆகியோர் கையெழுத் திட்டிருந்தனர்.

லலிதா அளித்த பேட்டியில் ஜெயலலிதாவுக்கு மகள் பிறந்தது உண்மை தான் என்றும், அந்தப் பெண் அம்ருதா தான் என்பது தனக்குத் தெரியாது என்றும், டி.என்.ஏ. பரிசோதனை நடத்தினால் உண்மை தெரியும் என்றும் கூறி இருந்தார்.

கடந்த 3மாதங்களுக்கு முன்பு ரஞ்சனி தான் அம்ருதாவை அழைத்து வந்து ஜெயலலிதாவின் மகள் என்று தன்னிடம் கூறினார் என லலிதா கூறி இருந்தார்.



அம்ருதாவின் மனுவில் கையெழுத் திட்ட ரஞ்சனி கடந்த சில மாதங்களுக்கு முன்பு பெங்களூர் சிறையில் சசிகலாவைச் சந்தித்தார் எனத் தற்போது தகவல் வெளியாகியுள்ளது.

அம்ருதா மூலம் ஜெயலலிதாவின் குடும்பரகசியங்களைவெளிப்படுத்தும் நடவடிக்கைக்கு அம்ருதாவைப் பயன்படுத்த ரஞ்சனியிடம் சசிகலா ஆலோசனை வழங்கி இருக்கிறார். அந்த ஆலோசனைப்படி தற்போது அம்ருதா செயற்பட்டு வருகின்றார் எனக் கூறப்படுகிறது.

அம்ருதாவை இயக்குவதால் சசிகலாவுக்கு என்ன லாபம் என்று பலர் கேட்கிறார்கள். ஏற்கனவே அ.தி.மு.க. கையை விட்டு போய்விட்டது. சொத்துக்களுக்குஜெயலலிதாவின்அண்ணன் மகன் தீபக், மகள் தீபா ஆகியோர் உரிமை கொண்டாடி வருகின்றார்கள்.

ஜெயலலிதாவின் நேரடி வாரிசு வந்துவிட்டால் கட்சியையும் சொத்துக்களையும் மீட்டெடுத்து விடலாம் என்று சசிகலா நினைக்கின்றார் என அவருக்கு நெருங்கிய வட்டாரங்கள் தெரிவித்தன.

அம்ருதா தன்னை மீறி எதுவும் செய்ய மாட்டார் என்றும் அவர் வெளியே வருவது நல்லதுதான் என்றும் சசிகலா நினைக்கிறார். ஜெயலலிதாவின் வாரிசு அம்ருதா என்று சொன்னால் கட்சிக்குள்ளும் குழப்பம் வராது, சொத்துக்குச் சொந்தம் கொண்டாடி வரும் தீபக் மற்றும் தீபாவும் அமைதியாகி விடுவார்கள் என்றும் சசிகலா நினைக்கிறார்.

தற்போது அ.தி.மு.க நிர்வாகிகளும், தீபா - தீபக்கும் சசிகலாவுக்கு எதிராகக் கருத்துக்களைக்கூறி வருகின்றமையால் அவர்களுக்குச் செக் வைக்கும் எண்ணத்துடன்அம்ருதாவைகளத்தில்இறக்கி இருக்கின்றார் எனத் தகவல் உலா வருகிறது.

இதற்காகத்தான் ரஞ்சனி மூலம் சசிகலா காய் நகர்த்தினார் எனக் கூறப்படுகிறது.

ரஞ்சனி என்பவர்மறைந்த முதலமைச்சர் ஜெயலலிதாவின் தாயார் சந்தியாவுக்கு உறவினர். இது ஏற்கனவே சசிகலாவுக்கும் தெரியும். மேலும் ஜெயலலிதாவின் உறவினரான லலிதா கூறும் போது ஜெயலலிதாவுக்கு 1980ஆம் ஆண்டு பிரசவம் பார்த்தபோது ரஞ்சனி உடன் இருந்தார் என்றும் கூறியுள்ளமை குறிப்பிடத்தக்கது.



இதனால் ரஞ்சனி மூலம் அம்ருதாவை வைத்து அரசியல் எதிரிகளுக்குப் பதிலடி கொடுத்து மீண்டும் அரசியலைக் கையில் எடுக்க சசிகலா திட்டமிட்டுள்ளார் எனவும் தகவல் வெளியாகியுள்ளது.

சொத்துக் குவிப்பு வழக்கு மற்றும் உறவினர் வீடுகளில் வருமான வரிச் சோதனை, தனது கணவர் நடராஜன், உறவினர் பாஸ்கரன் ஆகியோருக்குச் சிறைத்தண்டனை, தினகரன் உள்ளிட்ட உறவினர்கள் மீது பல்வேறு வழக்குகள் என்று சிக்கலில் சிக்கித் தவிக்கும் சசிகலா அம்ருதா மூலம் இதையெல்லாம் மாற்ற முடிவு எடுத்துள்ளார் எனச் செய்திகள் வெளியாகியுள்ளன.

---

## ஆப்கன் ராணுவப் பெண்பிரிவுக்கு பயிற்சியளிக்கிறது இந்தியா

முதல் முறையாக ஆப்கானிஸ்தான் இராணுவத்தைச் சேர்ந்த பெண் இராணுவப் பிரிவுக்கு இந்திய இராணுவம் சென்னையில் உள்ள முகாமில் பயிற்சி அளித்து வருகிறது.

ஆப்கானிஸ்தான் நாட்டில் தலிபான் தீவிரவாதிகள் தாக்குதல் நடத்தி வருகின்றனர். இதனால் ஏற்பட்ட பாதிப்பிலிருந்து மீண்டு வர 200 கோடி டொலரை உதவித்தொகையாக கொடுத்தது இந்தியா. ஆப்கன் விமானப்படைக்கு 4 யுத்த ஹெலிக்கொப்டரை இந்தியா வழங்கியது. மேலும் கடந்த ஒக்ரோபர் மாதம் ஆப்கன் பிரதமர் அஷ்ரப் கானி இந்தியா வந்த போது அவர்களுக்குத் தேவையான அனைத்து உதவிகளையும் இந்தியா வழங்கும் என உறுதி யளிக்கப்பட்டது.

இந்த நிலையில், ஆப்கன் இராணுவத்தைச் சேர்ந்த பெண் அதிகாரிகளுக்கு முதல் முறையாக இந்திய இராணுவம் பயிற்சியளிக்கிறது. 4 ஆயிரத்திற்கும் மேற் பட்ட ஆப்கன் இராணுவ வீரர்களுக்குப் பயிற்சி அளித்துள்ளது. ஆனால் பெண்கள் பிரிவு ராணுவத்துக்குப்பயிற்சி அளிப்பது இதுவே முதல் முறையாகும்.

---

## ஆர்.கே.நகர் இடைத்தேர்தல்:

## விஷாலின் வேட்புமனுத் தாக்கல் அதிகாரபூர்வமாக நிராகரிப்பு!



ஆர்.கே.நகர் இடைத்தேர்தலில் போட்டியிட நடிகர் விஷால் தாக்கல் செய்த வேட்பு மனுவை, தேர்தல் அதிகாரிகள் அதிகாரபூர்வமாக நிராகரித்துள்ளனர்.

முன்னாள் முதலமைச்சர் ஜெயலலிதாவின் மறைவை அடுத்து, அவரின் தொகுதியான ஆர்கே நகருக்கு வரும் 21ஆம் திகதி இடைத்தேர்தல் அறிவிக்கப்பட்டது. இதற்கான வேட்புமனு தாக்கல் கடந்த மாதம் 27ஆம் திகதி ஆரம்பமாகி கடந்த திங்கட்கிழமை அது நிறைவடைந்தது.

நேற்று வேட்பு மனுக்கள் மீதான பரிசீலனை நடைபெற்றது. முன்னதாக படிவம் 26 இனைப் பூர்த்தி செய்யாததால், தீபாவின் மனு நிராகரிக்கப்பட்டது. இதற்கிடையில் நடிகர் விஷாலின் வேட்புமனுவை ஏற்கக் கூடாது என்று தி.மு.க., அ.தி.மு.க. கட்சிகள் எதிர்ப்புத் தெரிவித்தன.

இதனால் இரண்டரை மணி நேரம் விஷாலின் வேட்பு மனு மீதான பரிசீலனை நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது. இதையடுத்து பரிசீலனை தொடங்கிய நிலையில், விஷால் முன்மொழிந்தவர்களின் பெயர்கள் தவறாகக் குறிப்பிடப்பட்டுள்ளன என விஷாலின் வேட்புமனுத் தாக்கல் அதிகாரபூர்வமாக நிராகரிக்கப்பட்டுள்ளது.

(ப)

விரிவான தகவல் 12 ஆம் பக்கத்தில்...

---

## ஆகாஷ் ஏவுகணை சோதனை வெற்றி

ஒரிசா மாநிலம் பலசோர் அருகே சந்திப்பூரில்உள்ள ஒருங்கிணைந்தசோதனைத்தளத்தில், ஆகாஷ் சுப்பர் சொனிக் ஏவுகணை நேற்றுமுன்தினம் வெற்றிகரமாகச் சோதித்துப் பார்க்கப்பட்டது.

இது, தரையில் இருந்து பாய்ந்து சென்றுவானில்உள்ள இலக்கைத்தாக்க வல்லது. அதனால், ஆளில்லாத குட்டி விமானத்தைவானில் இலக்காகவைத்து, ஏவுகணை செலுத்தப்பட்டது.

அது வெற்றிகரமாக குட்டி விமானத்தைத் தாக்கியது. கடலோரத்தில் நிறுவப்பட்டிருந்த ராடர்கள், தட்பவெப்பத்தைக் கணிக்கும் சாதனங்கள் ஆகியவை ஆகாஷ் ஏவுகணையின் பாகங்கள் சிறப்பாக இயங்குவதைக் கண்காணித்தன.

இந்தச் சோதனையை நேரில் பார்த்த இராணுவ அமைச்சரின் அறிவியல் ஆலோசகர் சதீஷ் ரெட்டி, விஞ்ஞானிகளுக்குப்பாராட்டுத்தெரிவித்தார். ஆகாஷ் ஏவுகணை, இந்திய இராணுவத்திலும் சேர்க்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது.



# சிரியாவில் அகோர வான் தாக்கு; அப்பாவி மக்கள் 27 பேர் உயிரிழப்பு!







டமாஸ்கஸ்,டிசெ.07

சிரியா ஹமோரியா நகரில் உள்ள சந்தைப் பகுதி மற்றும் குடியிருப்புப் பகுதி மீதுகுண்டு வீசப்பட்டதில் அப்பாவிமக்கள்27பேர்கொல்லப்பட்டனர்.

சிரியாவில் கடந்த 2011ஆம் ஆண்டு மார்ச் மாதம் தொடங்கிய உள் நாட்டுப் போர் 6 ஆண்டுகளை கடந்து நீடித்து வருகிறது. மற்றொருபுறம் அங்கு ஐ.எஸ்.பயங்கரவாதிகளின் ஆதிக்கமும் இருந்து வருகிறது. ஐ.எஸ். பயங்கரவாதிகளின் கொட்டத்தை ஒடுக்க அமெரிக்கா தலைமையிலான கூட்டுப் படைகள் சிரியாவில் தாக்குதல்களை நடத்தி வருகின்றன.

அதேபோல் கிளர்ச்சியாளர்களுக்கு எதிராக அரசு படையுடன் இணைந்து ரஷ்யா வான்வழித் தாக்குதல்களை நடத்தி வருகிறது.

தலைநகர் டமாஸ்கஸைச் சுற்றி உள்ள ஹமோரியா, அர்பின், மிஸ்பரா, ஹரஸ்தா உள்ளிட்ட சில நகரங்கள் கிளர்ச்சியாளர்களின் கட்டுப்பாட்டில் உள்ளன. இவற்றைத் தங்கள் வசம் கொண்டு வரச்சிரிய இராணுவப்படை கடுமையாகப் போராடி வருகிறது. இதற்கு ரஷ்யப் படை உறுதுணையாக உள்ளது.

இந்த நிலையில், அந்த நகரங்களில் நேற்று முன்தினம் அரசு படை மற்றும் ரஷ்ய படை இணைந்து போர் விமானங்கள் மூலம் குண்டு மழை பொழிந்தன. 24 மணி நேரத்தில் சுமார் 30 முறை வான்தாக்குதல் நடத்தப்பட்டன எனத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

மேலும் மக்கள் கூட்டம் நிறைந்த பகுதிகளைக் குறிவைத்து இந்த வான்தாக்குதல்கள் நடத்தப்பட்டன என சிரியா மனித உரிமை கண்காணிப்பகம் குற்றம் சாட்டி உள்ளது.

இது தொடர்பாக அந்த அமைப்பு வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் ஹமோரியா நகரில் உள்ள சந்தைப் பகுதி மற்றும் குடியிருப்புப் பகுதி மீது குண்டு வீசப்பட்டதில் அப்பாவி மக்கள் 17 பேர் கொல்லப்பட்டனர். அதே போல் அர்பின் நகரில் நடத்தப்பட்ட தாக்குதலில் 4 பேரும், மிஸ்பரா மற்றும் ஹரஸ்தா நகரங்களில் 6 பேரும் பலியாகினர் எனத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

(ப)

## மிகப் பெரிய 'அமைதி வைரம்': 65 லட்சம் டொலருக்கு ஏலம்!



நியூயோர்க்,டிசெ.07

சியெரா லியோன் நாட்டுக்குச் சொந்தமான உலகின் மிகப்பெரிய முட்டைவடிவ 'அமைதி வைரம்' அமெரிக்காவின் நியூயோர்க் நகரில் 65 லட்சம் டொலர்களுக்கு ஏலம் போனது.

மேற்காபிரிக்கா கண்டத்தில் வைரச் சுரங்கங்கள் நிறைந்த சியெரா லியோன் நாட்டின் கோனோ மாகாணத்தின் கிழக்குப் பகுதியில் உலகின் மிகப் பெரிய வெட்டப்படாத வைரக்கல்லை கடந்த மார்ச் மாதம் பாதிரியார் ஒருவர் கண்டெடுத்தார்.

முட்டை வடிவத்திலான அந்த வைரத்தை ஏலத்தில் விட்டு அதன் மூலம் கிடைக்கும் தொகையை நாட்டின் வளர்ச்சி சார்ந்த தேவைகளுக்குப் பயன்படுத்திக் கொள்ளுமாறு அரசிடம் அதை ஒப்படைத்தார்.

இதனால் 'அமைதி வைரம்' எனப் பெயரிடப்பட்ட இந்த வைரக்கல்லை அமெரிக்காவின் நியூயோர்க் நகரில் உள்ள பிரபல நிறுவனம் நேற்றுமுன்தினம் ஏலத்தில் விட்டது. சுமார் 70 பேர் இந்த வைரத்தைப் பார்வையிட்டு தரத்தை ஆய்வு செய்தாலும், 7 பேர் மட்டுமே ஏலம் கேட்டனர்.

இதில் பிரிட்டன் நாட்டைச் சேர்ந்த பிரபல நகை தயாரிப்பாளர் லோரன்ஸ் கிராப் இந்த வைரத்தை 65 லட்சம் டொலர்களுக்கு வாங்கியுள்ளார். (ப)

## கூகுள் பயன்படுத்துவோருக்கு மறதி நோய் ஏற்படும் அபாயம்

கூகுள் பயன்படுத்துவோருக்கு மூளையின் நினைவாற்றலை தூண்டும் கிரேசெல்கள் எனப்படும் சாம்பல்நிற செல்கள் அழிந்து மறதி நோய் ஏற்படும் அபாயம் உள்ளது என நிபுணர் ஒருவர் எச்சரித்துள்ளார்.

சர்வதேச அளவில் டிமென்சியா எனப்படும் மறதி நோயால் 4 கோடியே 70 லட்சம் பேர் பாதிக்கப்பட்டுள்ளனர் என உலக சுகாதார நிறுவனம் தெரிவித்துள்ளது. வருகிற 2050 ஆம் ஆண்டில் இந்நோயினால் 13 கோடியே 10 லட்சம் பேர் பாதிக்கப்படும் அபாயம் உள்ளது எனக் கணிக்கப்பட்டுள்ளது.

மறதி நோயைக் குணப்படுத்த விஞ்ஞானிகள் பல ஆண்டுகளாக ஆராய்ச்சி நடத்தியும் அதற்குச் சிகிச்சை முறை கண்டறியப்படவில்லை. இது தொடர்பான ஆய்வு சமீபத்தில் நடத்தப்பட்டது. அதில் இங்கிலாந்தைச் சேர்ந்த செயின்ட் அண்ரூஸ் பல்கலைக்கழக நிபுணர் பிராங்கன் மூரே ஈடுபட்டார்.

மூளை ஆரோக்கியம் இன்றியமையாதது. மூளைக்கு வேலை கொடுத்தால் தான் அது ஆரோக்கியமானதாக இருக்கும். ஆனால், இன்றைய கால கட்டத்தில் அதற்கு நாம் வேலை கொடுப்பதில்லை.

நமது மூளை செய்ய வேண்டிய வேலைகளை கூகுள் போன்ற தேடல் இணைய தளத்தைக் கொண்டே செய்து விடுகிறோம். மறந்து போன தகவல்களை மூளையைப் பயன்படுத்தி சிந்தித்து நினைவாற்றலைத் தேடிப்பார்க்காமல் சட்டென்று இணைய தளத்துக்குச் சென்று எளிதில் பெற்று விடுகிறோம்.

இதனால் மூளையின் நினைவாற்றலை தூண்டும் கிரேசெல்கள் எனப்படும் சாம்பல் நிற செல்கள் அழிந்து மறதி நோய் ஏற்படும் அபாயம் உள்ளது என எச்சரித்துள்ளார் அந்நிபுணர்.

## தீவிரவாதி ஹபீஸ் சயீத்துடன் கூட்டணி வைக்கத் தயார்

### முஷாரப் அறிவிப்பு



இஸ்லாமாபாத்,டிசெ.07

தீவிரவாதி ஹபீஸ் சயீத்தின் ஜமாத் உத் தவா அமைப்புடன் கூட்டணி வைக்க தயார் எனப் பாகிஸ்தான் முன்னாள் இராணுவ ஆட்சியாளர் பர்விஸ் முஷாரப் தெரிவித்துள்ளார்.

மும்பைத்தாக்குதலில் மூளையாகச் செயற்பட்ட தீவிரவாதி ஹபீஸ் சயீத்தின் ஜமாத் உத்தவா அமைப்புடன் கூட்டணி அமைத்துத் தேர்தலைச் சந்திக்க தயாராக இருக்கின்றேன் எனப்பாகிஸ்தானின் முன்னாள் இராணுவ ஆட்சியாளரான முஷாரப் தெரிவித்துள்ளார்.

மும்பைத்தாக்குதலில் மூளையாகச் செயற்பட்ட தீவிரவாதி ஹபீஸ் சயீத். கடந்த 10 மாதங்களுக்கு மேலாக வீட்டுக்காவலில் அடைக்கப்பட்டிருந்த அவர் சமீபத்தில் விடுவிக்கப்பட்டார். விடுதலை ஆன பின்னர் கடந்த வாரம் முஸ்லிம் லீக் என்ற பெயரில் கட்சி ஒன்றை ஆரம்பிக்கவுள்ளேன் என அவர் அறிவித்தார். மேலும் அடுத்த ஆண்டு பாகிஸ்தானில் நடைபெறும் நாடாளுமன்றத் தேர்தலில் போட்டியிடப் போகின்றேன் எனவும் தெரிவித்திருந்தார். ஆனால், ஹபீஸ் சயீத்தின் இந்த இயக்கம், பாகிஸ்தானின் தேர்தல் ஆணையத்தில் இன்னும் பதிவு செய்யப்படவில்லை.

அதே வேளையில் கடந்த சில தினங்களுக்கு முன், பர்விஸ் முஷாரப், தான் ஒரு லஷ்கர் இ தொய்பா இயக்கத்தின் தீவிர ஆதரவாளர் எனத் தெரிவித்திருந்தார். இந்த நிலையில், தற்போது தீவிர வாதி ஹபீஸ் சயீத்தின் ஜமாத் உத்தவா அமைப்புடன் கூட்டணி வைக்கத் தயார் என முஷாரப் தெரிவித்துள்ளார்.

# டில்லி டெஸ்ட் சமநிலையில் முடிவு:

# இலங்கையுடனான தொடரை வென்று உலக சாதனையைச் சமன் செய்த இந்தியா

இந்தியாவுக்கு எதிரான 3ஆவது டெஸ்ட் போட்டியில் துடுப்பாட்ட வீரர்கள் பொறுப்பாக ஆட இலங்கை அணி ஆட்டத்தைச் சமநிலை செய்தது. ஆனாலும், இலங்கையுடனான டெஸ்ட் தொடரை வென்ற இந்தியா உலக சாதனையைச் சமன் செய்துள்ளது.

இந்தியா - இலங்கை அணிகள் மோதும் 3ஆவது மற்றும் கடைசி டெஸ்ட் கிரிக்கெட் போட்டி டில்லி பெரோஷா கோட்லா மைதானத்தில் நடைபெற்றது.

இந்திய அணி முதல் இன்னிங்ஸில் 7 விக்கெட் இழப்புக்கு 536 ஓட்டங்கள் குவித்து 'டிக்ளேர்' செய்தது. அணித்தலைவர் விராட் கோஹ்லி இரட்டை சதமும் (243 ஓட்டங்கள்), முரளிவிஜய் சதமும் (155 ஓட்டங்கள்) அடித்தனர். சண்டகன் 4 விக்கெட் வீழ்த்தினார்.

இலங்கை அணி முதல் இன்னிங்ஸில் 373 ஓட்டங்கள் எடுத்தது. தலைவர் சந்திமல் (164 ஓட்டங்கள்), முன்னாள் தலைவர் மத்தியூஸ் (111 ஓட்டங்கள்) ஆகியோர் சதம் அடித்தனர். அஸ்வின், இஷாந்த் சர்மா தலா 3 விக்கெட்டுகளைக் கைப்பற்றினர்.

163 ஓட்டங்கள் முன்னிலையில் இந்தியா 2ஆவது இன்னிங்ஸை ஆடியது. 5 விக்கெட் இழப்புக்கு 246 ஓட்டங்கள் எடுத்து இருந்த போது 'டிக்ளேர்' செய்தது. இதனால் இலங்கை அணிக்கு 410 ஓட்டங்கள் இலக்கு நிர்ணயிக்கப்பட்டது. தவான் 67 ஓட்டங்களுடனும், கோஹ்லி, ரோகித் சர்மா தலா 50 ஓட்டங்களும் எடுத்தனர்.

410 ஓட்டங்கள் எடுத்தால் வெற்றி என்ற நிலையில் களம் இறங்கிய இலங்கை அணி 4ஆவது நாள் ஆட்டத்தின் முடிவில் 3 விக்கெட் இழப்புக்கு 31 ஓட்டங்கள் எடுத்து இருந்தது. தனஞ்செய சில்வா 13 ஓட்டத்துடனும், மத்தியூஸ் ஓட்டங்கள் ஏதும் எடுக்காமலும் களத்தில் இருந்தனர்.

நேற்றைய ஐந்தாவது நாள் ஆட்டத்தில் இரண்டாவது இன்னிங்ஸைத் தொடர்ந்த இலங்கை அணியில், மத்தியூஸ் ஓர் ஓட்டம் எடுத்த நிலையில் இந்திய வீரர்களின் பந்து வீச்சுக்குத் தாக்குபிடிக்க முடியாமல் பவிலியன் திரும்பினார். தொடர்ந்து வந்த சந்திமல் 36 ஓட்டங்கள் எடுத்த நிலையில் அஷ்வின் சுழலில் சிக்கி ஆட்டமிழந்தார். ஒருபுறம் விக்கெட் சரிந்தாலும் மறுமுனையில் சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்திய தனஞ்செய, டெஸ்ட் அரங்கில் தனது 3ஆவது சதத்தைப் பூர்த்தி செய்தார். இவர் 119 ஓட்டங்கள் எடுத்த போது காயம் காரணமாக வெளியேறினார்.

பின் வந்த ரோஷன் சில்வா 74 ஓட்டங்கள், டிக்வெலா 44 ஓட்டங்கள் எடுத்து போராட்ட முனைப்பில் இலங்கை துடுப்பாடிக் கொண்டு இருந்தது. இலங்கை அணி இரண்டாவது இன்னிங்ஸில் 5 விக்கெட் இழப்பிற்கு 299 ஓட்டங்கள் எடுத்தபோது, போட்டியை சமநிலையில் முடிக்க இரு அணித் தலைவர்களும் ஒப்புக்கொண்டமையையடுத்து போட்டி சமநிலையானது என அறிவிக்கப்பட்டது.



இதையடுத்து 3 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரை இந்திய அணி 1:0 என வென்று கிண்ணத்தைக் கைப்பற்றிக் கொண்டது. இந்த வெற்றியோடு இந்திய அணி 9 டெஸ்ட் தொடரைத் தொடர்ச்சியாக வென்று புதிய சாதனை படைத்துள்ளது.

டெஸ்ட் கிரிக்கெட் வரலாற்றில் தொடர்ச்சியாக அதிக தொடர்களை ருசித்த அணியாக இங்கிலாந்தும், ஆஸ்திரேலியாவும் திகழ்கின்றன. அந்த அணிகள் தொடர்ந்து 9 தொடர்களை வசப்படுத்தி இருந்தன. இந்த உலக சாதனையை இந்தியா நேற்று சமன் செய்து அசத்தியுள்ளதால் பலரும் இந்திய அணிக்கு தங்களது பாராட்டுதல்களை தெரிவித்து வருகின்றனர்.







## ஓய்வு இப்போது இல்லை - சொல்கிறார் அண்டர்சன்

அடிலெய்டில் நடைபெற்று வரும் பகலிரவு டெஸ்ட் ஆட்டத்தில் 2ஆவது இன்னிங்ஸில் 5 விக்கெட் வீழ்த்திய அண்டர்சன் ஓய்வு இப்போது இல்லை என்று கூறியுள்ளார்.

ஆஸ்திரேலியா - இங்கிலாந்து அணிகளுக்கு இடையிலான ஐந்து போட்டிகள் கொண்ட ஆஷஸ் தொடரின் 2ஆவது போட்டி அடிலெய்டில் பகல் - இரவு ஆட்டமாக நடைபெற்றது. முதல் இன்னிங்ஸில் 8 விக்கெட் இழப்பிற்கு 442 ஓட்டங்கள் குவித்த ஆஸ்திரேலியா, 2ஆவது இன்னிங்ஸில் 138 ஓட்டங்களில் சுருண்டது. இதற்கு முக்கிய காரணம் இங்கிலாந்து வேகப்பந்து வீச்சாளர் ஜேம்ஸ் அண்டர்சன்தான். முதல் இன்னிங்ஸில் ஒரு விக்கெட் மட்டுமே வீழ்த்திய அவர், 2ஆவது இன்னிங்ஸில் 5 விக்கெட்டுக்கள் வீழ்த்தி அசத்தினார்.

அண்டர்சன் இதுவரை 131 டெஸ்ட் போட்டிகளில் விளையாடி 514 விக்கெட்டுக்கள் வீழ்த்தியுள்ளார். 35 வயதாகும் அண்டர்சன் அதிக விக்கெட்டுக்கள் வீழ்த்திய இங்கிலாந்து வீரர் என்ற சாதனையைப் படைத்துள்ளார்.

பிரிஸ்பேனில் நடைபெற்ற முதல் டெஸ்டில் ஆஸ்திரேலியா 10 விக்கெட் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது. முதல் இன்னிங்ஸில் இரண்டு விக்கெட்டுக்கள் மட்டுமே வீழ்த்தினார். இதனால் இந்த ஆஷஸ் தொடருடன் அண்டர்சன் ஓய்வுபெறலாம் என்ற பேச்சு எழுந்தது.

இந்த நிலையில், ஓய்வு என்ற பேச்சுக்கே இடமில்லை என்று அண்டர்சன் தெளிவுபடுத்தியுள்ளார். இது தொடர்பாக அண்டர்சன் கூறுகையில் ' நான் எப்போதும் பந்து வீசுவதுபோல்தான் தற்போதும் பந்து வீசிக் கொண்டிருக்கிறேன் என்ற உணர்வு எனக்கு உள்ளது. எனது உடல் அதற்கு ஏற்றபடி ஒத்துழைக்கிறது. என்னுடைய ஓய்வு மற்றும் கிரிக்கெட் வாழ்க்கை முடிவுக்கு வருவது குறித்துப் பேசுகிறார்கள். என்னால் இன்னும் விளையாட முடியும் என்பதை அவர்களுக்கு தெளிவுபடுத்த விரும்புகிறேன்.

விக்கெட்டுக்கள் வீழ்த்தக்கூடிய பந்துகளை வீசும் திறமை என்னிடம் உள்ளது. அடிலெய்ட் டெஸ்டில் விக்கெட்டுக்கள் வீழ்த்தியமைபோல், தொடர்ந்து செயற்பட முடியும் என்ற நம்பிக்கை உள்ளது. என்னுடைய எதிர்காலம் பற்றி அதிக அளவில் சிந்திக்க நான் விரும்பவில்லை. நான் கிரிக்கெட்டை அனுபவித்து விளையாடி வருகின்றேன். என்னுடைய அணி வீரர்களுடன் அனுபவித்து விளையாடுகிறேன். விரைவில் என்னுடைய கிரிக்கெட் ஆட்டத்தை முடிவுக்கு கொண்டு வரும் திட்டம் இல்லை என்றார்.




ஆஷஸ் 2ஆவது டெஸ்ட்:

# ஆஸியின் அதிரடிப் பந்துவீச்சால் மண் கவ்வியது இங்கிலாந்து





ஆஸ்திரேலியா - இங்கிலாந்து இடையேயான இரண்டாவது ஆஷஸ் டெஸ்ட் போட்டியில் சிறப்பான பந்துவீச்சு காரணமாக இங்கிலாந்து அணியை ஆஸ்திரேலியா வீழ்த்தியது.

ஆஸ்திரேலியா - இங்கிலாந்து அணிகள் மோதும் ஆஸ் தொடரின் 2ஆவது டெஸ்ட் போட்டி அடிலெய்ட்டில் நடைபெற்றது. ஆஸ்திரேலியா முதல் இன்னிங்ஸில் 8 விக்கெட் இழப்புக்கு 442 ஓட்டங்கள் குவித்து 'டிக்ளேர்' செய்தது. இங்கிலாந்து முதல் இன்னிங் ஸில் 227 ஓட்டங்களுடன் சுருண்டது.

ஆஸ்திரேலியா 2ஆவது இன்னிங்ஸில் 138 ஓட்டங்களுடன் சுருண்டதால் இங்கிலாந்துக்கு 354 ஓட்டங்கள் என்ற இலக்கு நிர்ணயம் செய்யப்பட்டது. 2ஆவது இன்னிங்ஸை விளையாடிய இங்கிலாந்து 4 ஆவது நாள் ஆட்ட நேர முடிவில் 4 விக்கெட்டுகள் இழப்புக்கு 176 ஓட்டங்கள் எடுத்து இருந்தது.

நேற்று கடைசி நாள் ஆட்டம் நடந்தது. வெற்றிக்கு மேலும் 178 ஓட்டங்கள் தேவை, கைவசம் 6 விக்கெட்டுகள் என்ற நிலையில் இங்கிலாந்து தொடர்ந்து ஆடியது. ஆஸ்திரேலிய வீரர்களின் நேர்த்தியான பந்துவீச்சில் இங்கிலாந்து விக்கெட்டுகள் மளமள என்று சரிந்தன.

ஸ்டார்க் பந்துவீச்சில் நிலை குலைந்த அந்த அணி 233 ஓட்டங்கள் மட்டுமே எடுத்து அனைத்து விக்கெட்டுகளையும் இழந்தது. இந்த வெற்றியின் மூலம் 5 போட்டிகள் கொண்ட தொடரில் ஆஸ்திரேலியா 2:0 என்ற கணக்கில் முன்னிலையில் உள்ளது.

(பு)

# அடுத்த 2 ஆண்டுகள் டில்லியில் கிரிக்கெட் போட்டிகள் கிடையாது!



2020ஆம் ஆண்டு தான் இனி டில்லிக்குச் சர்வதேசப் போட்டியை நடத்தும் வாய்ப்புக் கிடைக்கும் என்று இந்திய கிரிக்கெட் சபை நிர்வாகி ஒருவர் தெரிவித்துள்ளார்.

டில்லியில் நிலவும் காற்று மாசுபாட்டினால் தங்களால் இயல்பாக ஆட முடியவில்லை, சுவாசப் பிரச்சினை ஏற்படுகிறது என்று இலங்கை வீரர்கள் குற்றம் சுமத்துகிறார்கள். இந்த விவகாரம் சர்ச்சையாக வெடித்துள்ள நிலையில், அடுத்த 2 ஆண்டுக்கு டில்லியில் சர்வதேச கிரிக்கெட் போட்டி நடத்தப்படாது என்று தெரிவிக்கப்பட்டது.

அதற்கு காரணம், காற்று மாசு கிடையாது. இந்திய கிரிக்கெட் சபை சுழற்சி முறைப்படி தான் ஒவ்வொரு மாநிலத்துக்கும் கிரிக்கெட் போட்டிகளை ஒதுக்குகிறது. அந்த வகையில் இனி 2020ஆம் ஆண்டுக்கு முன்பு வரை டில்லியில் சர்வதேச போட்டிக்கு வாய்ப்பில்லை.

கிரிக்கெட் சபையின் வருங்காலக் கிரிக்கெட் தொடர் அட்டவணைப்படி 2020ஆம் ஆண்டு பெப்ரவரி-மார்ச் மாதத்தில் தான் இனி டில்லிக்குச் சர்வதேசப் போட்டியை நடத்தும் வாய்ப்பு கிடைக்கும் என்று இந்திய கிரிக்கெட் சபை நிர்வாகி ஒருவர் தெரிவித்துள்ளார். (ப)

ஊக்கமருந்துச் சர்ச்சை எதிரொலி:

# குளிர்கால ஒலிம்பிக்கில் ரஷ்யாவுக்குத் தடை

ரஷ்ய விளையாட்டு வீரர்கள் ஊக்கமருந்து பயன்படுத்தி பதக்கம் வென்றமை பலமுறை நிரூபிக்கப்பட்டதால், அடுத்தாண்டு நடைபெறவுள்ள குளிர்கால ஒலிம்பிக் போட்டியில் அந்த நாட்டுக்குத் தடை விதிக்கப்பட்டுள்ளது.

கடந்த சூச்சி குளிர்கால ஒலிம்பிக் போட்டிகள் உட்படச் சமீபத்திய தடகளப் போட்டிகள் வரை ரஷ்ய வீரர்கள் ஊக்கமருந்து பயன்படுத்தியமை நிரூபிக்கப்பட்டு அவர்களின் பதக்கங்கள் பறிக்கப்பட்டன. இதனையடுத்து, அடுத்தாண்டு தென் கொரியாவில் நடக்க இருக்கும் குளிர்கால ஒலிம்பிக் போட்டியின் அந்த அணிக்குத் தடை விதிக்க வேண்டும் எனப் பல நாடுகள் கோரிக்கை விடுத்தன.

இந்த நிலையில், இது தொடர்பான முடிவெடுக்க சுவிற்ஸர்லாந்தின் லசன்னே நகரில் சர்வதேச ஒலிம்பிக் சபைக் கூட்டம் நடைபெற்றது. அந்நாட்டு அதிகாரிகளின் உதவியுடன் வீரர், வீராங்கனைகள் ஊக்க மருந்து பயன்படுத்தியது சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபிக்கப்பட்டுள்ளது என விவாதம் நடந்தது.

இதன் காரணமாக, வரும் குளிர்கால ஒலிம்பிக் போட்டியில் பங்கேற்க ரஷ்யாவுக்குத் தடை விதிக்கப்பட்டது. இருப்பினும், ரஷ்ய வீரர்கள் தனிப்பட்ட முறையில் ஒலிம்பிக் கொடியின் கீழ் பங்கேற்கலாம் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. அவர்களும் கடும் சோதனைக்கு பின்னரே விளையாட்டுக்கு அனுமதிக்கப்படுவார்கள் என்றும் முடிவெடுக்கப்பட்டுள்ளது.



## அரச...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) உள்நாட்டிலும், சர்வ தேசத்திலும்அரசைப்பாதுகாக்கும்ஒரு கட்சியாகஇலங்கைத்தமிழரசுக் கட்சி செயற்படுகிறது. அரசமைப்பு வழிநடத்தல் குழு 73 தடவைகள் கூடியுள்ளது. இதில் ஒரு தடவை கூடத் தமிழரசுக் கட்சி வடக்கு – கிழக்கு இணைப்புக் குறித்துப் பேசவில்லை.

இவ்வாறு தெரிவித்தார் ஈ.பி. ஆர்.எல்.எவ். தலைவர் சுரேஷ் பிறேமச்சந்திரன்.

தமிழர் விடுதலைக் கூட்டணியின் உதயசூரியன் சின்னத்தில் உருவாகியுள்ள புதிய கூட்டமைப்பின் ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்து தெரிவித்த போதே அவர் இவ்வாறு கூறினார்.

அவர்மேலும்தெரிவித்தவை வருமாறு:–

தமிழ் மக்கள் தாம் தேர்ந்தெடுத்தநாடாளுமன்றஉறுப்பினர்களால் ஏமாற்றப்பட்டுக் கொண்டிருக்கும்போது மக்கள் கொடுத்த ஆணையை மறந்து அரசின் நிகழ்ச்சி நிரல்களை நிறைவேற்றி, உள்நாட்டிலும் சர்வதேச அரங்கிலும் அரசைப் பாதுகாக்கும் ஒரு கட்சியாகத் தமிழரசுக் கட்சி செயற்பட்டுக் கொண்டிருக்கிறது.

சமஷ்டி என்பதற்கு இடமே இல்லை. ஒற்றையாட்சிதான் முடிந்த முடிவெனவும் ஜனாதிபதியும் பிரதமரும் உள்நாட்டிலும் வெளி நாடுகளிலும் வலியுறுத்திக்கூறியபிறகும்இடைக்கால அறிக்கை என்பது சமஷ்டியைக் கொண்டது எனத் தமிழரசுக் கட்சி தமிழ் மக்கள் மத்தியில்தவறானபிரசாரத்தை முன்னெடுக்கிறது.

அரசமைப்பு வழிநடத்தல் குழு 73 முறை கூடியபோதும் அதில் அங்கம் வகிக்கும் தமிழரசுக் கட்சி உறுப்பினர்கள் வடக்கு – கிழக்கு இணைப்பைப் பற்றிப்பேசாது, வடக்கு – கிழக்கு இணைப்பு சாத்தியமில்லை என்று கூறிவரும்சூழ்நிலையில் மாற்று அணி ஒன்றின் தேவை மக்களாலும், தமிழ் அரசியல் கட்சிகளாலும் உணரப்பட்டது.

இன்றுவெளிப்படையாகவும் பட்டவர்த்தனமாகவும்தமிழரசுக் கட்சி அரசின் வரவு – செலவுத் திட்டத்துக்கு ஆதரவாகவும் குறிப்பாக வடக்கு – கிழக்கை ஆக்கிரமித்துக்கொண்டிருக்கும் இராணுவத் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கான பல ஆயிரம்கோடிரூபாபாதுகாப்புச் செலவீனத்தை அங்கீகரித்து வாக்களித்தும் உள்ளது.

தமிழரசுக்கட்சியின்தன்னிச்சையான நடவடிக்கைகளைக் கட்டுப்படுத்தி அது சரியான பாதையில் செல்வதற்கு எதிர்வரும்உள்ளூராட்சித்தேர்தலில் தமிழரசுக் கட்சியைத் தோற்கடிக்கவேண்டிய தேவை எழுந்துள்ளது.

உள்ளூராட்சிசபைத் தேர்தலில் தமிழரசுக் கட்சியைத் தோற்கடிப்பதன் மூலமே மக்களின் மன உணர்வுகளை அவர்களுக்குப் புரியவைக்க முடியும்என்பதால்தமிழர்களின் எதிர்காலநலன்கருதிதமிழரசுக் கட்சிக்கு எதிரான ஒரு பலமான பொதுக் கூட்டமைப்பை உருவாக்கவேண்டிய தேவை தமிழ் மக்களுக்கு ஏற்பட்டுள்ளது.

தமிழ்மக்களின்அடிப்படைக் கோரிக்கைகளை விட்டுக் கொடுக்காத புதியதோர் கூட்டமைப்பு தேவை என்ற அடிப்படையில் ஒத்த கருத்துள்ள பல கட்சிகளும்அமைப்புகளும்கூடி உருவாக்கியதுதான் இந்தப் புதிய கூட்டமைப்பும்.

இந்தக் கூட்டமைப்பில் தமிழர்விடுதலைக்கூட்டணி,ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி, ஜனநாயகத் தமிழரசுக் கட்சி, ஈழவர் ஜனநாயக முன்னணி (ஈரோஸ்), புனர்வாழ்வு அளிக்கப்பட்ட தமிழ் விடுதலைப் புலிகள்,சமூக சமத்துவத்தை ஊக்குவிக்கும்பொது அமைப்புகள் மற்றும் சிவில் அமைப்புகள் இணைந்து போட்டியிட முடிவெடுத்துள்ளன.

தமிழரின் ஒற்றுமையை வலியுறுத்தித் தமிழினத் தலைவர் தந்தை செல்வா உருவாக்கிய தமிழரசுக் கட்சியாலும் ஜி.ஜி. பொன்னம்பலம் தலைமையிலான அகில இலங்கைத் தமிழ் காங்கிரஸாலும் உருவாக்கப்பட்ட தமிழர் விடுதலைக் கூட்டணியின் சின்னமான உதயசூரியன் சின்னத்தையே இப்புதிய கூட்டமைப்பு தனது பொதுவான தேர்தல் சின்னமாக ஏற்றுக்கொண்டுள்ளது.

தமிழ்த்தேசியக்கூட்டமைப்பு உருவாக்கப்பட்டபோது உதயசூரியன் சின்னமே கூட்டமைப்பின்சின்னமாகஅனைவராலும் ஏற்றுக்கொள்ளப்பட்டது. உட்கட்சி முரண்பாடு காரணமாக இடைப்பட்ட காலத்தில் அது தமிழர் விடுதலைக் கூட்டணியின்சின்னமாகஇருந்தபோதும் மீண்டும் ஒற்றுமையின் சின்னமாக –தமிழ் மக்களின் உரிமைக் குரலை வெளிப்படுத்தும் சின்னமாக – தமிழ் மக்களுக்கு ஒரு விடியலை ஏற்படுத்தும் சின்னமாக உதயசூரியனை அனைவரும் ஏற்றுக்கொண்டிருக்கிறோம்.

எமது முன்னாள் தலைவர்களால் உருவாக்கப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்ட திம்புக் கோட்பாட்டின் அடிப்படையில் வடக்கு – கிழக்கு என்பது தமிழர்களின் வரலாற்றுபூர்வீமான வாழ்விடமாக ஏற்றுக் கொள்ளப்பட்டு அவர்களுக்கு உரித்தான சுயநிர்ணய உரிமை அங்கீகரிக்கப்பட்டு ஒருமித்த நாட்டுக்குள் தமிழர்களுக்கான சுயாட்சி உருவாக்கப் படவேண்டும். அதுவே அவர்களின் பாதுகாப்பையும் தனித்துவத்தையும் உறுதிப்படுத்துவதற்கானஒரேவழிஎன்றஅடிப்படையில் இந்தக் கூட்டமைப்பின் அடிப்படைக்கொள்கையாகவும் நோக்கமாகவும் இது ஏற்றுக் கொள்ளப்பட்டுப்பிரகடனப்படுத்தப்படுகின்றது.

இந்த அடிப்படையிலேயே எதிர்வரும்உள்ளூராட்சிச்சபைத் தேர்தலில் போட்டியிடுவதெனவும் இந்தக் கூட்டமைப்பு முடிவெடுத்துள்ளது.

எமதுகொள்கைகள் மற்றும் நோக்கங்களைஏற்றுக்கொண்ட சகல அரசியல் கட்சி களையும் பொது அமைப்புக் களையும் சிவில் அமைப்புக்க ளையும் எம்முடன்இணைந்துபணிபுரிய வருமாறு அழைப்பு விடுக்கின்றோம்.

கடந்த கால முரண்பாடுகளை மறந்து புதிய பாதையில் பயணிக்கவேண்டியதேவைஎம் எல்லோருக்கும்ஏற்பட்டுள்ளது. இங்கு தமிழர்களின் விடுதலையும் அவர்களின் சமூக பொருளாதாரவளர்ச்சியும்பாதுகாப்புமே முதன்மையானது – என்றார். (ஐ–7)

## இந்தியா...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) வியல் மையம் தெரிவித்தது.

இந்தியாவின் பல இடங்களில் நேற்று இரவு 8.30 மணியளவில் நிலநடுக்கம் ஏற்பட்டுள்ளது.

தலைநகர் புதுடில்லி, ஹரியானா, உத்தரகண்ட், உத்ராஞ்சல், பஞ்சாப், டெஹ்ராடூன், உத்தரப்பிர தேசம், ஹிமாச்சலப் பிரதேசம் ஆகிய இடங்களில் நேற்று இரவு நிலநடுக்கம்ஏற்பட்டதாகஐரோப்பிய மத்திய தரைக்கடல் புவிச்சரித வியல் மையம் தெரிவித்துள்ளது.

ரிச்டர் அளவில் 5.5 ஆகப் பதிவான நிலநடுக்கம் வட இந்தியாவின் பல மாநிலங்களில் உணரப்பட்டுள்ளது.

## 16 உள்ளூராட்சி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) கள் ஜனநாயக் கட்சி (ஈ.பி.டி.பி) நேற்றுச் செலுத்தியது.

ஈ.பி.டி.பியின் யாழ். மாவட்ட உதவி நிர்வாகச் செயலாளர் சிவகுரு பாலகிருஸ்ணன் (ஜீவன்),மேலதிகநிர்வாகச்செயலாளர் ஐயாத்துரை ஸ்ரீரங்கேஸ்வரன் (ரங்கன்) உள்ளிட்டோர் அடங்கிய கட்சியின் உறுப்பினர்கள் யாழ்ப்பாண மாவட்டத் தெரிவத்தாட்சி அலுவலகத்தில் கட்டுப்பணத்தைச் செலுத்தினர்.

கடந்த மாதம் 28ஆம் திகதி சாவகச்சேரி நகரசபைக்கான கட்டுப்பணத்தை ஈ.பி.டி.பி. செலுத்தியிருந்தமைகுறிப்பிடத் தக்கது. (ஐ–7)

## மீசாலையில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) இடத்தில்உயிரிழந்தார். அவரது கணவர் தலையில் படுகாயமடைந்த நிலையில் சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

நேற்றுப் புதன்கிழமை மாலை 4 மணியளவில் இந்த விபத்து இடம்பெற்றது.

சாவகச்சேரியில் இருந்து கொடிகாமம் நோக்கி வயோதிபத் தம்பதிகள் மோட்டார் சைக்கிளில் வந்தவேளை, வீதி ஓரத்தில் நின்ற காரின் சாரதி கார்க் கதவைத்திடீரெனத்திறந்துள்ளார். இதனால் இருவரும் கார்க் கதவில் மோதி வீதியில் விழுந்தனர் எனவும், இதன்போது பின்னால் வந்த டிப்பர் பெண்மணியை மோதித் தள்ளியதாகவும் சம்பவத்தை நேரில் பார்த்தவர்கள் தெரிவித்தனர்.

மீசாலை வடக்கைச் சேர்ந்த சந்திரபாலன்பரமேஸ்வரி(வயது – 62) என்ற பெண்ணே சம்பவ இடத்தில் உயிரிழந்தவராவார். அவரதுகணவரானசின்னையா சந்திரபாலன் (வயது – 67) தலையில் காயமடைந்த நிலையில் சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

விபத்து தொடர்பான விசாரணைகளைச் சாவகச்சேரிப் பொலிஸார் மேற்கொண்டுள்ளனர். (ஐ –21)

## புளொட்டின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) தீர்மானிக்கும். இந்தக் கூட்டம் இன்று மாலை வவுனியாவில் நடக்கும்.

இவ்வாறு தெரிவித்தார் புளொட் அமைப்பின் தலைவரும், நாடாளுமன்ற உறுப்பினருமான த.சித் தார்த்தன்.

புளொட் தனித்து நின்று தேர்தலை எதிர்கொள்ளாது எனவும் அவர் கூறினார்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பங்காளிக் கட்சிகளான ஈ.பி.ஆர்.எல்.எவ்., ரெலோ ஆகியன தமிழரசுக் கட்சியுடன் இணைந்து தேர்தலை எதிர் கொள்வதில்லை என்று தீர்மானம் எடுத்துள்ளன.

இந்நிலையில் புளொட்டின் நிலைப்பாடு என்ன என்று வினவியபோதே சித்தார்த்தன் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பங்காளிக் கட்சிகளில் ஒன்றான ரெலோ உறுப்பினர்கள் இன்று (நேற்று) எங்களைச் சந்தித்துப்பேச்சுநடத்தினார்கள். ஆயினும்எங்கள்நிலைப்பாடு இன்னும் இறுதிசெய்யப்படவில்லை.

எமது நிலைப்பாடு தொடர்பில் புளொட் மத்திய குழுவைக் கூட்டிப் பேச்சு நடத்தி அதில் இறுதித்தீர்மானமெடுக்கப்படும்.

அதேவேளை, புளொட் தனித்து நின்று உள்ளூராட்சித் தேர்தலை எதிர்கொள்ளப் போவதில்லை. எங்கள் முடிவு விரைவில் தெரிவிக்கப்படும் – என்றார். (ஐ–7)

## பல...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) தாக அறிவித்த ரெலோ, பல கட்சிகளுடன் நேற்று ஓடி ஓடிச் சந்திப்புக்களில் ஈடுபட்டது.

இன்றுவியாழக்கிழமைஅது இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் கட்சியுடன்பேச்சுநடத்தவுள்ளது.

சுரேஷ் தலைமையிலான ஈ.பி.ஆர்.எல்.எவ்., சித்தார்த்தன் தலைமையிலான புளொட், தமிழர் விடுதலைக் கூட்டணி ஆகியவற்றை ரெலோ தலைவர்கள் நேற்று ஓடி ஓடிச் சந்தித்துப் பேச்சுக்களில் ஈடுபட்டனர். தமிழரசுக் கட்சியுடனான உறவை முறித்துக்கொள்வதாக நேற்று அதிகாலை அறிவித்த ரெலோ, நேற்று மாலைக்குள் இவ்வாறு பல தரப்புப் பேச்சுக்களை மேற்கொண்டது. அதே நேரம், தமிழரசுக் கட்சியுடன் மீண்டும் இணைக்கத்தை ஏற்படுத்தும் சந்திப்புக்களும் கொழும்பில் நடந்தன.

இதேவேளை, ரெலோவின் அரசியல் குழு, யாழ்ப்பாணம் கொட்டடியில் நேற்று மாலை கூடிய ஆராய்ந்தது.

அந்தச் சந்திப்பின் பின்னர் செய்தியாளர்களுக்குக் கருத்து வெளியிட்ட ரெலோவின் செயலாளர்நாயகம் என்.ஸ்ரீகாந்தா,

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவரும் எதிர்க்கட்சித் தலைவருமான இரா.சம்பந்தன் இன்று (நேற்று) மாலை என்னுடன் தொலைபேசியில் உரையாடினார்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு இன்றைய நாள் (நேற்று) கடினமாக அமைந்துவிட் டதாகவும் முரண்பாடுகள் தொடர்பில் கூடிப்பேசுவோம் எனவும் அவர் என்னிடம் கேட்டுக்கொண்டார். கூட்டமைப்பின்தலைமையுடன் எந்த நேரமும் பேச்சு நடத்த ரெலோ தயார் என்பதை அவரிடம் நான் கூறினேன்.

எனினும், எமது முடிவில் உறுதியாகவும் தெளிவாகவும் இருக்கின்றோம். ஈ.பி.ஆர். எல்.எப்., ரெலோ,தமிழர் விடுதலைக் கூட்டணி உள்ளிட்ட தரப்புகளுடன் நாம் இன்று (நேற்று) பேச்சு நடத்தினோம். அகில இலங்கைத்தமிழ்காங்கிரஸின் தலைவர்கஜேந்திரகுமாருடனும் நாளை (இன்று)பேச்சு நடத்தவுள்ளோம். (sic)

உண்மையில் இந்த விடயம் எமக்குச் சவாலான விடயமில்லை. எமதுநீண்டகாலஅரசியல் பயணத்தில்சாதாரண விடயமாகும். ஆனால் குறுகியஅரசியல் நலனுக்காகத் தமிழ்த் தேசியத் தின்ஒற்றுமைஎன்பது விளையாட்டுப்பந்தாக மாறிவிடக்கூடாது

எமது நகர்வுகள் தொடர்பில் கலந்துரையாடிவருகின்றோம். தமிழரசுக் கட்சியும் பேச்சுக்கு அழைத்தால்செல்வோம் – என்றார்.

இந்தக் கூட்டத்தில் வடக்கு மாகாண சபை உறுப்பினர்களானஎம்.கே.சிவாஜிலிங்கம், விந்தன்கனகரட்ணம்உள்ளிட்ட ரெலோவின் மூத்த உறுப்பினர்கள் கலந்துகொண்டனர். (ஐ–7)

## இந்தக்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) வீ.ஆனந்தசங்கரிதெரிவித்தார்.

தமிழர் விடுதலைக் கூட்டணியின்உதயசூரியன்சின்னத் தில்புதியகூட்டு உருவாக்கப்பட்ட பின்னர் கருத்து வெளியிட்ட போதே அவர் இவ்வாறு கூறினார்.

இதேவேளை, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை உடைத்துப் புதிய தேர்தல் அணி உருவாகுவதன் பின்னணியில் இந்தியா செயற்படுகின்றது என்ற கருத்தை மறுத்த ஈ.பி.ஆர். எல்.எப். தலைவர் சுரேஷ் பிறேமச்சந்திரன், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பங்காளிக் கட்சிகள் மற்றும் அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் ஆகிய கட்சிகளையும் தம்முடன் இணைந்து கொள்ளுமாறு அழைப்பு விடுத்தார். (ஐ)

## தமிழரசு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) தமிழரசுக்கட்சிக்கும்,ரெலோவுக்கும் இடையில் ஏற்பட்ட முரண்பாடு குறித்து செல்வம் அடைக்கலநாதனும், சுமந்திரனும் நேற்று மாலை 5.30 மணி முதல் நேற்றிரவு 7.30 மணி வரை சுமந்திரனின் கொழும்பு வெள்ளவத்தை இல்லத்தில் விரிவாகப் பேசினர்.

அங்கு எட்டப்பட்ட முடிவுகள் குறித்து சுமந்திரன் தெரிவித்தவை வருமாறு:–

“பங்கீட்டுப் பிரச்சினைகள் குறித்து நாங்கள் விரிவாகப் பேசினோம். ஒவ்வொரு இடத்திலும் அவற்றுக்கான தீர்வுகளை எப்படிப் பெற்றுக் கொள்வது என்பதுபற்றியமாற்றுவழிகளை அடையாளம் கண்டுள்ளோம். அந்த வழிகளின் அடிப்படையில்முரண்பாடுகளைத்தீர்ப்பது குறித்து நான் எனது கட்சியான தமிழரசுக் கட்சியுடனும், செல்வம் தமது கட்சியான ரெலோவுடனும் பேச முடிவு செய்துள்ளோம்.

“அந்தப் பேச்சுகளில் அடிப்படையில் முரண்பாடுகளை சுலபமாகக் களைந்து இணக்கம் நிலையை ஏற்படுத்தலாம் என நம்புகிறோம்.” – என்றார் சுமந்திரன். (உ)

## கோட்டாவை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) வுக்குமேன்முறையீட்டுநீதிமன்றால்விடுக்கப்பட்டஇடைக்காலத் தடை உத்தரவு எதிர்வரும் 15ஆம் திகதி வரை நீடிக்கப்பட்டது.

கோட்டாபய ராஜபக்ஷவின் தந்தை டீ. ஏ. ராஜபக்ஷவுக்கு நினைவிடம் அமைப்பதற்கும், நினைவுக் காட்சியகம் ஒன்றை அமைப்பதற்கும் அரச நிதியை பயன்படுத்தியதாகத்தெரிவித்து பொலிஸ் நிதி குற்றவியல் விசாரணைப் பிரிவு, கோட்டாபய ராஜபக்ஷவுக்கு எதிராக கொழும்புநீதிவான்நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்தது.

இந்தக்குற்றச்சாட்டைஎதிர்த்தும் தன்மீதான குற்றவியல் நடவடிக்கைக்கு தடை விதிக்குமாறு கோரியும் கோத்தாபய ராஜபக்ஷவால் மேன்முறையீட்டுநீதிமன்றில் மனுத்தாக்கல் செய்யப்பட்டது.

கோட்டாபய ராஜபக்ஷ தாக்கல் செய்த மனுவை விசாரணைக்குஏற்றமேன்முறையீட்டு நீதிமன்றம், அவருக்கு எதிராக நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு நிதிக் குற்ற விசாரணைக்கு பிரிவினருக்கு நேற்று வரை தடை விதித்திருந்தது.

இவ்வாறு விதிக்கப்பட்ட இடைக்காலத்தடைஉத்தரவைத் தொடர்ந்து நீடிப்பதா? நிராகரிப்பதா? தொடர்பிலான மீள் விசாரணைநேற்றுமேன்முறையீட்டு நீதிமன்றத்தில் இடம்பெற்றது.

மீள்விசாரணையின்போதே இடைக்காலத் தடையுத்தரவை எதிர்வரும் 15 ஆம் திகதிவரை நீடித்து மேன்முறையீட்டு நீதிமன்று கட்டளையிட்டது. (ஐ)

## உதயசூரியன்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) அலுவலகத்தில் நேற்று நண்பகல் ஆரம்பமான கூட்டத்தையடுத்து பிற்பகல் 2 மணியளவில் இந்தப் புதிய அணிக்கான உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டது.

தமிழர்விடுதலைக்கூட்டணி, சுரேஷ் பிறேமச்சந்திரன் தலைமையிலான ஈ.பி.ஆர்.எல்.எப்., தமிழரசுக் கட்சியின் முன்னாள் இளைஞர் அணித் தலைவர் சிவகரன் தலைமையிலான ஜனநாயகத் தமிழரசுக் கட்சி, ஈரோஸ்,திருகோணமலையைத் தளமாகக் கொண்டு இயங்கும் புனர்வாழ்வளிக்கப்பட்ட தமிழ் விடுதலைப் புலிகள் மற்றும் 3 பொது அமைப்புக்கள் இணைந்துஇந்தக்கூட்டணியை

பக்கம் 03

# புதுக்குடியிருப்பு மத்திய கல்லூரிக்கு மூன்று லட்சம் ரூபா நிதியுதவி

முல்லைத்தீவு, டிசெ. 07

முல்லைத்தீவு மாவட்டத்தில் உள்ள புதுக்குடியிருப்பு மத்திய கல்லூரிக்கு வடமாகாணசபை உறுப்பினர் ரவிகரன் மூன்று லட்சம் ரூபாயை ஒதுக்கீடு செய்துள்ளார்.

2017 ஆம் ஆண்டுக்கான பிரமாண அடிப்படையிலான நன்கொடை நிதி ஒதுக்கீட்டின் ஊடாக இந்தப் பணம் வழங்கப்பட்டுள்ளது.

பாடசாலையின் சுற்று மதிலுக்காகவும், நீர் வழங்கலுக்கான கருவிகளுக்காகவும் இந்த ஒதுக்கீடு பயன் படுத்தப்பட்டுள்ளது என்றும் தெரிவிக்கப்படுகின்றது. (க)







# பட்டப்படிப்பைத் தொடரும் மாணவர்களுக்கு கடன் சலுகை வழங்குவதற்கு அரசு தீர்மானம்!



கொழும்பு, டிசெ. 07

பட்டப்படிப்பு கற்கை நெறியைத்தொடரும் மாணவர்களுக்கு கடன் சலுகை வழங்குவதற்கு அரசு தீர் மானித்துள்ளது என நாடாளுமன்ற மறுசீரமைப்பு மற்றும்காணி அமைச்சரும் அமைச்சரவை துணைப்பேச்சாளருமான கயந்த கருணாதிலக தெரிவித்துள்ளார்.

அரசாங்க தகவல் திணைக்களத்தின் கேட்போர் கூடத்தில் நேற்று நடைபெற்ற அமைச்சரவைத் தீர்மானங்களை அறிவிக்கும் ஊடகவியலாளர் மாநாட்டில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கும்போதே அமைச்சரும் அமைச்சரவை துணைப்பேச்சாளருமான கயந்த கருணாதிலக குறிப்பிட்டுள்ளார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

அரச பல்கலைக் கழகங் களுக்கு மாணவர்களை தெரிவுசெய்ய பயன்படுத்தப்படும் வெட்டுப் புள்ளியின் காரணமாக அரச பல்கலைக் கழகங்களில் இணைந்து கொள்ள முடியாத மாணவர்களுக்கு பட்டங்களை வழங்கும் அரசு சாராத உயர் கல்வி நிறுவனங்களில் பட்டப்படிப்பு கற்கை நெறியைத் தொடர்வதற்காக இந்தக்கடன்வழங்கப்படவுள்ளது.

இதன் கீழ் ஆகக்கூடிய கடன் தொகையாக 8 லட்சம் ரூபா வழங்கப்படவுள்ளது. வட்டியற்ற கடன் வசதி திட்டம் ஒன்று 2017 ஆம் ஆண்டுவரவு-செலவுதிட்டத்தில் முன்மொழியப்பட்டு இருந்தது. அரசு இதனை தற்போது நடைமுறைப்படுத்தி வருகின்றது.

இதற்கமைவாக அரசு அல்லாத கல்வி நிறுவனங்களில் பட்டப் படிப்பைத் தொடர்வதற்காக கல்விப் பொதுதராதர உயர்தர பரீட்சையில் சித்தி எய்திய மாணவர்களுக்கு பொதுவான செலவுகளின் அடிப் படையில் 11லட்சம் ரூபா வரையில் கடன் தொகையை வழங்க அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

ஏனைய கற்கை நெறிகளை தொடரும் மாணவர்களுக்கும் ஏனைய செலவுகளுக்காக வருடத்திற்கு 75ஆயிரம் ரூபா வீதம் வழங்குவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இந்த வேலைத் திட்டத்தின் கீழ் வழங்கப்படும் சலுகை கடன் தொகையினை மூன்று வருட பட்டப்படிப்பிற்காக 10லட்சத்து 25ஆயிரம் ரூபா வரையிலும், நான்கு வருட பட்டப்படிப் பிற்காக 11லட்சம் ரூபா வரையும் அதிகரிக்கப்படவுள்ளது.

இது தொடர்பில் தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார விவகாரங்கள் தொடர்பான அமைச்சர் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கசமர்ப்பித்த ஆவணங்களுக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

## புனரமைக்கப்படாமல் காணப்படும் மன்னாகண்டலை வீதி: மக்கள் கவலை

முல்லைத்தீவு - புதுக்குடியிருப்பு, ஒட்டுசுட்டான் வீதி புனரமைக்கப்பட்டபோதும், மன்னா கண்டலையை அண்மித்த பகுதியில் இரண்டு கிலோமீற்றர் வீதி புனரமைக்கப்படாமல் உள்ளது என அந்த வீதியைப் பயன்படுத்தும் மக்கள் கவலை தெரிவித்துள்ளனர்.

இது தொடர்பில் மக்கள் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

புதுக்குடியிருப்பிலிருந்து ஒட்டுசுட்டான் வரை செல்கின்ற பிரதான வீதியின் புதுக்குடியிருப்பிலிருந்தும் ஒட்டுசுட்டான்பகுதியிலிருந்தும் புனரமைக்கப்பட்டிருக்கின்றது.

இந்த நிலையில், புதுக்குடியிருப்பிற்கும், ஒட்டுசுட்டானுக்கும் இடைப்பட்ட காட்டுப் பகுயில் சுமார் இரண்டு கிலோமீற்றர் வீதி புனரமைக்கப்படாத நிலையில் காணப்படுகின்றது.

இந்தப் பகுதியை புனரமைக்குமாறு பல தடவைகள் கோரிக்கை விடுத்தபோதும், இதுவரை நடவடிக்கை எடுக்கவில்லை எனக் குறிப்பிட்டுள்ளனர்.

அண்மையில் நடைபெற்ற முல்லைத்தீவு மாவட்ட ஒருங்கிணைப்புக்குழுக் கூட்டத்தில் வட மாகாணசபை உறுப்பினர் து.ரவிகரன் இந்த வீதியைப் புனரமைக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என கோரிக்கை விடுத்திருந்தார்.

இது தொடர்பில் வீதி அபிவிருத்தி அதிகார சபையின் உத்தியோகத்தர் கருத்துத் தெரிவிக்கையில்-

இந்த வீதியானது வீதி அபிவிருத்தித் திணைக்களத்திற்கு வழங்கப்பட்டு புனரமைப்பிற்கு விடப்பட்டிருக்கிறது.

இந்த நிலையில் அந்த பகுதியை புனரமைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது எனச் சுட்டிக்காட்டியுள்ளார். (க)

# சமுர்த்தி அபிமானி மார்கழி விழா; விற்பனைக் கண்காட்சி வவுனியாவில்!







'சமுர்த்தி அபிமானி 2017 மார்கழி விழா' மாவட்ட மட்டத்திலான விற்பனைக் கண்காட்சி நேற்றைய தினம் இடம்பெற்றது.

வவுனியா மாவட்ட அரசாங்க அதிபர் சோமரட்ண விதானபத்திரன தலைமையில் வவுனியா மாவட்ட செயலக வளாகத்தில் இந்தக் கண்காட்சி இடம் பெற்றது. இதன்போது மாவட்ட அரசாங்க அதிபர் நாடா வெட்டி விற்பனை கண்காட்சியினை திறந்து வைத்ததுடன், விற்பனை நிலையங்களையும் பார்வையிட்டார்.

இந்தக் கண்காட்சி இன்றும் இடம்பெறவுள்ளது என சமுர்த்தி வங்கியின் பணிப்பாளர் தெரிவித்துள்ளார்.

இந்த நிகழ்வின்போது மேலதிக அரசாங்க அதிபர் எஸ்.திரேஸ்குமார், உதவி அரசாங்க அதிபர் கே.கமல தாசன், வவுனியா பிரதேச செயலாளர் க. உதயராசா, வவுனியா வடக்கு பிரதேச செயலாளர் கே.பரந்தாமன் உட்பட வவுனியா மாவட்ட செயலக உத்தியோகத்தர்கள், சமுர்த்தி உத்தியோகத்தர்கள், பிரதேச செய லக உத்தியோகத்தர்கள் எனப் பலரும் கலந்து கொண்டிருந்தனர். (க)

காலைக்கதிர் Kalaikkathir



# யாழ்ப்பாணப் பல்கலைக்கழக 33 ஆவது பட்டமளிப்பு நாளை




யாழ்ப்பாணம், டிசெ.07

யாழ். பல்கலைக்கழக 33 ஆவது பொதுப் பட்டமளிப்பு விழாவின் முதலாவது பகுதி நாளை வெள்ளிக்கிழமை காலை 9 மணி முதல் கைலாசபதி கலையரங்கில் இடம்பெறவுள்ளது.

அதன் இரண்டாவது பகுதி எதிர்வரும் 2018 ஆம் ஆண்டு மார்ச் மாதம் நடத்தப்படும் என்று யாழ். பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேராசியர் இ.விக்னேஸ்வரன் தெரிவித்தார்.

33 ஆவது பட்டமளிப்பு விழாவின் முதலாவது அமர்வு தொடர்பாக ஊடகங்களுக்கு விளக்கமளிக்கும் செய்தியாளர் சந்திப்பில் பேசியபோதே அவர் இவ்வாறு கூறினார்ர்.

நேற்றுப் புதன்கிழமை பல்கலைக்கழகச் சபை அறையில் இச் செய்தியாளர் சந்திப்பு இடம்பெற்றது.


அங்கு உரையாற்றிய துணைவேந்தர் மேலும் தெரிவிக்கையில்,

யாழ்ப்பாணபல்கலைக் கழகத்தின் 33 ஆவது பொதுப் பட்டமளிப்பு விழா இம்முறை இரண்டு பகுதிகளாக நடத்தப்படவுள்ளது. முதலாவது பகுதி எதிர்வரும் 8 ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 9 மணி முதல் 5 அமர்வுகளாக நடைபெறவுள்ளது. இந்த பட்டமளிப்பு விழாவில் உயர்பட்ப்படிப்புகள்பீடம், முகாமைத்துவ வணிக பீடம், கலைப்பீட சட்டத்துறை, விவசாயபீடம், மருத்துவ பீடத்தின் இணை மருத்துவ அலகு, சித்த மருத்துவத்துறை, வவுனியா வளாகத்தின் பிரயோக விஞ்ஞான பீடம், வணிகக் கற்கைகள் பீடம் ஆகியவற்றைச் சேர்ந்த 816 பட்டதாரிகள் பட்டங்களைப் பெறவுள்ளனர்.

இவர்களில், உயர் பட்டப் படிப்புகள் பீடத்தைச் சேர்ந்த ஒருவர் கலாநிதிப் பட்டத்தையும், 64 பேர் பட்டப்பின் தகைமைகளையும், முகாமைத்துவ வணிக பீடத்தைச் சேர்ந்த 293 பேர் வியாபார நிர்வாக மாணி பட்டத்தையும், 48 பேர் வணிகமாணி பட்டத்தையும், கலைப்பீடச் சட்டத்துறையைச் சேர்ந்த 63 பேர் சட்டமாணிப் பட்டத்தையும், விவசாயபீடத்தைச் சேர்ந்த 53 பேர் விவசாய விஞ்ஞானமாணிப் பட்டத்தையும், மருத்துவ பீடத்தின் இணை மருத்துவ அலகின் 58 பேர் மருத்துவ ஆய்வுகூடத் தொழில்நுட்பம், மருந்தாளர், தாதியம் ஆகிய துறைகளில் விஞ்ஞானமாணிப் பட்டங்களையும், வவுனியா வளாகத்தின் பிரயோக விஞ்ஞான பீடத்தைச் சேர்ந்த 84 பேர் பிரயோக விஞ்ஞானமாணிப் பட்டத்தையும், 110 வணிகக் கற்கைகள் பீடத்தைச் சேர்ந்த 110 பேர் வணிகமாணிப் பட்டத்தையும் 10 பேர் நேரடியாகப் பிரசன்னமாகாத நிலையிலும் பட்டங்களைப் பெறவுள்ளனர்.

எதிர்வரும் 2018, மார்ச் மாதம் நடைபெறவுள்ள 33 ஆவது பொதுப் பட்டமளிப்பு விழாவின் இரண்டாவது பகுதியில் விஞ்ஞான பீடம், பொறியியல் பீடம், மருத்துவ பீடம், கலைப்பீடம், மற்றும் உயர் பட்டப் படிப்புகள் பீடங்களைச் சேர்ந்த பட்டதாரிகளுக்கு பட்டங்கள் வழங்கப்படவுள்ளதுடன், வெளிவாரியாகப் பட்டம் பெறுபவர்களின் பட்டங்களும் உறுதிப்படுத்தப்படவுள்ளன.

ஐந்து அமர்வுகளில் முதலாம் அமர்வு காலை 9 மணிக்கும், இரண்டாவது அமர்வு முற்பகல் 10.45 மணிக்கும், மூன்றாவது அமர்வு பிற்பகல் 1.15 க்கும், நான்காவது அமர்வு பி.ப 3 மணிக்கும், ஐந்தாவது அமர்வு மாலை 4.30 மணிக்கும் ஆரம்பமாகவுள்ளன –என்றார். (ஐ-7)




# மயிலிட்டித்துறையைச் சீரமைக்க அமைச்சரவை நேற்று அனுமதி

அரச படைகளால் அண்மையில் விடுவிக்கப்பட்ட மயிலிட்டித் துறைமுகத்தை விரைவாகச் சீரமைத்துக் கடற்றொழிலாளர்களின் பாவனைக்கு வழங்க அமைச்சரவை ஒப்புதல் வழங்கியுள்ளது.

வலிகாமம் வடக்கிலுள்ள மயிலிட்டி மீன்பிடித் துறைமுகம் 1980ஆம் ஆண்டு காலப் பகுதியில் நாட்டின் கடல் தொழில் துறைக்குக் குறிப்பிடத்தக்க பங்களிப்பை வழங்கிய முக்கிய துறைமுகங்களில் ஒன்றாகும். அது மாத்திரமன்றித் தென்கிழக்கு பருவப் பெயர்ச்சி காலப்பகுதியிலும் பயன்படுத்தக்கூடியது இதன் சிறப்பாகும்.

மோதல்கள் நிலவிய காலப் பகுதியில் இதன் செயற்பாடுகள் முடங்கியிருந்தன. வடக்கு அமைதி நிலை மீண்டும் திரும்பியதை அடுத்து, கடந்த ஜூலை மாதத்தில் இந்தத் துறைமுகமும் மற்றும் அதனை அண்டிய பகுதியில் 54 ஏக்கர் காணியையும் மீன்பிடி நடவடிக்கைகளுக்காக அரச படைகள் விடுவித்தன.

இதற்கமைவாக அந்தப் பிரதேசத்திலிருந்து இடம்பெயர்ந்த மக்கள் மீள்குடியமர்ந்தனர்.

இதனால் மயிலிட்டித் துறைமுகத்தை மீளப் பயன்படுத்துவதற்கு ஏதுவான வகையில் சீரமைப்புச் செய்வதற்கான வேலைத் திட்டங்களைத் துரித கதியில் ஆரம்பிப்பதற்கு அவசியமான செயற்றிட்டங்களை மேற்கொள்ளவேண்டும் என்று தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார விவகாரங்கள் தொடர்பான அமைச்சர் என்ற வகையில் பிரதமர் ரணில் விக்ரமசிங்க அமைச்சரவைப் பத்திரம் முன்வைத்தார். இந்த யோசனைக்கு அமைச்சரவை அனுமதி வழங்கியது. (ஐ)



# மரண அறிவித்தல்

## திருமதி மேரி யோசேப்பின் சலேஷியஸ்

(ஓய்வு பெற்ற ஆசிரியை)



கன்பொல்லை வீதி, கரவெட்டியைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி மேரி யோசேப்பின் சலேஷியஸ் (ஓய்வு பெற்ற ஆசிரியை) 06.12.2017 நேற்றுக் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற கிறிஸ்தோபர் ரேமன் சலேஷியஸ் (JP) அவர்களின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற அந்தோனிப்பிள்ளை, பிலிப்பாச்சியின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான வரப்பிரகாசம், இசபெல்லா, எலிசபேத்து மற்றும் பிலோமினா, விக்டோரியா ராணி (கனடா) ஆகியோரின் அன்புச் சகோதரியும், ராஜ்குமார் (ஊடகவியலாளர், உதயன் மற்றும் சுடர்ஒளி), சிறாந்தினி (பிரதேச செயலகம், பருத்தித்துறை) ஆகியோரின் அன்புத்தாயாரும், மேரி இமாக்குலேற் (ஆசிரியர், இரத்மலானை இந்துக்கல்லூரி) இன் பாசமிகு மாமியாரும், எவ்லின் துஷானி (இராமநாதன் இந்து மகளிர் கல்லூரி, பம்பலப்பிட்டி), ஜலின் இஷானி (நெல்லியடி மத்திய கல்லூரி), கிறிஸ்டோ துமேஸ் (புனித பேதுரு கல்லூரி, பம்பலப்பிட்டி) ஆகியோரின் அன்பு பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (07.12.2017) வியாழக்கிழமை பி.ப. 2.30 மணியளவில் அவரது இல்லத்தில் இருந்து எடுத்துச்செல்லப்பட்டு, பி.ப 3.00 மணிக்கு கர வெட்டி புனித அந்தோனியார் ஆலயத்தில் இரங்கல் திருப்பலிக்காக வைக்கப்பட்டு பின்பு கரவெட்டி சேமக்காலையில்(கீரிப்பல்லி) நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

கன்பொல்லை வீதி,
கரவெட்டி.

தகவல்:
குடும்பத்தினர்.

# 31ஆம் நாள் நினைவஞ்சலி அழைப்பும் நன்றி நவிலலும்



பிறப்பு: 11.01.1923
இறப்பு: 07.11.2017

கொழும்பை பிறப்பிடமாகவும் அல்வாயை வசிப்பிடமாகவும் கொண்ட

## அமரர் கமலாம்பாள் ஆறுமுகம்

அவர்கள் ஓய்வுபெற்ற, உணவுக்கட்டுப்பாட்டுத் திணைக்களத்தின் களஞ்சியப் பொறுப்பாளர் அமரர். சி. க. ஆறுமுகம் அவர்களின் அன்பு மனைவியும், ஜெகநாதன் (ஓய்வுபெற்ற அதிபர், வேலாயுதம் மகா வித்தியாலயம்), தவநாதன் (முகாமையாளர், முத்துப்பிள்ளையார் வண்ணச்சோலை, மல்லாவி), சிவநாதன் (அதிபர், யா/புற்றளை மகா வித்தியாலயம்), குலநாதன் (வடமராட்சி நல்லொழுக்க நிறுவனம்) கணநாதன் (ஆசிரியர், அல்வாய் இந்து தமிழ்க்கலவன் பாடசாலை) ஜெயலட்சுமி, கமலாதேவி ஆகியோரின் அன்புத் தாயாரும், செல்வரத்தினம், (ஓய்வுபெற்ற உபஅதிபர், வட இந்து மகளிர் கல்லூரி) தில்லையம்பலம், தங்கரத்தினம், கோமளேஸ்வரி, கனகசபாபதி, வசந்தகுமாரி (நூலக உதவியாளர், பிரதேசசபை, கரவெட்டி) சுலோஜனாதேவி ஆகியோரின் அன்பு மாமியாருமாவார்.

கடந்த 07.11.2017இல் இறைவனடி சேர்ந்த அன்னார் எமது குடும்பத்தின் ஒளி விளக்காய்த் திகழ்ந்து, எல்லா வழிகளிலும் எம்மை நெறிப்படுத்திய எமது அன்புத் தெய்வத்தின் இறுதிக்கிரியைகளில் கலந்து கொண்டவர்களுக்கும், தொலைபேசி வாயிலாக துயரைப்பகிர்ந்து கொண்டவர்களுக்கும் ,பத்திரிகைகள் வாயிலாகவும், பதாகைகள் மூலமாகவும், துண்டுப் பிரசுரமாகவும் கண்ணீர் அஞ்சலியாக வெளியிட்டும் மலர் வளையம் வைத்தும் அஞ்சலி செலுத்திய அனைத்து உள்ளங்களுக்கும் எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

அன்னாரின் அந்தியேட்டிக் கிரியைகள் இன்று (07.12.2017) வியாழக்கிழமை கீரிமலைத் தீர்த்தத்தில் நடைபெறும்.

அன்னாரின்ஆத்மசாந்திப் பிரார்த்தனை 10.12.2017 ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் எமது இல்லத்திற்கு அருகில் அமைந்துள்ள ஆழ்வாப்பிள்ளை ஞாபகார்த்த மண்டபத்தில் நடைபெற்று, தொடர்ந்து மதிய போசனமும் நடைபெறும். எனவே இதனை தனிப்பட்ட அழைப்பாக அனைவரும் ஏற்று தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து இந்த நிகழ்வில் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

“கனக வாசா”
அல்வாய் வடக்கு, அல்வாய்.
077 171 0201

மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்,
பூட்டப்பிள்ளைகள்.


இப்பத்திரிகை யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள சிவராம் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 672B கே.கே.எஸ் வீதியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 07.12.2017 இல் அச்சிடப்பட்டுவெளியிடப்பெற்றது.